# பெண்

தொகுதி : 28



"தூக்கியெறியப்பட
முடியாத கேள்வியாய்
உங்கள் முன்
பிரசன்னமாயுள்ளேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

தொகுதி : 28

**2023**

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி
நிலையத்தின் சஞ்சிகை

இல. 4/1, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு.

T.P No. : 065-2223297
Fax No.: 065-2224657
e-mail : suriyaw@slt.lk
suriyawomen1991@gmail.com

## THE WOMAN

A Journal Published by
**Suriya Women's
Development Centre,**

ஆசிரியை:
**விஜயலட்சுமி சேகர்**

முன் அட்டை ஓவியம்
**M.T.F. ருக்சானா**

கணினி வடிவமைப்பு:
**த. சங்கர்**

அச்சகம்:
**வணசிங்க அச்சகம்,
496A, திருமலை வீதி,
மட்டக்களப்பு.**

விலை : 200/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களுடன்...

**2023ம்** ஆண்டு "பெண்" சஞ்சிகைக்கூடாக மீண்டும் தங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. நாம் வாழும் சூழலில் பலப் பல மாற்றங்களை தினம் தினம் நாம் சந்திக்க வேண்டி வருகிறது. அம் மாற்றங்கள் எமது வாழ்வில் ஏதோ ஒரு வகையில் தாக்கத்தை செலுத்திய வண்ணமே உள்ளன. விரும்பியோ விரும்பாமலோ அதன் பாதிப்புக்களில் இருந்து எம்மால் விடுபட முடிவதில்லை.

இவ்வாறான புறக் காரணிகள் எம்மைச் சுழட்டிப்போடும் அதே வேளை, காலம் காலமாக எமக்குள் எம்மால் வளர்க்கப்படும் விழுமியங்களும் எம்மீது தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய படியே உள்ளது. "ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பார்கள். அதேபோன்று இங்கும் அடிபடும் மனிதர்கள் இடையே ஆதிக்க சக்திகள் தங்கள் பாட்டிற்கு தமது ஆதிக்க பரப்புக்களை பெருப்பித்துக் கொண்டே செல்கின்றன.

இவ்வாறான சூழலில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள், சிறுவர்கள். இது அனைவருக்கும் தெரிந்த விடயம். இன்றுவரை அதற்கான தீர்வு கிடைக்காவிட்டாலும் பாதிப்பை குறைப்பதற்கான செயற்பாடுகள் பல மட்டங்களில் நடைபெற்றுக்கொண்டே உள்ளன.

அந்த வகையில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் 'பெண்' சஞ்சிகையானது, தனது கைக்கெட்டிய பார்வைகளை தொடர்ந்து 'பெண்' சஞ்சிகைக்கூடாக பதிந்து வருகிறது. கால இடைவெளிகளில் இச் சஞ்சிகையை நோக்கும்போது இம் மாற்றங்களை அவதானிக்கலாம். கால ஆவணமாக செயற்படும் இச் சஞ்சிகை காலத்தின் கோலங்களையும், அவலங்களையும் ஆவணப்படுத்தி வருவது முக்கிய அம்சமாகும். தற்போது எமது மூச்சுக்கள் மூச்சுக்காய் போராடும் பலஸ்தீனத்தை நோக்குகிறது.

சமநிலை குலையாது மனிதம் வாழும் ஓர் இடமாக இவ் உலகத்தை தக்கவைத்திருத்தல் என்பதில் அனைவரதும் உள ரீதியான பங்களிப்பு முக்கியம். கட்டிடங்கள் சிதையலாம் மீண்டும் எழும்பலாம். ஆனால் திட்டமிட்டே சிதைக்கப்படும் மனித வரலாற்றை கைகட்டி முழு உலகமே பார்த்து இருப்பது நடக்கக் கூடாது. இன்று பலஸ்தீனம் என்பது வெறும் கட்டிடம் அல்ல. அந்த மண் எந்த இரத்தத்தையும் கேட்கவில்லை. மண்ணுக்குத் தேவை சுவாசம். ஓவியை ருக்சானா தனது ஆக்கத்திலும் முன் அட்டை ஓவியத்திலும் இதனை வலியுறுத்துகிறார்.

மனிதம் என்பது மிதிபடும் உலகில், அதிகளவில் மௌனமாய் மிதிபடும் வலிகளாக பாலியல் தொழிலாளிகள், குயர் சமூகத்தினர், மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். இவர்களின் எழுதலுக்காக குரல்கள் பல மட்டங்களிலும் எழும்பும் இவ் வேளையில் "பெண்" சஞ்சிகையின் குரலும் அவற்றுடன் இணைந்து பலத்த அதிர்வலைகளை உருவாக்கி அனைத்து மட்டத்திலும் மாற்றங்களை கொண்டுவர உதவ வேண்டும்.

**- ஆசிரியை**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


- பொருளாதார நெருக்கடியும் பெண்களும்...
- ஒன்றே ஒன்று...
- கடந்து வந்த காலத்தை பார்த்தல்...
- அவரை நீங்கள் பார்த்ததுண்டா?
- பர்தா...
- சக தொழிலாளி...
- துணையான்(ள்)...
- அகத்திலமர்ந்த பேராசான் யோகராசா...
- ஊருக்குத்தான் உபதேசம்...
- நியாய நடை....
- திருக்குறள் கூறும் பெண்ணியம்...
- மலையகத்தின் இன்றைய நிலையும் கடந்தகால சவால்களும்...
- மேய்ப்பனைக் கொன்ற ஆடுகளின் பெயராலேயே...
- படுகுழியினை நோக்கி...
- பெண்ணிலைவாதக் கோட்பாடு...
- அரச(சியல்)யந்திரம்
- கரையைத் தேடி நடந்திடுவோம்...
- இழந்த காலங்கள் இனி வரப்போவதில்லை...
- முக்தா
- என்றென்றும் பலஸ்தீன்...
- எதிர்த்து நில்...




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியும் பெண்களும்

**பெண்களின் உழியத்தை சுரண்டுவதற்காக கொள்ளைக்கார பிரபுக்கள் மீண்டும் வந்துவிட்டார்களா?**



**நியந்தினி கதிர்காமர்**

தற்போது இலங்கையில் ஒரு பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. 1930ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உலகளாவிய பெரும் பொருளாதார வீழ்ச்சியை (The Great Depression) ஒத்த ஒரு நிலையை இலங்கை எதிர்நோக்கியுள்ளது. பொருளியலாளர்களின் பார்வையில் ஒரு நாடு இரண்டு காலாண்டுகளுக்கு மேல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுருக்கத்தை எதிர்நோக்கினால் அதை கடுமையான பொருளாதார மந்தநிலை எனக் கருதுவார்கள். இலங்கையில் கடந்த ஐந்து காலாண்டுகளாக தொடர்ச்சியாக மொத்த உள்நாட்டு உற்பத்தி பூச்சியத்திற்கும் குறைவாக சுருங்கியுள்ளது.

இலங்கையின் பொருளாதார விழ்ச்சியின் உச்சக்கட்டத்தை 2022ஆம் ஆண்டில் நாம் அனுபவித்தோம். அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடுகள் மற்றும் விலைவாசி உயர்வு மக்களின் அன்றாட வாழ்க்கையை முடக்கிப் போட்டது. தற்போது இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார மீட்சிப் பணிகள் சாதாரண உழைக்கும் மக்களை படுகுழிக்குள் தள்ளிவிடும் முறையில் உள்ளது. மேலும் இளம் தலைமுறையினர் இடையே கல்வி மற்றும் போசாக்கு நிலைகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள், பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பல ஆண்டுகள் நீடிக்கக்கூடிய அபாயத்தை சுட்டிக் காட்டுகின்றது.

**பொருளாதார மீட்சியும் சர்வதேச நாணய நிதியமும் (IMF)**

பொருளாதார நெருக்கடி உக்கிரம் அடைந்ததால் 2022ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை தனது வெளிநாட்டு கடன்களை செலுத்த முடியாது என்று அறிவித்தது. இலங்கையின் வெளிநாட்டு கடன் சுமை 52 பில்லியன் டாலர்களாக பெருகியது. இதில் அதிகமான கடன் தொகை மேலைத்தேய தனியார் நிதி நிறுவனங்களுக்கு கொடுக்க வேண்டிய கடன். அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடன்(IMF) இலங்கை அரசாங்கம் ஒரு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டது. இது இலங்கை IMFன் கடன் உதவியைப் பெறும் 17ஆவது தடவையாகும்.


IMFன் கடன்கள் ஏராளமான நிபந்தனைகளுடன் கூடிவருவதால் வறிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மேலதிக நோவை கொண்டு வருவதாகவே உள்ளது. IMFஉடன் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடுவதற்கும் முன்பே ஆழமான சிக்கன கொள்கை முறைகளை விக்ரமசிங்க - ராஜபக்ச அரசாங்கம் கடைப்பிடிக்கத் தொடங்கியது. அரசின் வரவு-செலவுத்திட்டக் கொள்கைகளை கட்டுப்படுத்தல் மற்றும் சட்டங்களை மாற்றியமைப்பதற்கான நிபந்தனைகளை அரசு தற்போது செயல்படுத்தி வருகின்றது. பொதுச் சேவைகளுக்கான அரச செலவினத்தையும் மானியங்களையும் வெட்டுதல், மறைமுக வரிகளை அதிகரித்தல், அரச உடைமைகளை தனியார்மயப்படுத்தல் மற்றும் குறுகிய இலக்கு வைத்த சமூக பாதுகாப்பு திட்டங்களை முன்வைத்தல் போன்ற IMF நிபந்தனைகளை அரசாங்கம் அமுல்ப்படுத்தியுள்ளது. நெருக்கடியின் ஒட்டுமொத்த அபாயங்களையும் இலங்கையின் உழைக்கும் மக்களின் மேல் சுமத்துவதாகவும், அவர்களை மேலதிக சுரண்டலுக்கு உள்ளாக்குவதாகவும் உள்ளது. இதில் பெண்கள் அதிகளவு பாதிக்கப் படுகின்றனர்.

**சர்வதேச நாணய நிதியமும் பெண்களும்**

பேரின பொருளாதார கொள்கைகள் பால்நிலை நடுநிலைத்தன்மை கொண்டதாக முன்வைக்கப்பட்டாலும் அவை பால்நிலை ரீதியான பிரதிபலிப்புகளை உள்ளடக்கியதாகவே இருக்கின்றது என ஆரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலம்: மத்திய வங்கி

காலத்திலிருந்தே உலகளாவிய தெற்கிலுள்ள பெண்ணிலைவாதிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். குறிப்பாக உழைக்கும் வர்க்கப் பெண்களின் வாழ்க்கைகளை அவை அதிகமாக பாதித்திருக்கிறது.

உதாரணமாக, 1978ஆம் ஆண்டில் இலங்கையில் அமுல்ப் படுத்திய கட்டமைப்புச் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் எனப்படும் IMF மற்றும் உலக வங்கியின் அழுத்தத்தினால் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் பெண்களின் உழைப்பை மற்றும் அவர்களின் வாழ்க்கையை முக்கியமான விதங்களில் மாற்றியமைத்தது. தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் கீழ் பெண் விவசாயிகளை அவர்களின் நிலங்களில் இருந்து வெளியேற்றி விட்டு அந்த நிலங்கள் பாரிய வெளிநாட்டு விவசாய கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் கிராமிய பொருளாதாரத்தில் பெண்கள் அதிகப்படியாக தொழில் புரிந்த குடிசைக்கைத்தொழில்கள் மற்றும் கைவினைஞர் கைத்தொழில்கள் என்பவைக்கு அரசினால் கிடைக்கப்பெற்ற முதலீடுகள் மற்றும் பாதுகாப்பு நீக்கப்பட்டது. இதனால் பெண்களுக்கு இருந்த தொழில்வாய்ப்புகள் கிராமிய பொருளாதாரத்தில் இல்லாமல் போயின.

வேலைவாய்ப்புகளை தேடி பெண்கள் கிராமங்களில் இருந்து நகர்ப்புரங்களில் அமைக்கப்பட்ட ஏற்றுமதி வர்த்தக வலையங்களை நோக்கியும், வீட்டுப் பணியாளர்களாக வெளிநாடுகளை நோக்கியும் நகரத் தொடங்கினார்கள். இவ்வகையாக பெண்களின் ஊழியத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பல தசாப்தங்கள் கடந்த பின்பும் ஊழிய சட்டங்களை மதிக்காத சூழ்நிலையிலும், குறைந்தளவு சம்பளத்திற்கு அதிகளவான வேலைச்சுமையை தாங்கிக்கொண்டும் வாழவேண்டிய நிலைக்கு பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர். மேலும் பெண்களின் உடல், உள, பாலியல், சுகாதாரம், ஓய்வு மற்றும் சமூக உறவுகள், அவர்கள் வாழும் இடங்கள் யாவும் முதலாளிகளால் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்ட நிலை உருவாகியுள்ளது. தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக பெண் ஊழியர்களின் கூட்டுத்தொழிற் சங்க நடவடிக்கைகளும் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

**பெண்கள் ஊழியப்படையில் பங்குபற்றும் வீதம்**

இலங்கையில் IMFன் நடவடிக்கைகளின் வரலாற்றை நோக்கும் போது, பால்நிலை ரீதியாக எதிர்மறையான ஒரு தாக்கத்தையே பெண்கள் மீது செலுத்தியிருப்பது வெளிப் படையாக தெரிகின்றது. இந்த சூழ்நிலையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக பெண்களின் ஊழியப்படை பங்குபற்றும் வீதத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நிபந்தனையை IMF முன்வைத்துள்ளது. பெண்களுக்கு பயன் அளிக்காத நவ தாராளவாதக் கொள்கைகள் நாட்டினுள் உருவாக்கிய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு பெண்களின் உழைப்பையே அவர்கள் மீண்டும் நாடுகின்றனர். IMFன் இந்த நிபந்தனையை ஒரு சிலர் முற்போக்கான பெண்ணிலைவாத கோரிக்கையாக சித்தரிக்க முயல்கின்றனர். ஆனால் IMFன் அடிப்படை நோக்கம் வெளிநாட்டு தனியார் முதலீடுகளை பாதுகாப்பதே ஒழிய, இலங்கையரின் வாழ்வாதாரத்தை பேணுவதல்ல என்பதை அவர்கள் உணர மறுக்கின்றனர். பெண்களின் ஊழியப்படைப் பங்களிப்பை அதிகரிக்க நாடுவது நெருக்கடியின் மத்தியில் பெண்களின் ஊழியத்தை குறைந்த சம்பளத்திற்கு மீண்டும் சுரண்டுவதற்காகவே.

மேலதிகமாக, IMF இனால் பரிந்துரைக்கப்படும் சிக்கனக் கொள்கைகள் மற்றும் கட்டமைப்புச் சீர்திருத்த நிகழ்ச்சிகள், பொருளாதார சிக்கலின் தாக்கத்தை ஊதியப் பொருளாதாரத்தில் இருந்து ஊதியமற்ற, பராமரிப்பு பொருளாதாரத்திற்குள் தள்ளிப்போடுகின்றது. பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட எரிபொருள், சமையல் வாயு, உணவு, மருந்து போன்றவற்றின் தட்டுப்பாடுகளும் அதிகூடிய விலை உயர்வுகளும், மேலும் தொடர்ச்சியான மின்சார வெட்டுகளும் அளவுக்கு அதிகமாக பெண்களின் மீதும் வீட்டுப் பொருளாதாரத்திலும் பாரிய அழுத்தம் செலுத்தியது. இரண்டு மடங்காக அதிகரித்த வட்டி வீதத்தினால் அடகு வைக்கப்பட்ட தங்கநகைகள் உட்பட வீட்டு கடன்களின் விலை அதிகரித்துள்ளது. உணவுப் பாதுகாப்பின்மை, பிள்ளைகளிடையே போசாக்குக் குறைபாடு மற்றும் வீட்டு வன்முறை போன்றவை மனதைக்கலைக்க வைக்கும் அளவிற்கு அதிகரித்துள்ளன. பெண்கள் அதிகப்படியாக ஈடுபடும் பராமரிப்புப் பொருளாதாரச் சுமை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் IMF இனால் முன்வைக்கப்பட்ட, உலக வங்கியினால் வடிவமைக்கப்பட்ட அஸ்வசுமா எனப்படும் குறுகிய இலக்கு வைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டம் தாமதமாக அமுல்ப்படுத்தப் பட்டதோடு, பல்வேறுபட்ட குறைபாடுகளையும் உள்ளடக்கிய திட்டமாகும். நாட்டில் வறுமைநிலை இரண்டு மடங்காக அதிகரித்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட பாதிப்புக்களைச் சந்திக்கும் மக்கள் நாட்டின் சனத்தொகையில் அரைவாசியாக அதிகரித்துள்ள தருணத்தில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அஸ்வசுமா திட்டம் பாரிய தோல்வியாக மாறியுள்ளது. இதனால் பெண்கள் எதிர்நோக்கும் சுமை மேலும் அதிகரித்துள்ளது. பொருளாதார விளிம்பு நிலையில் இருக்கும் பெண்களுக்கு ஒரு வகையில் உறுதுணையாக இருந்த சமூர்த்தித் திட்டம் எதிர்காலத்தில் முற்றாக நீக்குவதற்கான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**பொருளாதார சுரண்டலில் இருந்து பெண்களுக்கு விடுதலை**

1977இல் இலங்கைக்கு நவதாராளவாத கொள்கையை அறிமுகம் செய்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் திறந்த பொருளாதாரத்தை நிறுவியபின் கொள்ளைக்கார பிரபுக்களை வரவேற்கின்றோம் என்று கூறியதாக வரலாற்றுச் சான்றுகள் பதிவிடுகின்றன. பொருளாதார நெருக்கடியின் மத்தியில் அவர்கள் மீண்டும் பெண்களின் உழைப்பை சுரண்ட வந்துவிட்டார்கள் போல் உள்ளது. இவ்வகையான சுரண்டலிலிருந்து பெண்கள் எவ்வாறு விடுதலை பெறலாம்?

2022ல் தாங்க முடியாத அளவிற்கு அதிகரித்த வீட்டுச் செலவுகள் மற்றும் வாழ்க்கைச் சுமைகளுக்கு எதிராக வீதி மூலைகளில் அயலவர்களுடன் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்ட சிறு ஆர்ப்பாட்டங்கள், பின்பு காலிமுகத் திடலில் ஆக்கிரமைப்பு கிராமமாகவும் யூலை 9ல் பாரிய போராட்டமாகவும் மாறியது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியில் இருந்து விலகி நாட்டைவிட்டு ஓட நேர்ந்தது. ஆனால், ஜனநாயக பூர்வமான மற்றும் நிராயுதபாணியாக எழும்பிய ஒரு இயக்கம் அரசினால் மிகவும் விரைவாக மிதித்து கட்டுப்படுத்தப்பட்டது.

தற்பொழுது IMFன் ஒவ்வொரு முன்மொழிவுகளும் துரித வேகமாக அமுல்ப்படுத்தப்படுகின்றது. ஆனால் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரம் விழ்ச்சியடைந்த நிலையிலேயே தொடர்ச்சியாக உள்ளது. இலங்கையில் பொருளாதார நெருக்கடி வீட்டின் உள்ளும், குடும்பங்கள் இடையிலும் வந்து நேரடியாக தாக்கும் பொழுதே போராட்டங்கள் ஆரம்பித்தன. இந்த சந்தர்ப்பத்தைப் பெண்ணிலைவாதிகள் முழுமையாக விளங்கிக்கொண்டு, நவதாராளவாத முறைமைக்கு எதிராகவும் பொருளாதார நீதியை நோக்கிய ஒரு பெண்ணிலைவாத எழுச்சிக்கு தயாராக வேண்டிய தருணம் இதுவே!

❖❖❖

# ஒன்றே ஒன்று

பாடல்

மீன் பாடும் தேன் நாடாம் இலங்கை என்று
மீன் அழிவும் மனிதழிவும்
ஒன்றே ஒன்று

மாஞ்சோலை பூஞ்சோலை புளியஞ்சோலை
மன்னர் ஆட்சி அமைத்திருந்த பெரிய சோலை
அடுத்த நாட்டு பணம் மறைத்த பெட்டிச் சோலை
மக்களின் வேதனையை மறைத்த சோலை

மீன் பாடும் தேன் நாடாம் இலங்கை என்று
மீன் அழிவும் மனிதழிவும்
ஒன்றே ஒன்று

கொட்டியா கொட்டியா என்று ஒலித்த சோலை
பொது மக்களை பூட்டி வைத்த மாடிச் சோலை
கோடி கோடியாக கொன்று ஒழித்த சோலை
எலும்பு எண்ணி எண்ணி
அடுக்கி வைத்த பதிவுச் சோலை

மீன் பாடும் தேன் நாடாம் இலங்கை என்று
மீன் அழிவும் மனிதழிவும்
ஒன்றே ஒன்று

**பாடல் பாடியவர் லலிதா**
**எழுதியவர் சுதாமதி**






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்து வந்த
## காலத்தை பார்த்தல்

**காண்பியக் காட்சி 2023**



உலகளவில் பரவலாக அறியப்படும் பெண்ணிலை வாதியும், ஓவியருமான கமலாவாசுகியின் கடந்து வந்த காலத்தை பார்த்தல் காண் பியக்காட்சி, மட்டகளப்பு லேடி மனிங் டிரைவில் (சென் செபஸ்த்தியார் ஆலயத்திற்கு அண்மையில்) 2023.04.05 அன்று தொடங்கி, ஐந்து நாட்களாக நடைப்பெற்று வருகின்றது.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் தற்போது மட்டக்களப்பினை வசிப்பிட மாகவும் கொண்ட கமலா வாசுகி, கலைச்செயல்வாதமாக தன்னுடைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் முக்கியமானவர். குறிப்பாக ஓவியங்கள் வழியான இவரது செயல்வாதங்கள் முக்கிய மானவை.

அந்தவகையில், அவரின் தனிப்படைப்புகளாகவும், கூட்டுச்செயற்பாடுகளாகவும் உருவாக்கம் பெற்றுள்ள கலையாக்கங்கள், காலத்தின், மனிதர்களின் வரலாற்றின் சாட்சியங்களாக விளங்குகின்றன. அவை மறைக்கப்பட்ட, புதைக்கப்பட்ட வரலாற்றின் பல்வேறு பக்கங்களை, உண்மை களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வன்முறையற்ற வாழ்தலை விரும்புகின்ற, வன்முறையற்ற வாழ்வு சாத்தியம் என்பதை நம்புகின்ற, அத்தகைய நம்பிக்கைகளை, விருப்பு களை கலைஇலக்கியங்கள் வாயிலாகவும் வெளிப்படுத்த விரும்புகின்றவர்களுக்கு உறுதுணையாக, வழிக்காட்டியாக கமலாவாசுகி இருப்பதை போல, அவரது ஓவியங்கள், வரலாற்றில் பேசாமலே விடப் பட்ட, மறைக்கப்பட்ட வரலாறு களை பேசுகின்றன. கலைகள் கலைகளுக்கான வரலாற்றை மட்டும் உருவாக்குவதில்லை மாறாக கடந்து வந்த ஒவ்வொரு பொழுதுகளிலும், சந்திக்க நேர்ந்தவைகளதும், சந்தித்தவர் களினதும் பகிர்வுகளை, நினைவுகளை பதிவுகளாக்கி கூட்டுவரலாற்றை பேசவிளை வன. அத்தகைய தொரு ஒட்டுமொத்த தவற விடப்பட்ட வரலாறுகளை திரையிடுகின்றன வாசுகியின் ஓவியங்கள்.

மார்க் மாஸ்டரின் வழி காட்டுதலில் கலையாக்கங் களை பயில ஆரம்பித்த வாசுகி யின் ஆரம்பகால கலையாக்கங் களில் தொடங்கி இற்றைவரைக் குமான வாசுகியின் பெண்ணி லைவாத கருத்தியல்களோடு ஒன்றித்து போன பலபரிமா ணங்களிலான ஓவியங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. யன்னலில் தீட்டப்பட்ட ஓவியம் தொடங்கி, மார்க் மாஸ்டரின் தத்ரூபமான ஓவியமும், மரச்செதுக்கல்களும் முன்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கடந்து வந்த காலத்தில் மூன்று தசாப்தகால போர்ச்சூழலில் சொல்லாத செய்திகளை வாசுகியின் ஓவியங்கள் சொல்லு கின்றன. "என் குழந்தை போருக்கல்ல" "கிருஷாந்தி குமாரசாமி" "வெசாக் 2000" "இரவு சாப்பாடு" "கொக்கட்டிச் சோலை படுகொலை" இவையெல்லாம் மறைக்கப்பட்ட வரலாற்று பக்கங்களின் கோடுகளாகின்றன.

தமிழர் வரலாற்றில் வீரம் கொண்டாடப்பட்ட இடங்களில், போர்ப்பறை கேட்டு தன்மகனை போர்க்களம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி, முதல் நாள் போரில் தன் அண்ணனையும், இரண்டாம் நாள் போரில் தன் கணவனையும் இழந்த தாயொருத்தி அனுப்பி வைக்கிறாள் என்பதாக சொல்லி வீரத்தாய் எனும் போர்வையில் தாயின் அவலம் சொல்லாமலே விடப்பட்ட இடங்கள் ஏராளம். அப்படி மறைக்கப்பட்ட தாய்மார்களின் அவலக்குரல் வெளிப்பாடாகின்றது வாசுகியின் என் குழந்தை போருக்கல்ல ஓவியம். தனிதனி மனிதர்களின் பிறப்பு தொடங்கி அவர்களின் வாழ்நாள் முழுதுமான காலம் வரை தனிதனியாக அவரவர் விருப்பும் தெரிவும் அவரவர்பாற்பட்ட நிலையில், குழந்தைகளை பெற்ற தாயை விடுத்து மற்றவர், குழந்தை தொடர்பாக உரிமை கொண்டாடுவதும் குழந்தை தொடர்பாக தீர்மானம் எடுப்பதும் சாதாரணமாகிய நிலையில் வாசுகியின் என் குழந்தை போருக்கல்ல இந்த உரிமை கோருதல்களையும் தீர்மானம் எடுத்தல்களையும் கேள்விக்குட்படுத்தியிருக் கின்றது.

இப்படி தனது ஆசிரியரின் வழிக்காட்டுதல்களில் பல்வேறு ஊடகங்களின் வாயிலாகவும் கலையாக்கங்கள் செய்யத் தொடங்கிய வாசுகியின் பல்வேறு கலையாக்கங் களும் தனிநபராக வாசுகியின் பயணப்படுதல்களையும், அந்த பயணப்படுதல்களில் அவரின் ஓவியங்களில் ஏற்பட்ட எண்ணிறைந்த மாற்றங்களையும் தெளிவாக கோடிட்டிருக் கின்றன. அதேநேரம் அவை வரலாற்றின் சாட்சியங்களாக நின்று, சொல்லாமல் விடப்பட்ட வரலாறுகளை சொல்லுகின்றன.

பெண்ணிலைவாதியாக வாசுகி பயணப்படுகையில், பெண்ணிலைவாத கருத்தியல்களோடு அவரது ஓவியங் களும் பயணப்படுகின்றன. இயற்கையும் வாழ்வும், இயற்கையும் பெண்ணும் என்பதாக அவரின் ஓவியங்கள் பல மத்தியக்கூடத்தை வர்ணமயமாக்குகின்றன. குறிப்பாக இயற்கையோடு ஒன்றித்து வாழுதல், ஆதிக்க கரங்களால் சுரண்டப்பட்டு, துண்டாடப்பட்டு மனிதர்களின் வாழ்வும் இயற்கையுடனான வாழ்தலும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள நிலையில், வாசுகியின் ஓவியங்களில் தீட்டப்பட்டுள்ள, இலைகள், பூக்கள், பாம்புகள், மீன்கள் எல்லாம் இயற்கையு டனான வாழ்தலின் சாத்தியத்தின் வெளிப்பாடுகளாகவே அமைந்துவிடுகின்றன.

இவற்றோடு வாசுகியின் கருத்துரு ஓவியங்கள், பௌத்த மதத்தின் பெயரில், சிங்கள பேரினவாதிகளால் இழைக்கப்பட்ட அநீதிகளின் வெளிப்படுத்துகைகளாகவும், உள்நாட்டு யுத்தத்தின் வெளிப்படுதல்களாகவும், பேரினவாத அநீதியை பற்றி பேசிய தமிழர்களின் மத்தியில் இருந்த முரண்பாடுகளின் வெளிப்படுத்துகைகளாகவும், கொவிட்கால இடர்பாடுகளின் வெளிப்படுத்தல்களாகவும், இலங்கையின் பொருளாதார நெருக்கடி காலத்தினது வெளிப்படுத்தல்களாகவும், இவையெல்லாவற்றுக்கும் மேலாக காலாதிகாலமாக கலாசாரம், பண்பாடு, சமூக வழமை என்ற பெயரில் பெண்கள் மீது திணிக்கப்பட்டுள்ள



ஆதிக்கங்களை கேள்விக்குட்படுத்துவதான வெளிப்பாடு களாகவும் அமைகின்றன.

இவற்றோடு வாசுகியின் கூட்டு படைப்புகள் பெரும்பாலும், இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பானவையாக அமைந்துவிடுகின்றன. வாசுகியின் பிள்ளையார் பறை, பார்ப்பனர் ஆதிக்கத்தின் விளைவாக கோயில்கள் ஆகம மயப்பட்டபோது, கடவுளர்களுக்கான வாத்தியங்களும் மாற்றீடு செய்யப்பட்டதனை கேள்விக்குட்படுத்துவதாக அமைகின்றது. நிறுவுதற் கலையாக்கமாக அமையும் "முதல் மாதவிடாய்" பெண்கள் மீது குறிப்பாக இந்து மதத்தில் சமூக வழமை, பண்பாடு என்ற பெயரில் நிகழ்த்தப்படும் ஆடம்பரங்களை, வழமைகளை கேள்விக்குட்படுத்துவதாக அமைகின்றன. இவைதவிர வாசுகியின் தொலைபேசி செயலிவாயிலான ஓவியங்கள், அவரின் ஓவியப்பயணப் படுதலின் மற்றொரு பரிமாணத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்தவகையில் கடந்துவந்த காலத்தைப் பார்த்தல் காண்பியக்காட்சி, சொல்லப்படாத வரலாற்றின், சொல்லப் படாத மக்கள் குரல்களின் வெளிப்பாடுகளாக அமைகின்ற அதேநேரம், கால மாற்றம் சமூக மாற்றம் இவற்றிற்கேற்ப வாசுகியின் ஓவிய வெளிக்கொணர்தல்களின் பல பரிமாணங் களின் காண்பியமாகவும் அமைவதையும் அவதானிக்க முடிகின்றது.

**இரா.சுலக்ஷனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவரை நீங்கள் பார்த்ததுண்டா?

அவரை நீங்கள் பார்த்ததுண்டா?
இல்லை,
உங்கள் நினைவிலாவது
அவர் இருக்கிறாரா?
கறுப்பு சட்டையும்
சாம்பல் நிற காற்சட்டையும்
அணிந்து இருப்பார்.
மீசை தாடியுடன் அவர்களுக்கே
உரிய திமிரும் கம்பீரமுமாகவே
காணப்படுவார்.
சூரியண்ணன் கடைக்கு
போகவே ஒரு கலக்கம் இருக்கும்.
என்னை போன்ற சிறார்களுக்கு,
அவரை பார்த்தாலே
தன்னை அறியா ஒரு நடுக்கம்.
தனது ஒற்றை கையினால்
லாவகமாக சாமான்களை
பொதியில் போட்டு தருவார்.
பயமாக இருந்தாலும்
அவரின் ஒற்றை கையையும்
சட்டை கை மடிப்பையும்
கண்சிமிட்டாமல் பார்த்துக் கொண்டே
இருப்பேன்.
அப்பாவின் மறைவில் இருந்தபடி...


கொஞ்ச காலமாக கடையில்
அவர் இல்லை.
திடீர் என்று காணாமல் ஆகிவிட்டார்.
சுட்டு விட்டார்களாம்
என்று பெரியவர்கள் கதைப்பது
அரசல் புரசலாக காதில் விழும்...

அவர் சாமான்களை
பொதி போட்டு தானே தருவார்.
அவரை ஏன் சுட வேண்டும்?
என்னை நானே கேட்டுக் கொள்வேன்.

அது சரி,
தினம் ஒருவரை
சுட்டுக் கொண்டு தானே
இருக்கிறார்கள், இன்று
அவரது முறை போல என
நினைத்துக் கொண்டேன்.

இருப்பினும்,
அவர் சாமான்களை
பொதி போட்டு தானே தருவார்.
அவரை ஏன் சுட வேண்டும்???

- சௌமி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பர்தா

மாஜிதா

**'பர்தா'** இந் நாவல் அனைத்து சமூகத்திற்கும் பொதுவானது. பெண்களது உண்மையான உணர்வுகளை எவ்வாறு மதம் என்ற போர்வைக்குள் சமூகங்கள் மூடி வைத்துள்ளதோ அதற்குள் ஒடுக்கப்பட்ட அனைத்து சமூகப் பெண்களது குரல்களை மாஜிதா "பர்தா" நாவலிற்கூடாக வெளிக் கொண்டு வருகிறார்.

பர்தா' எனும் 3 கறுப்பெழுத்து உள்ளடக்கி வைத்திருப்பது அதனுள் வாழ்ந்து கொண்டிருக்கும் பல பெண்களது அரசியல், வரலாறு, சுதந்திரம், தனித்துவம், ஆழுமை என பல்வேறு அறிவார்ந்த விடயங்களையும் அவர்களது உண்மையான உணர்களையும் ஆகும்.

பர்தா, பெண்களதும், அவர்கள் வாழும் சமூகத்தினதும், உணர்வுகளுடனும் உரிமைகளுடனும் எவ்வாறு தாக்கம் புரிகிறது என்பதையும் கால வரலாறுகளையும் பன்முகப் பார்வைக்கூடாகவும் பல காதாபாத்திரங்களுக் கூடாகவும் நகர்த்தி பதிந்து வைத்துள்ளது.



சுரயா எனும் கதையின் நாயகியின் சந்திப்பை அவரது உணர்வுகளை வெளியிட வேண்டிய அவசியத்தை நாவலின் ஆசிரியை தனது "இக் கதை" எனும் பக்கத்திலேயே கூறி விடுகிறார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் அனைவரும் இறுகிப்போன இதயத்துடன் இருக்கையில் ஒன்றாக இருந்து பிரார்த்தனையில் ஈடுபடுட்டு இதயங்களுக்கு ஆறுதல் அளிக்கும் சந்தர்ப்பத்தில் கதையின் நாயகி சுரயாவை மாஜிதா சந்திக்கிறார்.

அதிலிருந்து கதை தொடங்குகிறது. சுரையா எனும் பெண்ணின் சிறு பராயத்துடன் ஆரம்பித்து சுரயாவின் மகளின் சிறு பராயத்துடன் முடிவடைகிறது இந் நாவல்.

மனிதர்கள் மனிதர்களாகவே பிறக்கிறாரகள். இங்கும் குடும்ப பாசம், சந்தோசம், உறவுகள் என்பதற்கு விதிவிலக்கற்று வரும் சுரயாவின் தந்தை ஹயாத்து லெவ்வையின் பாசம் அவளை தலை முடி வெட்ட சலூனுக்கு அழைத்துச் செல்கையில் புரிகிறது. மகளது ஆசைக்காக "டயானா" கட் வெட்டி மகளது அழகை ரசிப்பதும் அவளது ஆசையின் குதூகலத்துடன் தானும் கலந்து கொள்வதுமாக இருக்கிறரர்.

எனினும் அவரது இப்பாசத்தை எவ்வாறு இந்த 'பர்தா' புரட்டிப் போடுகிறது? என்பதுதான் கதை.

இன்று எமது நாட்டு பொருளாதார நிலமை, குரங்கின் கையில் கிடைத்த அப்பம் போன்றது. அடுத்தவன் தனது கௌரவத்தை நிலை நிறுத்த பெண்களது உடலையே பாவித்தான். இதுதான் உலக வரலாறு. ஈரான் நாட்டுடனான பொருளாதார உடன்படிக்கையின் பின் அவர்களது கொள்கைகள் இங்கு பரப்பப்படுகிறது. அதனுடன் இணைந்து வருகிறது நம் நாட்டிற்கு "பர்தா"

இங்கு புதிதாக வந்த பர்தா ஹபாயா போன்ற ஆடைகள் சமூகத்திற்குள் எழுப்பிய கேள்விகளை இந் நாவலுக்கூடாக ஆசிரியை கொண்டு வருவது எதிர்கால சந்ததியின் சிந்தனைக்கு முக்கியமானதாகும்.

ஆடையின் அன்னியத் தன்மையை உணர்வது, தங்கள் இயல்பான இருத்தலுக்குத் தடையாய் அது அமைவது, நாட்டின் தட்ப வெப்ப சூழலில் தாங்கள் அவதிப்படுவது, கூடாரத்தை தலையில் கவிழ்த்த மாதிரி தாம் அதனைப் பார்ப்பது, அறிமுகமற்ற அதன் பெயரை கஸ்டப்பட்டு பாடமாக்குவது, அனைவருக்குள்ளும் தாம் தனித்தவர்களாய் அவ் ஆடை தம்மை அன்னியப்படுத்துவதாக அவர்கள் உணர்வது..இவ்வாறு அவர்கள் உணர்ந்தாலும் ....

இவர்களது இந்த உணர்வுகள் அடங்கிப்போகும் சந்தர்ப்பங்கள் மதம் எனும் விடயத்திற்கூடாக வருகிறது. இங்கும் அரசியல் எனும் ஆயுதத்தின் மூலம் அது உள் நுழைகிறது. மாவட்ட உறுப்பினரான ஜலால்தீன் எனும் பாத்திரம் பாடசாலையில் இருந்து தனது கொள்கையை ஆரம்பிக்கிறார். ஆசிரியைகளிடம் "ஆம்பிளையலுக்கு முன்னுக்கு புடவையோட நிக்க வெக்கமா இல்லையா" என்று அவர் மூலம் வரும் கேள்வி பெண்கள் உணர்வுகளை கட்டிப் போடுகிறது. இதுதான் காலம் காலமாக அனைத்து சமூகப் பெண்களுக்கும் நடந்தது.

சுதந்திரமாக வளர்ந்து வந்த சுரயாவிற்கு அவளுக்கு அணியக் கொடுக்கும் தாவணி முதலில் கேள்வியை எழுப்புகின்றது. அதன்பின் சமூகத்திற்குள் காலடி எடுத்து வைத்த பர்தாவை ஏற்றுக் கொள்ள அவளது தாய் பீபீ கட்டாயப்படுத்தும் சந்தர்ப்பத்தில் "நீங்க போடல்ல நான் போடனுமா" என்ற அவளது நியாயமான கேள்வி வெடிக்கிறது.

இதையொத்த கேள்வியையே ஏற்கனவே ஹயாத்து லெவ்வை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் ஆசிரியைகளை வலியுறுத்தும் சந்தர்ப்பத்தில் ஆமினா ரீச்சரிடம் சந்திக்கின்றார்.

ஒழுக்கம் என்றால் பர்தா அணிதல் மட்டும்தானா எனும் வாசகர்களது கேள்விக்குப் பதிலாக நாவல் ஆசிரியை தருவது இவ் ஆமினா ரீச்சரை. அவரது தைரியத்தின் முன் ஆழுமையின் முன் நியாயமான கேள்வியின் முன் சுரயாவின் தந்தை ஹயாத்து லெவ்வை தோற்றுப் போகிறார்.

தோற்றுப் போன ஆண்கள் தம் வீரத்தை இன்றுவரை காட்டுவது வீட்டிலிருக்கும் பெண்களில்தான். சுரயா வீட்டிலும் அதுதான் நடக்கின்றது. சுரயாவின் இந்த நியாய மான எதிர் கேள்வியானது, ஏற்கனவே ஆமினா ரீச்சரிடம் இதே கேள்வியால் தலை குனிந்து தோற்றுப்போன ஹயாத்து லெவ்வையின் அவமானத்தை அதிகரிக்க, ஆமினா ரீச்சரில் இருந்த ஆத்திரத்தை மகள் சரயா மீது காட்டுகிறார் ஹயாத்து லெவ்வை. .

பாசமுடன் கை பிடித்து அழைத்துச் சென்ற கையாலேயே மகளுக்கு கொச்சிகாய் உண்ணக் கொடுத்து அதனை அவளது உதடுகளில் அப்பி அவள் துடிக்கையில் தனது கொள்கையை காப்பாற்றிய ஆண் தலைவனாக தலை நிமிர்கிறார்.

மதத்திற்கெதிராக கேள்வி கேட்டவளாக சுரயர இங்கு மிக மோசமாக தண்டிக்கப்படுகிறாள்.

முக்கியமாக மாஜிதா காலங்களையும் அதனூடான அரசியல் நிலமைகளையும் பாத்திர உரையாடலுக்கூடாக தெளிவாக கொண்டு வருகிறார். சலூனில் நடக்கும் உரை யாடலில் "வெளிநாட்டு காரனை முதலீடு செய்ய வைத்து நம்மட நாட்ட விற்றுப் போடுவான்" என்று ஹயாத்து லெவ்வை ஜே ஆர் இன் ஆட்சிக்கு குறை கூறுகையில் "சிறிமாசின் ஆட்சியில நாங்க அரைக் கிலோ சீனி வாங்கவே எவ்வளவு கஸ்டப்பட்டோம்" என்று லியனகே பதில் கூறுவது.... இன்று வரை நமது அரசியல் தலைகள் எல்லாம் ஓரே மட்டைகள் தான் என்னும் உணர்வுகளை தட்டி விடுகிறது.

நாவலில் வரும் ஹயாத்து லெவ்வையின் கூட்டாளி களுக்கு ஓடி ஓடி விருந்து வைக்கும் பீபீ தன்னை பிறேம தாசாவின் மனைவியான கற்பனையில் தான் ஹயாத்து லெவ்வையின் மனைவி ஹயாத்து லெவ்வையின் மனைவி என கூறிக் கொள்ளும் சந்தோச புளுகு... என்றாலும் அவள் கணவனுக்கு நேராக ஒரு சின்ன கேள்வி கேட்டாலும் அவளுக்கெதிராக திரும்பும் ஹயாத்து லெவ்வையின் தும்புத்தடி.... இந்த பாத்திரங்கள் ஊடாக ஆணாதிக்க அரசியலையும் பெண்களை தமது கட்சி அங்கீகாரத்திற்காக இணைக்கும் தலைகளையும் நினைவுக்கு கொண்டு வருகிறார் ஆசிரியை.

இதனுடன் இணைத்து பீபீயை நினைக்கையில் ஆட்டுக் குட்டியை குளிப்பாட்டி மாலை போட்டு பொட்டு வைத்து அறுவைக்கு கொண்டு செல்லும் இந்துக்களின் உயிர் வதைச் சடங்கு கண் முன் விரிகிறது.

நாவலில் வரும் பெண்களது ஆசைகள், அழகுணர் வுகள் கலைகள் என்பனவற்றை ஆசிரியை விபரிப்பதுடன் அது எவ்வாறு பெண்களிடமிருந்து பறிக்கப்படுகிறது என்பதையும் மெது மெதுவாகவாக கொண்டு வருகிறார். எமது சமயங்களில் ஆண்களுக்கான இடத்தையும் பெண் களுக்கான இடத்தையும் தலைமுறை தலை முறையாக போதித்து வருபவர்கள் ஆண்கள். பெண்கள் அழுக்கானவர் களாகவும் சேவகம் செய்பவர்களாகவும் அடங்கிக் கிடக்க வேண்டியவர்களாகவும் உள்ளார்கள்.

இந்துக்களின் புராண கதையில் ஒரு முனிவரின் மனைவி ஒரு அழகான ஆணை அழகானவன் என்று நினைத்த காரணத்திற்காகவே அந்த முனியால் தலை வெட்ட ஆணையிடப்படுகிறாள். இவ்வாறான கதைகளுக் கூடாக பெண்களை தங்களுக்கு அடிமையாக வைத்துக் கொண்டது ஆணாதிக்க சமூதாயம்.

இங்கும் திடிரென முளைத்த அன்னிய நாட்டு இஸ்லாமிய மத கொள்கைகளால் உடைக்கப்படுகிறது பெண்களது அழகுணர்வுகள்.

ஆசையாக குலவை போடும் ஹாஜரா தனது குலவைவை மற்றவர் ரசிப்பதை விரும்புகிறாள். இவளது இந்தக் கலை இவளுக்கான ஆழுமையை வழங்குகிறது. என்னதான் என்றாலும் அவளது மகன் ஆண் என்ற கார ணத்தால் அக் கலையை அவளிடமிருந்து பிடுங்கி எறிந்து அவளை அடக்குகிறான். அதே போன்று அழகுணர்வுடன் அவள் அணியும் அல்லுக் குத்து தோடும் மறைக்க வேண்டும் எனும் கட்டளை அவள் மகனிடமிருந்து பிறக்கிறது. அவனது அதிகாரங்கள் மதம் சார்ந்த விடயமாக்கப்படுவதால் யாராலும் மீண்டும் அக் கலையையோ அவளது அழகு ணர்வையோ அவளுக்கு வழங்க முடியாது போனதுடன் மகனுக்கு எதிராக அந்தத் தாய்க்கும் எதிர்த்து குரல் கொடுக்க முடியாது போகிறது.

அவர்களுக்கான ஆடைகள் பிடுங்கி எறியப்பட்டு விதவிதமான நிறங்களில் 'பர்தா' அணிவதற்கு அவர்களுக்கு கிடைக்கும் அனுமதியை அதற்கான சுதந்திரத்தை ஆசிரியை "இருட்டில் இருந்து கைகால் துளாவி விளையாடல்' போன்றது எனக் குறிப்பிடுகிறார்.

கதையில் வரும் நாயகி சுரயா தர்க்க நியாயத்துடன் பல விடயங்களைப் பார்க்கிறாள் அவளது சைக்கிள் ஓட வேண்டும் எனும் ஆசை பல்கலைகழகத்தில் நிறைவேறுகிறது. காலத்தின் தேவை அனைத்தையும் மாற்றி விடுகிறது.

பெண்களது உழைப்பு தற்போது ஒவ்வொரு வீட்டிலும் தேவை. இதனால் இன்று சில கட்டுப்பாடுகள் தளர்வதை காண்கிறோம். எங்களது முஸ்லிம் தமிழ் சிங்கள சகோதரிகள் குழுவில் உள்ள முஸ்லிம் சகோதரிகள் தற்போது வாகனம் ஓடத் தொடங்கியிருப்பதையும் வீட்டுக்கு அது பல நன்மைகளைக் கொண்டு வருவதால் தங்கள் வீட்டு ஆண்களும் தங்கள் சமூகமும் மறுப்பு தெரிவிக்காமல் இருப்பதைச் சொல்லி சிரிப்பார்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுரயாவைப் போன்று தர்க்க நியாயத்துடன் வாழும் ஆண்களையும் மாஜிதா நாவலில் கொண்டு வருகிறார். கதையில் வரும் பாத்திரம் ஹசன், சுரயாவின் காதலன் இர்பான் போன்றோர் இதற்கு உதாரணங்களாக உள்ளார்கள்.

தர்க்க நியாயத்துடன் இறுதிவரை போராடும் ஹசன் சிறு பராயத்திலேயே பர்தாவை பற்றிய கேள்விகளை தந்தையிடம் கேட்கிறான். ஈரானிய அபுல் ஸனாத் பத்திரிகையில் வரும் "அழகை மறைத்தலும் மறைத்தலின் அழகும்" எனும் கட்டுரை இவனுக்கு பல கேள்விகளை எழுப்புகிறது.

சுரயாவின் காதலனான இர்பான் சுரயாவின் உண்மைகளை ஏற்றுக் கொண்டாலும் சமூகம் சார்ந்த சிறு பயம் அவனிடம் காணப்படுகிறது.

சில நியாயமான எதிர்க் கேள்விகள் மதம் சார்ந்த விடயங்களால் முடக்கப்பட்டு தமது முன்னேற்றத்திற்கான அடுத்த அடியை எடுத்து வைக்க முடியாது தடுமாற்றத்தை தரும் சந்தர்ப்பங்களில் பெண்கள் சில நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறார்கள். மஜ்லித்ஸ் தலைவன் ஹாசிமிடம் ஏன் நீங்களும் "ஜிப்பாய் தொப்பி" போடலாம் தானே என சுரயா எதிர்க் கேள்வி கேட்பதும் இறுதியில் எதுவும் வேண்டாம் நாயைப் பிடி என்பதாக அவனது நிபந்தனையை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழலை ஆசிரியை இப் பகுதியில் குறிப்பிடுகிறார்.

சின்ன சின்ன சம்பவங்களுக்கூடாக பரந்த பார்வையை கொண்டு வருகிறார் ஆசிரியை. இவரது நாவலில் வரும் மோதீனார் அமீன் உரையாடல் பெரிய ஒரு விடயத்தை சுட்டிக் காட்டுகிறது. மோதினார் மதில் சுவரில் ஒட்டியிருக்கும் நோட்டிசை வாசித்துச் சொல்லும்படி 11 வயதான அமீனிடம் கேட்க தனக்கு மதராசாவில் அரபுதான் வாசிக்க சொல்லிக் கொடுத்ததாகவும் தான் குர்ஆனை மள மள வென வாசிப்பேன் என்று தமிழ் வாசிக்க தெரியாத அமீன் பெருமையாக பேசுகிறான்

நான் வாசித்த ஒரு கதையில் ஒரு பிராமணன் படகில் பிரயாணம் செய்கிறான். தனது புலமையின் பெருமையை படகோட்டியிடம் அவிழ்த்து விடுகிறான். "உனக்கு வேதம் ஓதத் தெரியுமா? சமஸ்கிரதம் வாசிக்கத் தெரியுமா..? தெரியாத படகோட்டியிடம் பிராமணண் கூறுகிறான் "நீ உனது வாழ்க்கையில் முக்கால் பகுதியை தொலைத்து விட்டாய் என்று. அப்போது திடீரென வெள்ளம் வந்து படகு கவிழ போகிறது. படகோட்டி அமைதியாக கேட்கிறான் பிராமணணிடம் உங்களுக்கு நீந்த தெரியுமா என்று?

இல்லை என்று கூறிய குடும்பி வைத்த பிராமணனிடம் படகோட்டி கூறுகிறான் 'ஐயா நீங்க இப்போ உங்க வாழ்க்கையின் முழு பகுதியையும் இழந்து விட்டீர்கள் என்று.

இவ்வாறு மோதீனார் அமீன் உரையாடல் ஊடாக கல்வியின் முக்கியத்துவத்தை கொண்டு வருகிறார் ஆசிரியை.

மற்றும் இஸ்லாம் என்பது அல்குர்வானும் ஹதீசும் மட்டுமா எனும் கேள்வி - ஹசன் மௌலவி ரவூப் மௌலவி யிடையே நடைபெறும் சம்பாசனை போன்ற விடயங்களுக் கூடாக இஸ்லாமிய மூதாதையரின் பண்பாடு வழக்காறு, கலாசாரம், போன்றவற்றின் ஆழத்தை மீண்டும் கொண்டு வருகிறார் ஆசிரியை இந் நாவலில்..

கால ஓட்டத்தின் தாக்கத்திற்குட்பட்ட நிலையில் பர்தாவை சுகமாக ஏற்றுக் கொள்ளும் பர்ஹானாவை சுரயா புரிந்து கொள்கிறாள். சுரயாவின் மகளையும் கால ஓட்டம் தொற்றிக் கொள்ள கதை முடிகிறது.

சமூகத்திற்குள் மூடி மறைக்கப்பட்ட பெண்கள் உணர்வுகளை அடிமைத்தனங்களை தூக்கியெறியமுடியாத நியாயமான கேள்விகளை முன்வைத்து சிந்தனைக்கு வித்திடும் 'பர்தா' உரிமைக்காக போராடும் அனைத்து சமூகத்திற்குமான சிறந்த பொது நாவலாகும்..

**- விஜயலட்சுமி சேகர்**

**'பர்தா' நூல் அறிமுக நிகழ்வில் வாசிக்கப்பட்டது**

# நல்ல நல்ல நாடமைத்து...

நல்ல நல்ல நாடமைத்து
நாமும் வாழுவோம்
பகைமையை என்ற வார்த்தையை
நாம்விரட்டி ஓட்டுவோம்
நல்ல நல்ல நாடமைத்து ...
ஒற்றுமையாய் சேர்ந்து வாழ
வழியை ஏற்றுவோம்
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
என்று காட்டுவோம்

நல்ல நல்ல நாடமைத்து ...
நாளும் நாளும் விடியல்ப் பொழுதும்
உதயமாகுமே
நன்றி கூறி சேவல்களும்
உரத்துக் கூவுதே
பாடும் பறவைக் கூட்டங்களும்
சிறகடிக்குமே
இரையைத் தேடி உண்ட பின்னர்
மகிழ்ந்திருக்குமே

நல்ல நல்ல நாடமைத்து .....
சாமான் விலை ஏற்றம் பார்த்து
ஏங்கும் விழிகளே
ஏழைத் தாயின் கண்ணீர் மட்டும்
ஓய்வதில்லையே..
நித்தம் நித்தம் கனவு சுமந்தோம்
வாழ வழியின்றியே
மானுடராய்ப் பிறந்ததினால்
நல்ல நல்ல நாடமைத்து .....

பாடல் பாடியவர் - **விஜயலட்சுமி**
பாடல் எழுதியவர் - **மங்கயர்கரசி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சக தொழிலாளி

- அந்தியூர் ராஜினி

அழகிய ஓவியமாய் அவள் எழும்போது தூரிகை உடைந்ததுபோல் திடுக்கிடலுடன் மன வலி ஏற்படுகிறது. அம்மா, அப்பா, தங்கைமார், தம்பி என கூட்டுக் குடும்ப வாழ்க்கை அது. தந்தை கற்பகதருவாம் பனையது ஏறி பதநீர், குருத்து இலை எடுத்து வர அம்மா ஓலைப்பாய் பெட்டியென இழைத்துவர அழகாய் ஓடிய வாழ்வு. அழகிய மண் சுவர்களும் சாண மெழுக்கு நிலங்களும் திண்ணையும் கொண்ட அழகிய குடில் வீடு. மட்டை வரிச்சுக் கலையுடன் மர நிழல்கள் புடை சூழ இயற்கையுடன் இணைந்த வாழ்வு.

ஒரு கட்டத்தில் ஆக்கிரமிப்பும் அஜாக்கிரதையும் அரங்கேற அவள் வாழ்வு ஆட்டம் காண்கிறது. நாடு துண்டு துண்டாய் சிதறுகிறது. விழுந்து வெடிக்கும் குண்டுகள், பீரங்கி ஓசைகள், புக்கார இரைச்சல்கள், பம்பர் சுப்ப சோணிக் வானை வட்டமிடும். கீழே அழு குரல்கள், இரத்த வாடைகள், அடையாளமற்ற அவயங்கள், அவயங்களை இழந்த உடல்கள், குற்றுயிர் உடல்கள், பற்றி எரியும் மரங்கள், மரக்கிளைகள், இறந்த மாடுகள், பறவைகள்...மக்கள்.

மக்களுக்குள் ஒருத்தியாய் அவளும் அவள் குடும்பமும். இரு பக்க ஆயுதங்கள். போராளிகள் இராணுவம் என. இரு பக்க நெருக்குதல் இடையே உயிர் பிழைத்தால் போதும் என்ற ஓட்டம். எனினும் வீட்டுக்கொரு வீரன் என்ற கட்டளை துரத்துகிறது.. கட்டளைக்குப் பயந்து சிறு வயதில் திருமணம். திருமணத்தில் இணைந்து இரண்டு குழந்தைகளுடன் தனிமையே துணையாக அவள் நான்கு வருடங்கள் ஓடின.

கணவனை கடத்திச் சென்ற ராணுவமே அவனை சுட்டுக் கொன்றது. கணவனை இழந்த வலிகள் அதிகமாக அதிகமாக அவள் பயணம் பாரமாகியது. மூன்று வயது இளைய மகன், ஆறு வயது மூத்த மகள். உணவுக்கு, பராமரிப்பிற்கு என்ன செய்வாள். வெளியே வேலைக்குச் செல்வதானால் குழந்தையை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொறுப்பெடுக்க யாரும் இல்லை. அனுபவத்தில் தெரிந்தது தாய் செய்த தொழில் ஒன்றே. பிள்ளைகள் வளர வளர செலவுகள் அதிகரித்தன. கல்விச் செலவு, உணவுச் செலவு, உடுப்புச் செலவு, போக்கு வரத்துச் செலவு செலவுகள் நீண்டன...கணவன் இருக்கும் போது கூட இருந்த உறவுகள் கைகழுவி கை நழுவிச் சென்றன.

உயிர் வாழ்வதும் பசியுடன் இரவுகளை கழிப்பதும் போராட்டமான தருணத்தில் உதவி செய்ய கணவனின் தம்பி முறையான ஒருவர் வீட்டுக்கு வருவதும் செல்வதுமாக இருந்தார். வருவதும் செல்வதுமாக இருந்த அவர் உணவுப் பொருட்களுடனேயே வருவார். சிறு தொகை பணமும் கொடுத்துச் செல்வார். அதைக் கொண்டு அவள் வாழ்வு நடந்தது.

திடிரென அவன் தனது வரவை நிறுத்தியபோது அவள் கேள்விக்கு பதிலாக அவன் "நான் இங்கு வந்து சென்று என்ன பிரயோசனம் எனக்கு இங்கு ஒரு லாபமும் இல்லை" இவனது பதில் அவளுக்கு குழப்பத்தை கொடுத்தாலும் அது ஏன் என்று புரிந்தது. அவனது விடைக்கு தனது உடலை பதிலாக்கினாள். அவனது நோக்கம் நிறைவேற அவனும் அவளை விட்டுச் சென்றான். அவனது குழந்தை வயிற்றில். கணவன் இன்றி குழந்தை சுமப்பவள் என்று இவளுக்கு பல பெயர்கள் சூட்டப்பட்டன. இவளுடைய பெயரோ பேசு பொருளாகியது. இவள் ஒரு வேசி, விபச்சாரி, யாரோடு போய் பிள்ளை வாங்கினாளோ என்று பல பெயர்கள். எனினும் குழந்தையை சுமந்த தாயாக அவமானம், தோல்வி. அதன் வழியே சென்று பிள்ளையைப் பெற்றெடுத்தாள். தன் உடல் தன் உரிமை. உடலால் சேவை செய்வது என தீர்மானித்த இவள் பாலியல் தொழிலை தேர்ந் தெடுத்தாள். செய்யும் தொழிலே தெய்வம் என அவள் தொழில் அவளுக்கு தேவைகளை நிறைவு செய்தது.

வறுமை, சமூகம், யுத்தம் இவையே அவளுக்கு பாலியல் தொழிலை காட்டியது. ஒரு தரம் பிள்ளைக்கு பாலூட்டும்போது பால் புரக்கேறி குழந்தை இறந்து போனது. குற்றம் சுமத்த காத்திருந்தது சுற்றம். குழந்தையை அவள் கொன்றதாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டாள். அவளுக்கு கேள்வி எனக்கு குழந்தை வேண்டாம் என்றால் கருவிலேயே குழந்தையை அழித்திருப்பேனே எத்தனை கஸ்டங்கள் தாண்டி இக் குழந்தையை நான் பெற்றேன்... சிறைக்குப் பின் இவளது வாடிக்கையாளராகவும் முகவர்களாகவும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், ராணுவச் சிப்பாய்கள், வைத்தியர்கள் என பலர் இருந்தனர்.

குழந்தைகள் வளரத் தொடங்கினர். குழந்தைகளுக்காக படிப்படியாக தொழிலை நிறுத்த வேண்டி வந்தது. எனினும் அவளுக்கு ஊரார் வைத்த பெயர் ஓய்ந்தபாடில்லை. வளர்ந்த பிள்ளைகள் ஊருடன் இணைந்து அவளைக் கண்டித்தார்கள், முரண்பட்டார்கள், ஊர் விட்டு ஊர் சென்றாள். பணத்தேவை ஏற்படும்போது தொழில் செய்வதும் பின்பு பிள்ளைகளுடன் வாழ்வதுமாக இருந்தாள்.

இப்போது பேரப் பிள்ளைகளுடன் கூட்டுக் குடும்பமாக வாழ்கிறாள். எனினும் அவளுக்கொரு கேள்வி நான் ஒரு மனைவியாக இருந்தபோதும், கூலித் தொழிலாளியாக வறுமையில் வாடியபோதும் தாயாக இருந்தபோதும் என்னைப் பற்றி பேசாத, கவலைப்படாத சமூகம், நான் ஒரு பாலியல் தொழிலாளியாக வாழ்ந்த போது பேசுகிறது.. இவளது கேள்வி தொடர்ந்து கொண்டே உள்ளது. தொழிலாளர் வர்க்கத்தில் தானும் ஒரு சக தொழிலாளிதான் என்பதில் இவள் பெருமையும் கௌரவமும் கொள்கிறாள்.

❖❖❖

பாரதத்தை
பஞ்சம் தாக்கிய வேலை
கடல் தாண்டி கப்பலில்
வந்தடைந்தோம்.
தேங்காய்க்கும், மாசிக்கும்
ஆசைப்பட்ட கூட்டம் - என்று
ஏளனமாக
சிரிக்கும் கூட்டம்
இன்றும் இருந்து
கொண்டுதான் இருக்கிறார்கள்
ஆனால் பஞ்சம்
பிழைக்க வந்த
கூட்டம் தான்
இன்று இலங்கையை
பச்சை தேசமாக
மாற்றியது மறவாதே...!
வெட்ட வெளியிலும்
அட்டை கடியிலும்
கொட்டும் மழையிலும்
பாடுபடும் என்
இனத்தின் தலையெழுத்து
மாறாதா...?

நன்றியுடன்
பச்சிலை காதலி
**நிலுக்சி**



புரியாத நலன்புரி ?
மணிக்கணக்காய் காத்திருந்தேன்
மக்கள் வங்கி அருகினிலே
நலன்புரி திட்டம் என்ற பெயரில்
என் நம்பிக்கையை இழந்து விட்டேன்.....

காத்திருந்து காத்திருந்து
பெற்றோலும் கிடைக்கவில்லை

**- பாத்திமா நுஸ்கி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணையான்(ள்)

## குறும்பட விமர்சனம்.

இக்குறும்படம் பத்து நிமிடங்களைக் கொண்டது. கதைக்கரு மற்றும் தயாரிப்பு தமிழினி சித்திரவடிவேல். இக் குறுந்திரைப்படத்தில் முதல் கட்டத்தில் தன் மகளுக்காய் காத்திருக்கின்றனர். பட்டம் பெற்று வரும் மகள். அப்போது அக்கதை மெல்ல அவர்களின் கதைக்குள் நகர்கின்றது. சக்கரநாற்காலியில் உள்ள ஆண் மோட்டர் பைக்கிள் வந்து இறங்கும் ஒரு ஆண் உரையாடல் தொடர்கின்றது. வந்த ஆண் தன் நண்பனைக் காதலிப்பதாகக் கூறுகின்றான். இதனை ஏற்கமுடியாமல் ஆரம்பத்தில் மறுத்த நண்பன் பின்னர் திருமணம் செய்ய சம்மதிக்கின்றான். அப்போது, தான் பெண்ணாய் மாறி வரும்வரை காத்திருக்கும் படி கூறிச்செல்கின்றான். பின் சில வருடம் கழித்து சந்திக்கின்றனர். தன்னை பெண்ணாய் மாறி வரும் போது சகி என பெயர் அறிமுகம் செய்யப்படுகின்றது. ஆணின் அண்ணனின் குழந்தையை இவர்கள் வளர்க்கின்றனர். அக் குழந்தைதான் வளர்ந்து பட்டம்பெற்று வந்துள்ளது. குடும்பமாய் சந்தோசப்படுவதாக கதை முடிவடைக்கின்றது. இக் குறுந்திரைப்படத்தின் பாத்திரங்களான தாய், மகன். மனைவி, மகள் நான்கு பாத்திரங்களும் தாங்கள் தோன்றும் காட்சிகளில் தங்களது பாத்திரத்தினை பதியவைக்கின்றனர்.

இன்றைய சூழலில் பொழுது போக்கான வர்த்தக (Commercial) சினிமாக்களின் படையெடுப்பு அதனை விஞ்சும் சின்னத் திரை உலகம் போன்றவை சமூகத்தில் பண்பாட்டு அசைவுகளின் முன்னேற்றத்தின் அல்லது ஆக்கபூர்வமான புரிதலை வளர்ச்சிகளை கேள்விக்குள்ளாக்கி வரும் சூழலில் துணையான்(ள்) குறுந்திரைப்படம் தமிழ்ச்சமூக வாழ்தலில் நின்று ஆக்கபூர்வமான சமூகப் பிரச்சனையான குயர் (மாற்றுப்பாலினர்) தொடர்பான உணர்வு ரீதியான பிரச்சனைகளை முன்னிறுத்தியுள்ளது. ஒரு ஆணும் இன்னொரு ஆணும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்யலாமா? சமூகம் எப்படிப் பார்க்கும் போன்ற கேள்விகளை யதார்த்த மனநிலையில் நின்று அணுகியுள்ளது. குயர் சமூகத்தினர் சமூகத்தில் சாதாரண மனிதராய் வாழவேண்டியவர்கள். நாங்கள் சாதாரண மனிதர்கள் என்னும் கருத்தினை பதியவைக்க முயலுகின்றது. அதற்கேற்ற வண்ணம் ஒவ்வொரு பாத்திரங்களும் தங்களின் பாத்திரத்திற்கேற்ற நடிப்பினை வெளிப்படுத்தியுள்ளார்கள். சினிமா மொழியில் கமராவின் மொழி என்பது முக்கிய மானது. பாத்திரங்களின் எதிர்மறைத்தன்மைகளை மனப் போராட்டங்களை கமரா வெளிப்படுத்தி உள்ளது. அதே வேளையில் சில காட்சிகளில் தவறியும் விடுகின்றது. குறிப்பாக ஆரம்பக்காட்சியில் இருவரும் பேசும் காட்சியில் ஆணினை முதன்மைப்படுத்துவதாய் முக்கியப்படுத்துவதாய் வெளிப்படுத்தியுள்ளது. மற்றொரு காட்சியில் காத்திருந்து இருவரும் சந்திக்கும் longshot காட்சியில் ஒரு பெண்ணாக தன்னை மாற்றி வரும் சந்தோசம், காத்திருந்த உணர்வுநிலை என்னும் மனஉணர்வுகளை கமரா வெளிப்படுத்திய விதம் முக்கியமானது. அத்துடன் ஆரம்பக்காட்சியில் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று மாணவியாய் வந்து தன் பெற் றோரைச் சந்திக்கும் காட்சியில் தந்தையின் முகபாவனை மிகவும் கனதியானது. ஆனால் அதற்கு இசைந்த ஒரு வெளிப்பாடு மகளின் பாத்திரத்தில் எங்கோ இல்லாமல் போகிறது. ஏன் என எண்ணத்தோன்றுகின்றது.

மிகவும் ஆழமான கதைக்கரு, அக்கதைக்கருவினை காட்சிப்படுத்துவது சவாலானது. அதனை கமரா மொழி சாத்தியப்படுத்தியிருக்கிறது. கதையில் சில இடைவெளிகளை காணலாம். தாயும் மகனும் திருமணம் பற்றி பேசும் காட்சியில் மகன் குயரை திருமணம் செய்வதனை ஏற்காமல் பின்னர் அதனை ஏற்பது என்பது கடுகதியில் இடம்பெற்ற மாற்றம் போல் இன்னும் நடிப்பதற்கான கூறுகள் இருந்தும் அதனை தவறவிட்ட காட்சியாக காணப்படுகின்றது. இதனை ஆரம்பக் காட்சிகளிலும் காணலாம். நாற்சக்கர நாற்காலியில் இருக்கும் ஒரு ஆண் என்னடா ஒரு ஆண் ஒரு ஆணை திருமணம் செய்யலாமா எனக் கேட்பதும் கன்னத்தில் அறையும் தாயும் நாம் வாழும் சமூகத்தில் பிரதிபலிப்புகள். இவர்கள் இன்னும் சமூகக் கண்னோட்டத்தினை சமூக முரண்பாடுகளை வெளிப்படுத்தியிருக்கலாம் என்னும் எண்ணம் எழுகின்றது. குறும்படத்தின் இசை என்பது அந்தக் காட்சியின் அசைவுகள் ஏற்படுத்தும் ஒலியின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. காட்சியினை இடைஞ்சல் செய்யாமல் நகரும் பின்னணி இசை என்பது இங்கு வலுசேர்க்கின்றது. குயர் சமூகத்தினை சாதாரண மனிதராய் உணரவைக்கும் முயற்சி முக்கியமானது. சமூகம் தன் பண்பாட்டு வரையறைகளில் பெண், ஆண் என்னும் இரு பாலினரை முக்கியப்படுத்துகின்றது. குயர் சமூகத்தினர் இத்தகைய பண்பாட்டு நடவடிக்கைகளின் வெளிப்பாடு களிலிருந்து புறந்தள்ளப்படுகின்றனர். ஏனெனில் சமூகம் இச் சமூகத்தினரை அங்கிகரிக்கவில்லை என்பதே உண்மை யாகின்றது. இத்தகைய வாழ்வியல் முறையில் இக்குறும்படம் பெரும்சிந்தனையை முன்வைக்கின்றது. அத்துடன் இது சமூகமட்டத்தில் உரையாடப்பட வேண்டிய ஒரு விடயம் என்னும் தேவையையும் உணர்த்துகின்றது.

சகி, மாற்றுத்திறனாளி அல்லாத ஆணை திருமணம் செய்து வாழ்வதாய் ஏன் இக்குறும்படம் காட்டவில்லை என்ற கேள்வி எழுகின்றது. ஆண் தன் நண்பர் குயர் என அறிந்ததும் ஆரம்பத்தில் மறுக்கின்றார். பின்னர் என்னை விட உன்னை யாரால் பார்க்க முடியும். என்னும் உரையா டலில் ஒரு மாற்றுத்திறனாளியை பார்ப்பதற்கு யாருமில்லை. என்பதால் காதலை ஏற்பதாக ஒரு வாசிப்பினை இக் காட்சி ஏற்படுத்துகின்றது. அதேபோல் ஆண் தாயிடம் பேசும் போது தாய், தந்தை இல்லாத குழந்தை, தாய்க்குப் பின்னர் மாற்றுத்திறனாளி மகனை சிறு குழந்தையை பாதுகாக்க இருவரின் தேவைகளை நிறைவுசெய்ய முடியாது, வேறு பெண்ணை திருமணம் செய்தால் இந்தக் குழந்தையை ஏற்பார்களா என தாயை சமாதானப்படுத்தும் உரையாடல் மூலம் குழந்தைப் பாதுகாப்பு. தன் பாதுகாப்பு இது சாதாரண பெண்கள் ஒப்ப மாட்டார்கள் எனவே நான் அவளை திருமணம் செய்கின்றேன் என்னும் மனப்பதிவினை ஏற்படுத்துகின்றது.

அத்துடன் ஆரம்பத்தில் ஆரம்பக்காட்சியில் குயர் பாத்திர அறிமுகம் என்பது ஒரு ஆளுமையான பாத்திரப் படைப்பாக அறிமுகம் செய்கின்றது. ஆனால் இப்பாத்திர அறிமுகத்தின் தொடர்ச்சி முடிவுவரை வளர்த்தெடுக்கப் படவில்லை. இருவரின் உரையாடலில் குயர் பாத்திரம் தன் காதலின் ஆளுமையை வெளிப்படுத்தத் தவறுகின்றது. அத்துடன் திருமணமாகி தன் மகளுக்காய் காத்திருக்கும் காட்சியில் தன் குடும்பத்திற்காய் தன்னை அர்ப்பணிக்கும் ஒரு பெண் எமக்கு காட்டப்படுகின்றாள். இது சாதாரண ஒரு பெண்ணாய் வாழும் ஒரு குயர் வாழ்தலினை சொல்ல முனைந் திருக்கலாம். ஆனால் குழந்தையை கணவரை பாதுகாக்கவும் அவர்கள் வாழ்வதற்காய் தன்னை அர்ப்பணித்தலும் பெண்கள் வாழ்வியல் பண்பாடாய் கட்டமைக்கும் ஆண்நிலை கருத்துக்களின் அமைவான ஒரு பெண் பாத்திரமாக படைக்கப் பட்டிருப்பதனை அக்காட்சி வெளிப் படுத்துகின்றது.


துணையான்(ள்) ஒரு சிறந்த படைப்பு. சமூக வாழ்வியலில் முக்கியமாக பேசப்பட வேண்டிய கருத்தினை ஆழமாகவும் நிதானமாகவும் ஒவ்வொரு காட்சியும் பேசுகின்றது. இத்தகைய குறும்படங்கள் பல சமூகங்களிலும் பல உரையாடலுக்கு கொண்டு செல்லப்பட வேண்டியவை. ஏனெனில் நாம் வாழும் சூழலை ஆக்கபூர்வமான சமூகமாய் மாற்றுவதற்கும் அனைவரும் அவர்களுக்கான உரிமையுடன் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்கான பொறுப் பினை பார்ப்பவருக்கு உணர்த்துகின்றது.

**- கலாவதி கலைமகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்திலமர்ந்த பேராசான் யோகராசா...



"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்"

**நா**ம் எத்தனையோ மனிதர்களுடன் பழகி இருக்கிறோம். அவர்களுள் ஒருசிலர் மட்டுமே எம் நெஞ்சத்தைவிட்டு நீங்காது இருப்பர். அத்தன்மை வாய்ந்தவர்களுள் ஒருவரே பேராசிரியர் செ.யோகராசா அவர்கள். 1992இல் க.பொ.த உயர்தர தமிழ்ப்பாட செயலமர்வில் இவரை முதல்முதல் சந்தித்து உரையாடினேன். அப்போது அவர் கூறிய வார்த்தை 'உங்கட கவிதைகளை நான் வாசித்திருக்கிறேன். தொடர்ந்து எழுதுங்கள்' என்பதுதான். அதன்பின் இலக்கிய விழாக்களில் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. அப்போதெல்லாம் எனது கவிதைகளைப்பற்றி கருத்துக் கூறுவார்.

இவ்வாறு தமிழ்ப்பாடத்துறை, இலக்கியத்துறை தொடர்பாக நேரிலும் தொலை பேசியூடாகவும் எங்கள் உறவு தொடர்ந்தன. 1997இல் 'இன்னும் விடியவில்லை' எனும் கவிதை நூலுக்கு அணிந்துரை பெறுவதற்காக அவரின் வீட்டுக்குச் சென்றேன். அப்போது இரண்டு கவிதை நூல்களைத்தந்து வாசிக்கும்படி கூறியதுடன் சிறந்த புதுக்கவிதைக்குரிய அம்சங்கள் பலவற்றையும் தெளிவுபடுத்தினார். அவரது ஆலோசனையின்படி நான் எழுதிய கவிதைகளை தொலைபேசியூடாக வாசித்துக் காட்டுவேன். எத்தனையோ வேலைப்பழுக்களின் மத்தியிலும் என்கவிதைகள் பற்றிய கருத்துகளை தெரிவிப்பார். க.பொ.த உயர்தர தமிழ்ப்பாட விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணிக்குச் செல்கின்ற வேளைகளில் அவரை சந்திக்கும் சந்தர்ப்பங்களை பெரும்பேறாகப் பெற்றிருக்கிறேன். தந்தையானவன் தன் பிள்ளைகளுக்கு இனிப்புப் பண்டங்களைச் சுமந்துவந்து கொடுப்பது போன்று மதிப்பீட்டுப்பணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்வேளையில் தனது கைப்பையினுள் புத்தகங்களைச் சுமந்துவந்து எனக்குத் தருவார்.

இன்னுமோர்நாள் அவரது வீட்டுக்கு சென்ற வேளையில் 'ஈழநாட்டுப் புலவர்கள் எனும் ஒரு புத்தகத்தைத் தந்து இதில் உங்களது ஊரைச்சேர்ந்த புலவர் வில்லியம் பிள்ளை பற்றிய குறிப்புகள் உள்ளன. வாசித்துப் பாருங்கள்' என்று தந்தார். அதைவாசித்து அதிலுள்ள தகவல்களை குறிப்பெடுத்துக் கொண்டேன். அவரின் தூண்டுதல் காரணமாக 'செங்கதிர்' எனும் சஞ்சிகையில் 'புலவர் வில்லியம்பிள்ளை' எனும் தலைப்பில் ஒரு கட்டுரையும் எழுதினேன்.

வாசிப்பே அவரின் உயிர்மூச்சு. தானும் வாசித்து பிறரையும் வாசிக்கத் தூண்டும் ஒரு ஒளிவிளக்கு அவர். மரபுக்கவிதைகள் மட்டும் எழுதிவந்த என்னை புதுக்கவிதை எழுதத்தூண்டியவர். அவரின் ஆசீர்வாதத்துடன் மரபுக் கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் இணைத்து 2015இல் 'விடைதேடி' எனும் கவிதைத்தொகுதியை வெளியிட்டேன். அதற்கு கிழக்குமாகாண 'சிறந்தநூல்' பரிசும் கிடைத்தது.

மட்டக்களப்பு 'சூரியா' பெண்கள் அமைப்பானது, 2010இல் பெண் கவிஞர்களின் கவிதைகள் சிலவற்றை 'கவிதைகள் பேசட்டும்' எனும் தொகுப்பில் மும்மொழிக ளிலும் வெளியிட்டது. அதில் நானெழுதிய 'சக்கரம்' எனும் கவிதையும் இடம்பெற்றது. அக் கவிதையை நல்லகவிதை என அடிக்கடி குறிப்பிட்டுக் கூறுவார்.

சேர் அவர்கள் நல்ல கவிதை எனக்கூறிய அக்கவிதை, கொழும்பில் நடைபெற்ற ஆய்வரங்கிலும் சிறந்த கவிதை என ஆங்கிலமொழியில் வாசிக்கப்பட்ட நிகழ்வை கொழும்பில் இருந்த வண்ணமே தொலைபேசியில் என்னுடன் உரையாடி மகிழ்ந்தார். அவரின் செயல்கள் எதைத்தொட்டுச்சொல்வது? எதை விட்டுச்செல்வது?

சிறுகதை என்றால் அவருக்கு மிகவும் பிடிக்கும். 'சிறுகதை எழுதுங்கள் ஜெகா' என்று அடிக்கடி கூறுவார். நானும் சிறுகதை எழுதும் ஆவலில் 'பரிசு' எனும் தலைப்பில் ஒரு சிறுகதையை எழுதி அவருக்கு அனுப்பினேன்.

வாசித்துவிட்டு அதிலுள்ள நிறை குறைகளை தொலைபேசியில் எடுத்துரைத்தார். நானும் அவைகளைத் திருத்திக் கொண்டேன். சேர் அவர்களின் வழிகாட்டலில் திருத்திய அச்சிறுகதைக்கு மாவட்டமட்ட இலக்கியப்போட்டி யில் முதலாம் பரிசு கிடைத்தது. நான் பெரிதும் மகிழ் வடைந்தேன்.

எங்கெங்கு புத்தக வெளியீடு நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் அதிதியாக அமர்ந்திருப்பார் யோகராசா சேர் அவர்கள். கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், திருமலை போன்ற தொலைதூர இடங்களுக்குக்கூட பேருந்திலேயே பயணம் செய்வார். அவரின் பயண நேரங்களே புத்தக வாசிப்பு நேரமாக இருந்தது. இவ்வாறு அதிகளவு புத்தகங் களை வாசித்து முடித்தார்.

இதயத்தைப் பிழிந்த இறுதி நிகழ்வொன்று. கடந்த வருடம் கார்த்திகை மாதம் 08ஆம் திகதி மகள் சுவஸ்தியுடன் எனது வீட்டுக்கு வந்திருந்தார். முகமும் பாதங்களும் சற்று வீக்கமுற்றிருந்தன. தம்பிலுவிலில் அமைந்திருக்கும் ஆயுர்வேத வைத்திய சாலைக்குச் சென்று மருந்து எடுக்க வேண்டும் என்று கூறினார். நானும் அவர்களுடன் சென்று மருந்து எடுத்துக்கொண்டு வந்தோம்.

அவரது பாதங்கள் என் திருவதிகை இல்லத்தில் பதிந்தமையும் மதியவேளையில் ஒருபிடிச்சாதம் அவருக்கு வழங்கியமையும் நான் செய்த பாக்கியம் என்றே கூறுவேன். அவர் செல்லும்போது 60 சிறுகதைகள் அடங்கிய சுதாராஜ் எழுதிய 'உயிர்க்கசிவு' எனும் புத்தகம் ஒன்றைத் தந்துவிட்டுச் சென்றார்.

சுகவீனமுற்ற வேளையிலும் எனக்குத் தருவதற் கென சுமந்துவந்த அப்புத்தகத்தில் உள்ள கதைகளை வாசித்துக் கொண்டிருந்தேன். இங்கிருந்து சென்று இரண்டு நாட்களின் பின் உடல் பரிசோதனைக்காக கொழும்புக்குச் சென்றார். அன்றுமுதல் தினமும் காலையில் சேரின் உடல் நிலைபற்றி தொலைபேசியில் உரையாடுவேன்.

மார்கழி ஏழாம்நாள் என் மார்பில் இடிவீழ்ந்ததை ஒத்த செய்தியொன்று எனது செவிக்கு எட்டியது. காலையில் அவருடன் கதைத்த எனக்கு மதியம் கிடைத்த செய்தி காலன் அவருயிர் கவர்ந்திட்ட செய்தி. கதறி அழுதேன். கண்ணீர் விட்டேன். கால்கள் சோர்ந்தேன். அவர் நினைவிலிருந்து மீள அதிகநேரம் பிடித்தது எனக்கு. அன்று இரவுப் பொழுது எனக்கு சூரியன் அஸ்த்தமனமாகாப் பொழுதாகவே கழிந்தது. ஆனால் அஸ்த்த மனமாகிவிட்டார் சேர்.

பேராசான். யோகராசா சேர் அவர்கள் எனக்கீந்த புத்தகத்தின் இறுதிக்கதையான 'உயிர்க்கசிவு' எனும் கதையை மார்கழி ஏழு காலைப்பொழுதில் நான் வாசித்துக் கொண்டிருந்த வேளையில் அவரின் உயிரும் கசிந்து கொண்டிருந்தது என்பதை நான் பின்புதான் உணர்ந்தேன். சிந்தையை விட்டகலா சேர் அவர்களின் மரணச்செய்தி கேட்ட அன்றிரவு அவரின் நினைவுப்பதிவுகளை கவிதையாக வடித்து ஞானம் சஞ்சிகைக்கு அனுப்பினேன். அக்கவிதை ஜனவரி இதழில் வெளியானது. இவ்வாறு என் இலக்கியத்துறையுடன் இரண்டறக்கலந்த தமிழ்த்துறைப் பேராசான் மதிப்புக்குரிய செ.யோகராசா சேர் அவர்கள் என் அகத்தில் இடம்பிடித்த வாடாமலர் ஆவார்.

இரங்கல் வெண்பா.

இலக்கியத்தால் என்னோ டிணைந்திட்ட பேராசான்
இவ்வுலக வாழ்வறுத்துப் போனார். - அவரின்
பிரிவெனக்கு சோகத்தை ஈந்தாலும் ஆத்மா
பிரியாது ஈசனடிசேரும்.

**- தம்பிலுவில் ஜெகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், இதுதான் மருந்து, புதிய கண்டுபிடிப்பெல்லாம் கிடையாது, ஒருதடவை சொன்னா சொன்னதுதான், இந்த பாடலை ஒவ்வொருவரும் எழுதி வைத்து கொள்ளுங்கள், எக்காலத்திலும் உதவும்,

**இப்பாடல் அருந்தமிழ் மருத்துவம் 500 என்ற பாடலில் இருந்து எடுக்கப்பட்டது**

சித்த மருத்துவர் பாக்கம் தமிழன்
தமிழ் மருத்துவ அறிவுரைப்பா

மூளைக்கு வல்லாரை
முடிவளர நீலிநெல்லி
ஈளைக்கு முசுமுசுக்கை
எலும்பிற்கு இளம்பிரண்டை

பல்லுக்கு வேலாலன்
பசிக்குச் ரகமிஞ்சி
கல்லீரலுக்கு கரிசாலை
காமாலைக்கு கீழாநெல்லி

கண்ணுக்கு நந்தியாவட்டை
காதுக்கு சுக்குமருள்
தொண்டைக்கு அக்கரகாரம்
தோலுக்கு அருகுவேம்பு

நரம்பிற்கு அமுக்குரான்
நாசிக்கு நொச்சிதும்பை
உரத்திற்கு முருங்கைப்பூ
ஊதலுக்கு நீர்முள்ளி

முகத்திற்கு சந்தனநெய்
மூட்டுக்கு முடக்கறுத்தான்
அகத்திற்கு மருதம்பட்டை
அம்மைக்கு வேம்புமஞ்சள்

உடலுக்கு எள்ளெண்ணை
உணர்ச்சிக்கு நிலப்பனை
குடலுக்கு ஆமணக்கு
கொழுப்பெதிர்க்க வெண்பூண்டே

கருப்பைக்கு அசோகுபட்டை
களைப்பிற்கு சீந்திலுப்பு
குருதிக்கு அத்திப்பழம்
குரலுக்கு தேன்மிளகே!
விந்திற்கு ஓரிதழ்தாமரை
வெள்ளைக்கு கற்றாழை
சிந்தைக்கு தாமரைப்பூ
சிறுநீர்க்கல்லுக்கு சிறுகண்பீளை

கக்குவானுக்கு வசம்புத்தூள்
காய்ச்சலுக்கு நிலவேம்பு

விக்கலுக்கு மயிலிறகு
வாய்ப்புண்ணிற்கு மணத்தக்காளி

நீர்க்கோவைக்கு சுக்குமிளகுநீர்
நீரிழிவிற்கு ஆவாரைக்குடிநீர்
வேர்க்குருவிற்கு பனைநுங்குநீ
வெட்டைக்கு சிறுசெருப்படையே

தீப்புண்ணா குங்கிலியவெண்ணை
சீழ்காதுக்கு நிலவேம்பு
நாப்புண்ணிற்கு திரிபலாவேலன்
நஞ்செதிர்க்க அவரிஎட்டி

குருதிகழிச்சலுக்கு துத்திதேற்றான்
குருதிகக்கலுக்கு இம்பூரல்வேர்
பெரும்பாட்டிற்கு அத்திநாவல்
பெருவயிறுக்கு மூக்கிரட்டை

கக்கலுக்கு எலுமிச்சைஏலம்
கழிச்சலுக்கு தயிர்சுண்டை
அக்கிக்கு வெண்பூசனை
ஆண்மைக்கு பூனைக்காலி

வெண்படைக்கு பூவரசு கார்போகி
விதைநோயா கழற்சிவிதை
புண்படைக்கு புங்கன்சீமையகத்தி
புழுகுடற்கு வாய்விளங்காமணக்கு

கால்வெடிப்பா மருதாணிகிளிஞ்சல்
கரும்படை வெட்பாலைசிரட்டை
கால்சொறிக்குவெங்காரபனிநீர்
கானாகடிக்கு குப்பைமேனிஉப்பே


உடல்பெருக்க உளுந்துஎள்ளு
உளம்மயக்க கஞ்சாகள்ளு
உடல்இளைக்க தேன்கொள்ளு
உடல் மறக்க இலங்கநெய்யே

அருந்தமிழர் வாழ்வியலில்
அன்றாடம்சிறுபிணிக்கு
அருமருந்தாய் வழங்கியதை
அறிந்தவரை உரைத்தேனே!!

பாடலை அனுப்பியவர்
**சி. ஜெயசங்கர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊருக்குத்தான் உபதேசம்...

**மா**ற்றுதிறனாளியாகிய நாங்கள் கடந்த காலங்களாக பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வாறம். அதில் முக்கியமானது எங்களுக்கான போக்குவரத்து வசதி. எங்களது போக்குவரத்தை நாங்களே மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதால் ஏதோ ஒரு வாகனத்தையும் இயக்கி நாங்களும் இயங்குகிறோம்.

ஆனால் எங்களுக்கு எங்களது உடல் நிலைக்கு ஏற்ற மோட்டார் வாகன சாரதி அனுமதிபத்திரம் இதுவரையும் கிடைக்கல்ல.

குறிப்பாக பொதுப் போக்குவரத்து வாகனங்களில் அதிகமான பிரச்சனைகள நாங்கள் எதிர் கொள்ளுறம். வாகனங்களில் ஏறுவது, இறங்குவது, பஸ்களில சீட் கிடைக்காதது என பலவகையான பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வாறதால் எங்களது தன்னம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு தனியாக இயலுமான வாகனங்களை ஓட்டுவதற்கு முடிவெடுத்து தற்பொழுது ஓடிக் கொண்டிருக்கிறம். வெளிநாடுகளில் மாற்றுதிறனாளிகளுக்கு கிடைத்திருக்கும் வாகனம் ஓட்டும் உரிமைகள பாக்கும் போது, எங்களுக்கும் மோட்டார் சைக்கிள் ஓடுவதற்கு சாரதி அனுமதி பத்திரம் கிடைக்காதா என்ற எதிர்பார்ப்புடன் ஜனாதிபதி வரைக்கும் சந்தித்திருக்கிறம். ஆனால் எல்லாமே பூச்சியம் தான்.

இலங்கையில இருக்கிற மாற்றுதிறனாளிகள் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதி பத்திரத்தை பெற்றுக் கொள்ளுவதில் பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டே தான் இருக்கிறம். பல அதிகாரிகள் சந்தித்திருக்கிறம் பேசியிருக்கிறம். எங்களுக்கு இதுவரையும் நிரந்தர தீர்வு கிடைச்ச மாதிரி இல்ல.

எனக்கு அன்மையில் நடந்த சம்பவம் ஒன்று இது. மட்டக்களப்பு மைதானம் ஒன்றில் போக்குவரத்து சபையால் நடமாடும் சேவை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதுக்கு முதல் நாட்களில் அரச அலுவலகர் கூப்பிட்டு வாகன அனுமதி பத்திரம் தொடர்பாக இப்படியான ஒரு நிகழ்வு நடைபெற போகின்றது என்று அதற்கு பொறுப்பாக அலுவலகர்கள் சேர்ந்து எங்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வு ஒன்றை வழங்கினார்கள்.

"அண்டைக்கு கட்டாயம் வாங்க. உங்களுக்கு முதல் இடம் கொடுக்கிற வகையில உங்கட பெயர் விபரங்கள் அங்கு வழங்கப்படும். அங்க நீங்க லைன்ல (Line) எல்லாம் காத்திருக்க தேவையில்ல" எண்டு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சொல்ல நாங்க பெரிய ஒரு நம்பிக்கையோடையும் பெரிய எதிர்பார்ப்போடையும் "இன்டையோட எங்கட பிரச்ச னைக்கு ஒரு தீர்வு கிடைக்கும்" என்ட சந்தோசத்தோடையும் அனேகமான மாற்று திறனாளிகள் நாங்கள் போயிருந்தம்.

ஆனா அங்கு போய் பார்த்தபோதுதான் தெரியும் அந்த நடமாடும் சேவை என்பது எங்களுக்காக இல்லை. நான் எதிர்பார்த்தது எல்லாம் அந்த நடமாடும் சேவை கொழும்பில இருந்து முக்கியமாக எங்களுக்குத்தான் வருகுது என்று. ஆனா அங்கு போய் பாத்தா மாற்றுத் திறனாளிகள் வெயிலிலையும், வீல் சியாரிலையும், ஊன்று கோலோடை யும் அந்த மைதானத்திற்குள்ள உட்காந்திருந்தார்கள். மாற்றுத்திறனாளி அல்லாதவர்கள், ஏற்கனவே வாகனம் செலுத்தி கொண்டிருக்கின்றவர்கள், சாரதி அனுமதி பத்திரம் முடிந்தவர்கள், அல்லது பறி போனவர்கள் ...இது போன்ற விடயங்களுக்குத்தான் டோக்கன் கொடுத்து நடைபெற்றதே தவிர எங்களுக்கு அங்க எந்த இடத்திலையும் இடம் கிடைக்கவில்லை.

நான் மூன்று தடவை போய் நிண்டு நிண்டு பாத்தன். எனக்கு நிக்கவும் ஏலாது போனது மற்றது ஆக்க ளுக்குள்ள பூந்து டோக்கன் எடுக்கவும் ஏலாது போனது. அலுத்துப் போய் வீட்ட போனன். என்றாலும் மற்றய மாற்றுத் திறனாளி நன்பிகள் கோள் எடுத்துக் கொண்டே இருந்தார்கள், "நாங்களும் வந்து மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் எடுக்கலாமா" என்று... இது எங்கள் போன்றவர் களுக்கு முக்கியமான விடயம், மற்றது போண் எடுப்பவர்க ளுக்கும் பதில் சொல்ல வேண்டி இருந்ததால் மறுபடியும் போனன்.

போய் நிறைய நேரம் வரிசையில காத்திருந்தன். உண்மையா என்னால வரிசையில நிக்க முடியா. ஆனா கட்டாயம் சாரதி அனுமதிப் பத்திரம் தேவை. நிறைய நேரம் போன பிறகு மூன்று மணியிருக்கும் டொக்டர் (Doctor) ஒராள் அந்த அறைக்குள்ள இருந்து வந்து என்ட அடையாள அட்டையை வேண்டினா. பிறகு உள்ளுக்குள்ள வர சொல்லி உள்ள போய் நிறைய ரெஸ்ரிங் (Testing) செய்தாங்க. ரெத்தம் எடுத்தாங்க, உயரம் பாத்தாங்க, நிறை பாத்தாங்க, கஸ்டமா இருந்தாலும் இது மெடிகல்தானே இப்படித்தான் இருக்கும் என்று எல்லாத்தையும் பொறுத்து இருந்தன். கடசியில டொக்டர் 'உங்களுக்கு தர முடியாது' என்றா.

இவ்வளவு நேரம் மினக்கெட்டு கஸ்டப்பட்ட எனக்கு இப்படி ஒரு பதில்!

அப்ப நான் சொன்னன் "நாலு வருசமாக 49CT எண்டு ஒரு மோட்டார் பைக் ஒடிக் கொண்டிருக்கிறன். அதுக்கு மட்டும் எனக்கு ஒரு அனுமதிப்பத்திரம் தாங்க" எண்டு.

நான் தயவா கேட்ட பிறகு என்ன இன்னொரு மேல் இடத்துக்கு அனுப்பினாங்க நான் என்ட நிலமை எல்லாம் சொன்னன். "நான் ஒரு விதவை, எனக்கு மகன் ஒராள் இருக்கிறார், அவர் பாடசாலை போறார், மகன ஏத்த வேணும் இறக்க வேணும், என்னுடைய வேலைகளை கவனிக்க வேணும், இதை நான் ஓடினாதான் நான் சாப்பிடலாம். இந்த நிலமையை கருத்தில் கொண்டு இந்த மோட்ட சைக்கிள் மட்டும் ஓட எனக்கு அனுமதி தாங்க" என்டு எல்லாத்தையும் கதைச்சன். மேலதிகாரி சொன்னா "ஓட்டோக்கு தரலாம். காருக்கும் தரலாம் என்றா. ஆனா நான் வந்தது மோட்ட சைக்கிள் லைசனுக்குதானே...நிறைய நேரம் காத்திருந்ததால எனக்கு என்ன செய்யிற என்டே தெரியல்ல. போதாததுக்கு 1500 ரூபா காசையும் கட்டி Medical எடுத்துத்தன். மெயினில போய் கதைக்கட்டாம் என்றாங்க.

மெயினுக்கு போனன் அங்கயும் இதே பதில்தான். அதுக்கும் மேல பெரிய ஒபிசர் இருக்காராம் அவரிட்ட போகட்டாம் என்டாங்க. அன்டைக்கு அங்க நடந்த சம்பவம் இன்னும் என்னால மறக்க முடியல்ல. அத என்னால கதைக் கவே முடியாது. சரி என்டு உள்ளுக்க போனா சுற்றிவர அதிகாரிமார் இருந்தாங்க அதுக்குள்ள ஒரு லேடி (Lady) மட்டும் தான் இருந்தா.

உள்ள நான் போனன். உள்ள போக "என்ன" என்டு கேட்டாங்க. நான் Doctor இடம் கதைச்ச அதே பிரச்சனைய அவரிட்டையும் சொன்னன். அப்ப அவர் என்ன எழும்ப சொல்லி போட்டு ஒரு காலில நிக்க சொன்னாரு, நான் நின்டன். இதயெல்லாம் ஏற்கனவே டொக்கர் என்ன செக் பண்ணி பாத்திற்றா. இவர் மீண்டும் செக் பண்ணி பாக்க வேண்டிய அவசியம் உண்மையிலேயே இல்ல. ஆனாலும் என்ன செய்யிற நாங்க ஒரு காரியத்த பெற்று கொள்ள வேணும் என்டா அந்த இடத்தில எங்கள தாழ்த்தியே ஆக வேணும் என்டத்துக்காக ஒரு காலில் நிக்க சொன்னாரு நிண்டன். ஆனா மற்ற காலில நிக்கிறது எனக்கு கஸ்டம். இருந்தும் முயற்சி செய்து நின்டன். விழப்பாத்தன் ஆனா காட்டி கொள்ளல்ல. என்னால இயன்றளவு நின்டன். அவர் என்ன கால எடுக்க சொல்லல்ல. நானே கால எடுத்துத்தன். நான் அவருக்கு எதிர நின்றன். அவர் என்ன பார்த்து அவருக்கு அடுத்த பக்கத்தால கூப்பிட்டாரு "இஞ்சால வாங்க" என்டு நான் அவருக்கு பின் பக்கத்தால போனன். என்ன இப்படியே வைச்சி இழுங்க என்டாரு. அதுவும் ஏலாத இந்தக் கையால.

உண்மையிலையே ஆண்டவரிட கிருப என்டுதான் நான் நம்புறன். எலும்பில்லாத இந்த கையால 4 வருசமா பைக்(Bike) ஓடுறன் ஒரு அக்சிடண்டும் (Accident) நடக்கல்ல. நான் ஓடுறதே மட்டக்களப்பு Town க்குள்ள காத்தான்குடிக் குள்ள. இதுவரைக்கும் எங்கையும் யாருக்கும் பிரச்சனையா தொந்தரவா நான் இருந்ததே இல்ல. அவர வைச்சி இழுக்க சொன்னாரு என்ன செய்யிற எல்லாத்தையும் தாண்டி அவர வைச்சி இந்த கையால இழுத்தன் என்னால முடியல்ல கை சரியா வலிச்சது. அப்ப நான் சொன்னன் "நீங்க சரியா டம்பிடிச்சி இருக்கிறீங்க சேர் நான் எப்படி உங்கள வைச்சி இழுக்கிற" என்று.

உடனே எழும்பினாரு எழும்பித்து சொன்னாரு அதே கதிரைய தூக்கட்டாம் என்டு. அது இரும்பும் மரமும் சேர்ந்த கதிரை ஒரு கிலோ பொருள் கூட நான் இந்த கையால தூக்க மாட்டன். இருந்தும் அந்த கதிரைய இந்த கையால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல தூக்கினன். மேல தூக்கித்தன் என்னால கீழ வைக்க முடியாது (பேச முடியாது தொண்டை இறுகி இப் பெண் கொஞ்ச நேரம் அழுகிறாள். நீர் கொடுத்து அமைதியான பின் தொடர்ந்தாள்.) என்னால கீழ வைக்க முடியாததால உடனே சடார் என்டு கதிரைய கீழ போட்டன். உடனே சொன்னாரு "பரவால்ல கெட்டிகாறிதான், நான் உங்களுக்கு லைசன் தாறன்" என்டாரு. அப்ப நான் முழுக்க நம்பினது அவர் எனக்கு மோட்டார் சைக்கிள் லைசன் தாறாரு என்டுதான். தங்கியு (Thank you) சொல்லி போட்டு லைசன வேண்டித்து வந்தன். நிறைய கஸ்டப்பட்டாலும் கிடைச்சித்தே என்ற நினைப்பு ஆறுதலா இருந்தது.

அங்க வைச்சி எதையும் பாக்கல்ல. அவ்வளவு கவலையும் கஸ்டமும். வீட்ட போய்தான் நான் வாசிச்சு பார்த்தன் எனக்கு ஆட்டோ (Auto) ஓடுறத்துக்கான அனுமதியதான் அவர் எழுதியிருந்தார். அங்க வைச்சி எல்லாரோடையும் எண்ட நிலமையை கதைச்சனான் திரும்ப திரும்ப கேட்ட கேள்விகளுக்கு பொறுமையா பதில் சொன்னன். "கடை வைச்சனான், இப்ப ஆறு மாதமா எனக்கு எந்த வித வருமானமும் இல்ல, அன்றாடம் சாப்பிட கூட வழியில்லாம தான் நான் இருக்கிறன், நீங்க சொல்லுற மாதிரி காருக்கு ஆட்டோக்கு தான் லைசன் தரலாம் என்டா எப்படி நான் ஆட்டோவை, காரை எண்ணி பாக்கிற. வேற பைக் (Bike) வேண்ட மாட்டன். அதுக்கும் எனக்கு வசதியில்ல. இருக்கிற இந்த பைக்குக்கு (Bike) ஒரு அனுமதிய தாங்க" என்டுதான் கேட்டனான். வீட்ட போய் பார்த்த பிறகு தான் எனக்கு இன்னும் சரியான வேதனையா இருந்தது. (மீண்டும் அழுகிறாள்.)

போண் எடுத்த எங்கட மற்றய மாற்றுத்திறனாளிகளுக்கு சொன்னன் "நீங்க அங்க போய் அலைய தேவயில்லை. அங்க எதுவுமே நடக்காது" என்டு. போக இருந்தாக்களையும் நான் போகவிடல்லை. எங்களுக்கு எங்க சூழ்நிலைக்கு நாங்க செய்யிற தொழிலுக்கு ஏற்ற மாதிரி மோட்டார் வாகன சாரதி அனுமதி பத்திரத்தை கூட இந்த நாட்டில பெற்று கொள்ள முடியாது என்டா நாங்க எல்லா வகையிலையும் புறக்கணிக்கபடுறம். நாங்க உயிர் வாழுறதையே விரும்புறாங்க இல்ல எங்களமாதிரியான மாற்றுத் திறனாளிகள் இருக்க கூடாது என்டதத்தான் அதிகாரிமார் நினைக்கிறாங்க.

எங்கள அதிகாரிமார் மதிக்கிறாங்களே இல்ல. நான் திரும்ப திரும்ப சொன்னன் "நான் ஒரு விதவை, மிகவும் கஸ்டப்படுறன், ஒரு நேரம் கூட சாப்பிட எதுவும் இல்ல, அப்படியான சூழ்நிலையிலதான் போய் கொண்டிருக்கன், பிள்ளய படிப்பிக்கனும், (அழுகிறாள்) எனக்கு ஆட்டோ வேண்ட, கார் வேண்ட நினைக்கவும் முடியாது". எனக்கு பைக்கிற்கு லைசன் தாறன் என்டு சொல்லி போட்டு ஆட்டோ சாரதி அனுமதி பத்திரத்தை தந்து ஏமாற்றினவங்க அந்த இடத்தில்ல. உண்மைய என்னட்ட சொல்லியிருக்கலாம். "இல்லம்மா உங்களுக்கு இல்ல" என்று டொக்டர் சொன்ன மாதிரி அவர் சொல்லியிருக்கலாம். நான் அவ்வளவு நேரம் அவரிட்ட செலவழிச்சிருக்க தேவையில்லை. அவர் கதிரைய இழுக்க சொல்லியிருக்க தேவல்ல. நான் அப்பவே வேணாம் என்டு போட்டு வந்திருப்பன். நான் லைசன்ச அவடத்த வைச்சி பாத்திருந்தா நான் உண்மையா திருப்பி குடுத்து போட்டு வந்திருப்பன்.

வீட்ட வந்து திரும்ப போவம் என்டு யோசிச்சன். பிறகு எனக்கும் அவருக்கும் வித்தியாசம் இல்லாம போயிருமே என்டு நான் போகல்ல. கவலை வந்தா அழுது தீப்பன். யாரோடையும் பகிர்ந்து கொள்ள மாட்டன். ஒரு மணித்தியாலமா அழுதன். இருந்தும் என்னால முடியல்ல யாரோ ஓராளிட்ட சொல்லனும் போலவே இருந்தது. உடனே அக்காக்கு கோள் (Call) எடுத்து கதைச்சனான்.

இப்படி ஒரு அநியாயம்தான் எனக்கு அந்த இடத்தில்ல நடந்தது. நான் இப்ப கேட்கிற எல்லாம் நாங்க இதுவரைக்கும் வாகனம் ஓடுறம் தானே எங்கையாவது ஏதாவது Case இருக்கா என்டு பாக்கட்டுமே, இத்தனை வருசமா நாங்க ஓடுறம்தானே நாங்க என்னத்துக்கு ஓடுறம் என்டத பாக்கட்டுமே, எங்கட நிலமையில சாரதி அனுமதி பத்திரம் என்டது கட்டாயம் தேவை. தரமாட்டம் என்டா தரமாட்டம் என்டு சொல்லுற விதத்தில சொல்லியிருக்கலாம். எங்கள இப்படி அலைக்களிக்காம.

அரச அலுவலகர்கள் சரியான முறையில தகவல தந்திருக்க வேணும். அவ்வளவு நேரம் வரிசையில வைச்சி மெடிக்கல எங்களுக்கு தந்திருக்கவே தேவையில்லை. ஏற்கனவேயே என்னைய Check பண்ணியதோடயே என்னைய அனுப்பியிருக்க வேணும். எண்ட காசையும் எடுத்து எங்கள வைச்சி உழைச்சி காசு வேண்ட வந்தவங்களா? அண்றைக்கு அவங்க வந்த நோக்கம்தான் என்ன? எங்களுக்கு எதுவுமே நியாயமா கிடைக்கல்ல. அங்க வந்திருந்த இன்னொரு மாற்றுதிறனாளி, அவருக்கு ஒரு கால் இல்ல. ஒரு கால் இல்லாம எட்டு வருசமா ஓட்டோ ஓடுறன் எண்டு அழுதாரு, எவ்வளவோ கெஞ்சி கூட பாத்தாரு, 8 வருசமா அவர் ஒரு விபத்த கூட ஏற்படுத்தல்ல. அவருக்கும் பாவம் குடுக்கவே இல்ல. எனக்கு சரியான கவலையா இருந்தது. நாங்க மாற்றுத் திறனாளிகள் உங்க சேவைய பெற தகுதியானவங்க இல்ல என்டா எங்கள உள்ளுக்கு எடுக்காம காச வேண்டாம உடனே அந்த இடத்திலேயே வெளியால அனுப்பியிருக்கலாமே.


ஏன் அவ்வளவு நேரம் எங்கள காக்க வைச்சீங்க? உளரீதியாக தாக்கி காயப்படுத்தினீங்க? எங்கள ஏன் லைன்ல நிப்பாட்டி வைச்சீங்க? ஏன் அப்படி செய்தனீங்க? மாற்றுத்திறனாளிகளுக்கு முதல் இடம் என்று அறிவிச்சுப் போட்டு ஏன் அதற்கு ஒரு ஏற்பாடும் செய்யாம கண்டும் காணாம போனீங்க? ஏன் இந்த நடமாடும் சேவையைப் பற்றி பொய் சொன்னீங்க?"

**ஆதி -**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நியாய நடை



இலங்கை உண்மையில் அபிவிருத்தி நோக்கிய பாதையில் செல்ல வேண்டும். எனினும் சுதந்திரம் அடைந்த பின்னும் அபிவிருத்தி என்பது தளம்பல் நிலையிலேயே தொடர்ந்துள்ளது. நாம் அபிவிருத்தி பற்றி சிந்திக்கிறோமா? அல்லது சாதி, இனம், மதம் என்னும் விடயங்களில் வெறித் தனமாக சிக்கிக் கொண்டுள்ளோமா என்பதை எமது கடந்த காலத்தை திரும்பிப் பார்த்தால் தெளிவாகத் தெரியும். தொடர்ந்து யுத்தம் நடைபெறும் நாடுகளின் கதையும் நம் நாட்டின் கதைதான்.

இந்த நிலையில் தற்போது நாம் வாழும் சூழலின் பெயர் "பொருளாதார நெருக்கடி". இந் நெருக்கடியானது இலங்கை மக்களால் பல வகையில் கேள்விக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் அக் காலப்பகுதியில் கிழக்கில் வாழும் மக்களால் தொடங்கப்பட்டது "நியாய நடை" இந்த நடைக்குள் இருந்து வந்த சில குரல்கள்...

"என்னச் சுற்றி நிறைய விடயங்கள் நடந்து கொண்டி ருக்கு. சின்னப் பிள்ளைகள் தொடக்கம் தொழில் பார்க்கும் அனைவரும் தினம் தினம் செத்துக் கொண்டிருக்கம். சாப்பிட வழியில்ல, தொழில் இல்ல, ஆஸ்பத்திரியில மருந்தும் இல்ல அத வெளியில வாங்க காசும் இல்ல, நியாயம் கேக்க பயமாயிருக்கு, தினம் தினம் ஒவ்வொரு கட்டளை சட்டங்களும் கழுத்த இறுக்குது..."

"என்னால கேள்வி கேக்காம இருக்க முடியல்ல, உள்ளுக்குள பொங்கிற கேள்விகள தினம் தினம் என்ர உடம்பில எழுதி போட்டுத்து சனத்துக்குள்ள நடக்கன். எல்லாரும் பாக்கிற மாதிரி வாசிக்க கூடிய மாதிரி மெது மெதுவா நடக்கன்...."

"என்னால இதாவது செய்தமே என்ற திருப்தியோட நான் மூச்சு விடுறன். நடக்கிறதயெல்லாம் ஒரு ஜடமாப் பாத்தித்து போய்த்தே என்னால இருக்க முடியல்ல..நான் மூச்சு விடுறதுக்காக நடக்கன். சொல்லப் போனா நான் எனக்காக நடக்கன்"

இந்த நடை நம் நாட்டிற்கு புதியதாக இருப்பினும் ஏனெனில் தினம் தினம் குறைந்தளவானவர்களே நடக்கின் றனர், எனினும் எமது நாட்டையொத்த பொருளாதார, அரசியல் நிலைகளால் இன்றுவரை பாதிக்கப்பட்டுவரும் நாடுகளில் உள்ள மக்கள் இதற்கெதிரான கேள்விகளை கேட்டுக் கொண்டிருக்கின்றனர்

அந்த வகையில் இங்கு வரும் நாடகம் தற்போது முன்னெடுக்கப்படும் நியாய நடையுடன் அனைத்து உலக போராட்ட வரலாறுகளில் இருந்தும் சில பகுதிகளை உள் வாங்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

(மேடையில் நடிகர்கள் சிறு வயது சந்தோசங்களை பகிர்ந்து கொள்கின்றனர்.)

**குரல்** : எனக்கு உகந்தை கோவிலுக்கு போரதெண்டா சரியான விருப்பம்

**குரல்** : எனக்கு முறக்கொட்டான்சேனைக்கு போற எண்டா சரியான சந்தோஷம்

**குரல்** : கல்லடியில ஸ்கூலுக்கு போற எண்டா எனக்கு சரியான விருப்பம்

**குரல்** : ஆச்சிகூட மடு மாதா கோயிலுக்கு போன நான்

**குரல்** : ப்ரண்ஸோட மட்டக்களப்பு கோயிலுக்கு போன நான்

(நடிகர்கள் மேடையில் ஒருவர் தோளை ஒருவர் பற்றி புகையிரத விளையாட்டு விளையாடி புகையிரதம் தடம் புரண்டு விழுதல் போல் விழல்)

**குரல்** : இப்ப ஏன் இந்த ரெயின் தடம் புரண்டது.

விழுந்தவர்களில் சிலர் எழும்பி வட்டத்தில் நின்று உடல் அசைவுகள் மூலம் அதிர்வுகளை எழுப்புகிறார்கள். அவர்கள் கடந்த காலத்தில் சந்தித்ததும் இன்றுவரை தொடரும் மக்களுக்கெதிரான இயற்கையினாலும், அரசியல் பொருளார தாரத்தாலும் ஏற்பட்ட அவலங்களை கூறுகின்றனர்.

**குரல்** : குண்டு வெடிப்பு

**குரல்** : ஆள்கடத்தல்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**குரல்** : காணாமல் ஆக்கப்படல்
**குரல்** : யுத்தம்
**குரல்** : டயர் எரிப்பு
**குரல்** : இனப்படுகொலை
**குரல்** : செல் அடித்தல்
**குரல்** : ஈஸ்டர் குண்டு தாக்குதல்
**குரல்** : சுனாமி
**குரல்** : வெள்ளம்
**குரல்** : சூறாவளி
**குரல்** : தற்கொலை
**குரல்** : பாலியல் வன்முறை
**குரல்** : இடம்பெயர்வு
**குரல்** : கொலை
**குரல்** : வீட்டுக்கு ஒரு பிள்ளை நாட்டுக்காக
**குரல்** : கிரீஸ் மேன்
**குரல்** : வெள்ள வேன் கடத்தல்
**குரல்** : ஆட்சேர்ப்பு
**குரல்** : முஸ்லிம் விவாவாக விவாகரத்து சட்டம்
**குரல்** : காணி ஆக்கிரமிப்பு
**குரல்** : மண் அகழ்வு
**குரல்** : கொரோனா
**குரல்** : சூழல் மாசடைதல்
**குரல்** : வரட்சி
**குரல்** : மண் சரிவு
**குரல்** : வீட்டு வன்முறை
**குரல்** : தனிமைப்படுத்தல்
**குரல்** : ஊரடங்கு
**குரல்** : அவசரகாலச் சட்டம்
**குரல்** : ரவுண்ட் அப்
**குரல்** : தினக்கூலிப் பிரச்சினை
**குரல்** : சித்திரவதை
**குரல்** : அகதி முகாம்
**குரல்** : கொரோனா ஊசி
**குரல்** : யாழ்ப்பாண முஸ்லிம் சமூகத்தவர் 90ம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றம்.
**குரல்** : தீவிரவாத தடுப்பு சட்டத்தால் அப்பாவி மக்கள் கைது.
**குரல்** : காணி உரிமை மறுப்பு.
**குரல்** : இணையவழியினூடாக பாலியல் சேட்டைகள்.
**குரல்** : போதை பொருட்களின் பாவனை அதிகரிப்பு.
**குரல்** : சரி இப்ப என்ன நடக்குது?
**குரல்** : பசி, பட்டினி

(தற்போது நாட்டில் தட்டுப்பாடாக உள்ள பொருட்களை எடுத்து வந்து மேடை முழுவதும் நடிகர்கள் வைத்தல்)

(ஒவ்வொருவராக தற்போதைய நாட்டின் பொருளாராத நெருக்கடிச் சூழலின் நிலமைகளைக் கூறல்)

**குரல்** : லஞ்சம், ஊழல்
**குரல்** : எல்லாத்துக்கும் லைனில நிக்கம்
**குரல்** : வெளிநாட்டுக்கு ஆட்கள் கடத்தல்
**குரல்** : கேஸ் இல்ல
**குரல்** : பசளை இல்ல
**குரல்** : பசி, பட்டினி
**குரல்** : பெற்றோல் இல்ல, டீசல் இல்ல
**குரல்** : கொள்ளை, திருட்டு
**குரல்** : கரண்ட் இல்ல
**குரல்** : மருந்து இல்ல
**குரல்** : கல்வி இல்லை
**குரல்** : லோன் பிரச்சினை
**குரல்** : உணவு இல்லை
**குரல்** : நிலையற்ற அரசாங்கம்
**குரல்** : அஸ்வசுமா பிரச்சனை
**குரல்** : மின்சாரம், தண்ணீ, மரக்கறி, கேஸ், அரிசி, பருப்பு, சீனி, தேயிலை, சோப்பு. முட்டை, விஸ்கட், பால்மா, மருந்து (மூச்சு வாங்குதல்) எல்லாதுக்கும் விலை கூட.
**குரல்** : இதுக்கு நாங்க என்ன செய்திருக்கம்?

(காட்சி - பொருளாதார நெருக்கடிக்கெதிரான மக்கள் முன்னெடுப்புக்கள்)

நடிகர்கள் வெள்ளை துணியை கழுத்தில் போட்டபடி இருந்து உரையாடல்

**குரல்** : அரகளய. மக்கள் போராட்டம்
**குரல்** : வேலை நிறுத்தம்
**குரல்** : சாப்பாடு இல்லாதவங்களுக்கு சாப்பாடு சமச்சு குடுத்தம்
**குரல்** : பண்ட மாற்று முறை செய்தம்
**குரல்** : உலர் உணவு பொருட்கள் கொடுத்தம்
**குரல்** : பள்ளிவாசலில மாதம் ஒருமுறை இல்லாதவங்களுக்கு சாமான் கொடுக்கிறம்.
**குரல்** : இதெல்லாம் கேட்டா கவலையா இருக்கு
**குரல்** : கவலைய கொஞ்சம் ஓரமா வச்சுட்டு கதை கேட்க வாங்க

**பாடல்:-**

வணக்கம் வணக்கமுங்க பாசமுள்ள சபையோரே
கூடும் பெரியோரே குணமுள்ள தாய்மாரே
கும்பிட்டோம் கும்பிட்டோம் கோடி வணக்கமுங்க.

வீதியில நிற்பவரே
வரிசையில வாழ்பவரே
வந்திடுங்க வந்திடுங்க - வந்து
கத கேட்டிடுங்க

டோக்கன் கிடைக்கலையா
க்யூ ஆர் உமக்கு போதலையா
வந்திடுங்க வந்திடுங்க - வந்து
கத கேட்டிடுங்க

வணக்கம் வணக்கமுங்க பாசமுள்ள சபையோரே
கூடும் பெரியோரே குணமுள்ள தாய்மாரே
கும்பிட்டோம் கும்பிட்டோம் கோடி வணக்கமுங்க.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(காட்சி மட்டக்களப்பில் தினமும் முன்னெடுக்கப் பட்டுவரும் நியாய நடை.)

குழுவினர் நியாய நடைக்கான ஆயத்தங்கள் செய்தல். (குடை எடுத்தல் எழுதி வந்துள்ள பதாதைகளை கழுத்தில் தொங்கவிடல், தொப்பி அணிதல், கையில் கொண்டு செல்லும் நீண்ட துணியை எடுத்தல். ஒருவர் பின் ஒருவராக நடத்தல்)

**அனைவரும்:-**

நாங்க நடக்கிறோம். நிதானமாக, அமைதியாக
நியாய நடை நடக்கின்றோம். நாங்க நடக்கிறோம்
(பாடலுடன் அனைவரும் நடக்கிறார்கள்)
(பின்பாட்டு வரும்போது வசனம் கூறப்படல்)

நடை நடையாய் நடை நடையாய்
நடக்கின்றோம் நடை நடையாய்
அலை அலையாய் நடை நடையாய்
நடக்கின்றோம் நடை நடையாய்

**குரல்** : நாளின் தொடக்கமா இந்த நடை இருக்கு. வெளிய போக அனுமதிக்காத சமூகத்தில கலாசாரத்தில பிறந்த நான் நடக்கிறன்.

அன்பாலே நடை நடையாய்
அகிலத்துக்காய் நடை நடையாய்

**குரல்** : இந்த நடை இரத்த ஓட்டம் மாதிரி. இது என் உள்ளார்ந்த பயணம்.

பாசத்தால் நடை நடையாய்
முள்ளும் உதிர நடை நடையாய்

**குரல்** : ஒருவருக்கொருவர் நடக்க முடியாட்டி உதவுறது. தூக்க முடியாட்டி தூக்கிறது. கவலையா இருந்தா அரவணைக்கிறது. மழையோ வெயிலோ தொடர்ந்தும் ஒண்ணா நடக்கிறோம்.

பொழுதும் புலர நடை நடையாய்
இருளை விலக்கி நடை நடையாய்

**குரல்** : ஒருவருக்கொருவர் நடக்க முடியாட்டி உதவுறது. தூக்க முடியாட்டி தூக்கிறது. கவலையா இருந்தா அரவணைக்கிறது. மழையோ வெயிலோ தொடர்ந்தும் ஒண்ணா நடக்கிறோம்.

பாதை தெரிய நடை நடையாய்
உண்மைக்காய் நடை நடையாய்

**குரல்** : நடக்கிறத ஒரு அம்மா பாப்பாவு. இன்னொரு அம்மா தண்ணி தருவாவு. ஒரு சின்ன பொடியன் எழுதி இருக்கிற எழுத்த என்ன எழுதி இருக்கு என்டு வந்து வாசிப்பான்.

நம்பிக்கையாய் நடை நடையாய்
நாளைக்காய் நடை நடையாய்

**குரல்** : மூன்று நாளா கேசுக்காக (Gas) வரிசையில நிக்கிறவங்களுக்கு சீரக தண்ணி கொடுத்தம். அத வேண்டவே சிலர் பயந்தாங்க. சிலர் பெற்றோலா எண்டு கேட்டாங்க. சிலர் கோடியலா எண்டு கேட்டாங்க. சிலர் வேண்டி குடிச்சாங்க.

கர்வம் மாற நடை நடையாய்
கருணை பெருக நடை நடையாய்

**குரல்** : நடக்கிற எங்களுக்கு கஞ்சி, தேத்தண்ணி, சோட்டீஸ் கேக் எல்லாம் குடுத்தாங்க.

**குரல்** : பெற்றோல் வரிசை நெருக்கடியில கூட எங்க நடைக்கு வழி விட்டாங்க.

**குரல்** : நாங்க நடக்கும் போது எங்க நடைக்கு வழிவிட்டு காத்திருந்தவங்களும் இருக்காங்க கோண் அடிச்சு முந்தியடிச்சவங்களும் இருக்காங்க. அதையும் தாண்டி தான் நடக்கம்.

கேள்விகள் கேட்டு நடை நடையாய்
எழுந்திடுவோம் நடை நடையாய்

**குரல்** : நிறைய பேர் வந்தாதான் நடப்பம் என்டு இல்ல. இரண்டு பேர் ஏன் ஒராள் என்டாலும் நடப்பம்.

(நியாய நடையில் நடப்பவர்கள் தமது அனுவங்களை நடையினூடே பகிர்கின்றனர்)

**காட்சி**

நடப்பவர்கள் ஒருவருக்கொருவர் தமது கேள்விகளையும் மன உணர்வுகளையும், பயம், கவலை, தங்களுக்கான ஆறுதல்களையும் ஒருவருக்கொருவர் வழங்கல்)

**குரல்** : ஏன் நடக்கின்றோம்.
**குரல்** : பயம், பயம், பயம், பயம்.
**குரல்** : வாழ்க்கய நினைச்சா பயம்
**குரல்** : விலைவாசிய நினைச்சா பயம்
**குரல்** : எண்ட புள்ளைட எதிர்காலத்த நினைச்சு பயம்
**குரல்** : போனா இருட்டுல இருக்க பயம்
**குரல்** : அடுத்த வேளை சாப்பாட்ட நினைச்சா பயம்

(என்ன செய்யலாம் என சிந்திக்கிறார்கள்)

**குரல்** : பயத்த எப்படி எதிர் கொள்ளுறது
**குரல்** : ஏதாவது செய்யணும்

**குரல்** : தொடர்ந்து செய்யணும் அதனால தான் இந்த அமைதி நடை.

**குரல்** : நாங்க யாரையும் தொந்தரவு பண்ணல்ல. சத்தமும் போடல்ல.

**குரல்** : போக்குவரத்துக்கு இடஞ்சல் குடுக்கல்ல, கோசம் போடல்ல

**குரல்** : அதனால தான் நாங்க 550 நாளையும் தாண்டி நடக்கிறம்.

**காட்சி**

(கடந்த பாரிய யுத்த காலங்களில் போது இலங்கை உட்பட உலகெங்கிலும் உள்ள பெண்கள், பொதுமக்கள் நீதிக்காக போராடிய வரலாறுகள் காட்டப்படுதல்) (நடிகர்கள் பிடித்து வந்த துணியை தரையில் விரித்தபடி

**குரல்** : 1995. சர்வதேச மனித உரிமைகள் தினம். இராணுவத்த பற்றிய பயம். ஊரடங்கு, டயர் எல்லாம் போட்டு புகை மண்டலம். ஊரே சுடுகாடா இருந்தது. பொம்பிளையல் எந்த வயசா இருந்தாலும் வெளியில நடக்க முடியாது. இருந்தும் மௌனமாய் நடந்தம்.

**குரல்** : 2013 ம் ஆண்டு அளுத்கம வேருவலயில் முஸ்லிம் களுக்கு எதிரான குரல் வன்முறைக்கு கண்டனம் தெரிவித்து எழும்பிய தமிழ் முஸ்லிம் சிங்கள சகோதரிகள் குரல் ஈஸ்டர் தாக்குதலுக்கு பிறகு மாமாங்கம் செல்லும் மக்களின் தாகம் தீர்க்க மோர் கொடுத்தனர்.

**குரல்** : நாங்க செய்யிறது புதிசே இல்ல அதுவும் இந்த நாட்டிற்கு புதுசே இல்ல.

**குரல்** : கோவில் தொடங்கி பஸ் ஸ்ரானட் (Bus Stand) ஊடாக காந்தி சதுக்கத்திற்கு நடந்தம் - இதே மட்டக்களப்பில.

**குரல்** : 2000ஆண்டுகளில் காணாமல் ஆக்கப்பட்டவர் களுக்கான பாதயாத்திரை நடந்தம் காணாமலாக் கப்பட்ட உறவுகளோட பெயரையும் உறவையும் அட்டையில் எழுதி கொண்டு அவங்களுக்காக பிராத்தனை செய்யுங்கள் என்று தாய்மார் கேட்டனர்.

**குரல்** : ஒரு கோயில்ல இருந்து இன்னொரு கோயிலுக்கு நடந்து பூசை செய்தம்.

**குரல்** : ஒரு சேச்சில இருந்து இன்னொரு சேச்சுக்கு நடந்து பூசை செய்தம்

**குரல்** : பன்சாலையில் இருந்து பொது இடத்திற்கு நடந்தம்

**குரல்** : பள்ளிவாசலில்ல இருந்து தர்காவிற்குக்கு நடந்தம்.

**குரல்** : பேசாம இருக்கிறது கஷ்டம். மனசு தாங்காது பயமா இருக்கும். ஆனா ஏதாவது செய்யனும். ஏதாவது செய்யனும்.

**குரல்** : இந்த நாட்டில மட்டும் இல்ல உலகம் முழுக்க நடந்திருக்கு

**குரல்** : காந்தி நடந்தார்.

நீ காண விரும்பும் மாற்றமாக நீயே இரு. ('துணியில் எழுதி எடுத்தல்")

**குரல்** : மார்டீன் லூதர் கிங்
பறவைகள் மாதிரி பறக்க கற்று கொண்டம். மீன் மாதிரி கடலில்ல போக கற்று கொண்டம். ஆனா சகோதரங்களுடன் பூமியில நடக்க மட்டும் இன்னும் கற்கல்ல.

**குரல்** : நெல்சன் மண்டேலா
விடுதலைக்கான நீண்ட பயணம்.
அப்படி என்டு சொன்னது
உங்களுக்கு தெரியும் தானே.

**குரல்** : இவங்க எல்லாம் பெரிய தலைவர்கள்

**குரல்** : ஆனா அர்ஜன்டீனாவில் 1977இல் 14 சாதாராண அம்மாமார் தலையில் சுற்றின வெள்ளை துணி,
(நடிகர்கள் வெள்ளை துணி தமது தலையில் கட்டுதல்)

**குரல்** : கைகளில் கழுத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உருவ படங்கள்.

**குரல்** : நடமாடும் சுவரொட்டிகளாக அன்னையர் நடந்தனர்.

**குரல்** : தமது துக்கத்தை பொது வெளியில் நிகழ்த்திக் காட்டினர்.

(அப் பெண்கள் போராட்டத்தை இவர்கள் நிகழ்த்துதல்)

**குரல்** : (பாடல்) ப்ளாசா டி மாயோ (2)
(பாடல் தொடர அதன் தழிழ் மொழி பெயர்ப்பு)
எங்கள் காயங்களுக்கு - அந்த
கதிரவன் சாட்சி
எங்கள் வரலாற்றுக்கு நாங்களே சாட்சி
ப்ளாசா டி மாயோ

பாடல் தொடரும்

**காட்சி**

இலங்கை முழுவதும் நடந்து கொண்டுள்ள இன வன்முறைகள், உரிமை மறுப்புக்கள், மனித படு கொலைகள் அந்த இடங்கள். இடங்கள் சொல்கையில் இடையே பாடல் ஒலிக்கும் )

**குரல்** : கோள் பேஸ்

**குரல்** : கொழும்பு

**குரல்** : அநுராதபுரம்

**குரல்** : காலி

**குரல்** : கண்டி

**குரல்** : பதுளை

**குரல்** : குருநாகல்

**குரல்** : மாத்தறை

**குரல்** : ரத்தினபுர

**குரல்** : ஜா-எல

**குரல்** : மொனராகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குரல்** : நிகம்பு

**குரல்** : கம்பொல

**குரல்** : மட்டக்களப்பு

**குரல்** : கந்தளாய்

**குரல்** : கடுவெல

**குரல்** : கணவெல

**குரல்** : பலாங்கொட

**குரல்** : மாத்தளை

**குரல்** : மொரட்டுவ

**குரல்** : கலுபோவெல

**குரல்** : திம்பிரிகசாய

**குரல்** : நிலுபொக்குவ

**குரல்** : யாழ்ப்பாணம்

**குரல்** : வவுனியா

**குரல்** : மன்னார்

**குரல்** : முல்லைத்தீவு

**குரல்** : கிளிநொச்சி
பளாசா டி மாயோ 2

**குரல்** : போராட்டம் தொடரும்

**அனைவரும்** : போராட்டம் தொடரும்.

நடிகர்கள் துணியை கீழே வைத்து அரைவட்டத்தில் நிற்றல்.

**குரல்** : 1980களில் கொழும்பில் மதர்ஸ் ப்ரன்ட்

**குரல்** : 1984 யாழ்ப்பாணம் பருத்தி துறையில் ஒரே நாளில் சுமார் 300 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

**குரல்** : ஆஜன்டினா மாயோ சதுக்க அன்னையர் காட்டிய வழியில் யாழ்ப்பாணத்தில் அன்னையர் முன்னனி உருவாக்கப்பட்டது.

**குரல்** : கடந்த சில மாதங்களில் 4500 பேருக்கு மேல் கைது

**குரல்** : இளைஞர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள். போராட்டம் செய்த சாதாரண மக்கள்

**குரல்** : அவர்களைத் தேடி, அவர்களுடைய விடுதலைக்காக அவர்களது அன்னையர் அவர்களது உறவுகள்.

**குரல்** : போராட்டம் தொடரும்.
(அனைவரும் தமது பொருட்களை எடுத்தபடி ...)

**பாடல்** குன்றுகள் ஏறி சமவெளி தோறும்
முகில்களோடு நாங்களும் நடந்தோம்
குறிஞ்சி. முல்லை, மருதம், நெய்தல்
பாலை எங்கும்
பாலை, பாலை,பாலை, பாலை...

**குரல்** : மலையும் மலை சார்ந்த வாழ்வில் நம்மை தாங்கும் மண்ணும் நீரும் நிலையற்று அகல

**குரல்** : காட்டில் மழை தேடி வாழும் மரம், விலங்கு மனிதர்கள்

**குரல்** : காடிருந்த இடம் தேடி உலாவும் உயிரினங்கள்

**குரல்** : வயலும் வயல் சார்ந்த வாழ்வில் வாடி கருகி விழும் நெற் குஞ்சுகளும் அவற்றைச் சார்ந்த மனிதர்களும்

**குரல்** : கடலும் கடல் சார்ந்த கரையில் தினம் தினம் ஒதுங்கும் கைவிலங்கிடப்பட்ட மானிட உடல்கள்.

**குரல்** : பாலை மர நிழலில் குந்தியிருக்கும் எம்மிடையே

**குரல்** : வேர்த்து விறுவிறுத்து நம்மிடையே வந்தமரும் கச்சான் காற்று.

**காட்சி**

**நியாய நடை**

(மக்கள் பொருட்களை தூக்கியபடி
நியாய நடையை தொடர்கின்றனர்.

நான் போதும்
அமைதிக்கு நான் போதும்
எதிர்ப்புக்கு நான் போதும்
நியாயத்திற்கு நான் போதும்
உண்மைக்கு நான் போதும்
அன்பு பகிர நான் போதும்
நம்பிக்கைக்கு நான் போதும்
கனவு காண நான் போதும்
விடுதலைக்கு நான் போதும்
மாற்றத்துக்கு நான் போதும்
என் மகள் முன் நிற்கிறாள்

**கருத்தாக்கம்:** மங்கை அரசு

**நெறியாள்கை:** பொன்னி அரசு.

**நாடக ஆக்கம்:**
பொன்னி அரசு மற்றும்
சூரியா பெண்கள் கலாசாரக் குழுவினர்

**கவிதை:-** விஜயலெட்சுமி சேகர்

**நடிப்பு:** சி.தமிழினி
வி.விவேக்கா
த.மிருகாஞ்ஜினி
அ.விருத்திகா
சு.கல்யாணி

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் கூறும் பெண்ணியம்



காலவோட்டத்திற்கு ஏற்ப சட்டங்களும் விதிகளும் மாற்றம் கண்டு புதிய விதிகள் எழுதப்பட்டாலும் பெண்கள் குறித்தான எந்தவொரு விடயங்களும் எச்சந்தர்ப்பங்களிலும் மாற்றத்தைக் காணப் போராட வேண்டியுள்ளது.

அந்தவகையில் பல விடயதானங்கள் இருந்த போதும் அனைவரும் கையாள்வதும் எதிர்க்க பயங் கொள்வதுமான ஒரு பழம் பெரும் பொக்கிஷமாக இத்திருக்குறளைப் பார்க்கலாம். ஆனாலும் திருக்குறள் பெண்களின் உரிமைகளைப் பறிப்பதில் மிகப் பெரிய பங்களிப்புச் செய்கிறது என்பதையும் மறுக்க முடியாதுள்ளது. பெண்கள் பற்றிய அவரது குறள்களால் சமூகத்தில் பெண்களின் நிலைப்பாட்டில் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதையே இங்கு குறிப்பிடுகிறோம்.

இன்று மனு நீதி தொடங்கி ஒவ்வொரு நூல்களை யும் பெண்ணிய நோக்கிலும் பெண்ணிலைவாத அடிப் படையிலும் அலசத் தொடங்கி விட்டனர். கணவன் எப்படிப் பட்டவனாக இருந்தாலும் அவனைப் பூசிக்க வேண்டும் அவன் இறக்கும் பட்சத்தில் பத்திய வாழ்வு வாழ வேண்டும். (இதில் மறுமணம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது) இவற்றை நீதி என்ற பெயரில் கூறிய மனு சாத்திரம் மேலும், பால் ஒடுக்குமுறை, பாலிழிவு நிலைகளைக் கொண்டதாகவே இருக்கிறது.

வள்ளுவர் பல இடங்களில் மனு சாஸ்திரத்தை எதிர்த்திருந்தாலும் பெண் என்று வரும் போது மாத்திரம் அவரும் ஒரு ஆணாதிக்க சிந்தனையுடையவரே என்பதை நிரூபித்துச் சென்று விட்டார். இவ்வாதத்தை முன் வைக்கை யில் கூட வரிந்து கட்டிக் கொண்டு வாதம் செய்ய எடுத்து வைப்பது ஔவையின்பாடல்களை தான். ஏனெனில் ஔவை யும் ஒரு பெண் தானே அவரே 'தையல் சொற் கேளேல், பேதமை என்பது மாதர்க் கணிகலம்' என்றெல்லாம் பெண்கள் குறித்துக் கூறியிருக் கிறார்தானே என்பர். இவ்விதமாக வாதம் செய்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு ஒன்றைத் தெளிவு படுத்த வேண்டும். மேற்கண்ட நீதி வாக்கியங்களும் குறள்களும் யாரால் சொல்லப்பட்டிருந்தாலும் சொல்லப்பட்ட காலம் ஆண் ஆதிக்கம் பரவியிருந்த காலம் என்பதை ஒப்புக் கொண்டே யாக வேண்டும். அது தவிர ஔவையைத் தவிர பின் வந்த எந்தவொரு பெண் இலக்கிய வாதிகளும் இவ்வாறான எந்தக் கருத்துக் களையும் கூறவில்லை என்பதுடன் பெண் அடிமைத்தனத் தைக் கட்டுடைத்துத்தான் பேசியுள்ளனர். பாடியுள்ளனர் என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும்.

மெய்யோ? கற்பனையோ? அவரது மனைவி வாசுகி குறித்து ஒரு கதை உலாவுவதை நாம் கேள்வியுற்றிருப்போம். அதில் வாசுகி கிணற்றில் நீர் அள்ளும் போது வள்ளுவரின் குரல் கேட்டு வாளியை அப்படியே விட்டு விட்டு ஓடியதாகவும் அது அவள் வரும் வரை கிணற்றில் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்ததாகவும் வரும். இக்கதை கற்பனை எனில் யாரால் உருவாக்கப்பட்டது? என்ன நோக்கத்தில் உருவாக்கப்பட்டது? என்பது ஆராயப் பட வேண்டியது அவசியம். மெய்யெனில், வாசுகி ஓடியது பக்தியிலா? பயத்தினாலா? தன் மனைவியை இந்நிலையில் வைத்திருந்த வள்ளுவரால் எப்படி பிற பெண்களை மரியாதையாக நோக்க முடியும்?

பெண்களால் அடுக்கடுக்காகக் கேள்விகள் எழுப் பப்படுகையில் பதிலிறுக்க முடியாத அனேகர் தமது பிடியைத் தளர்த்தி திருக்குறள் கூறும் நீதியானது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது, அதை ஏன் பிரித்து நோக்கு கிறீர்கள் என்று எதிர்க் கேள்வி எழுப்புகிறார்கள். இவ்வளவு குறள்களை எழுதிய வள்ளுவர் பெண் ஆண் வேறுபாடு தெரியாதவரில்லையே. அத்தோடு ஒவ்வொரு குறளிலும் அவர் தெளிவாகவே ஆண்களுக்கு பெண்களுக்கு என்று பிரித்தே எழுதியுள்ளார். உதாரணத்திற்கு மடலூர்தல் என்பது ஆண்களுக்கு எழுதியுள்ளார். இதனை பெண்களுக் கும் சேர்த்தே தான் கூறியுள்ளார் எனக் கூறமுடியுமா? பெண்கள் மடலூர்ந்ததாக எங்கேனும் கேள்விப் பட்டதுண்டா? 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய் எனப் பெய்யும் மழை' (55) என்ற குறளில் பெண்களுக்கு மட்டும் இல்லை ஆண்களுக்கும் சேர்த்தே சொல்லப்பட்டது என ஏற்றுக் கொள்வார்களா? 'இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக்கடை' (53) எனும் குறள் மனைவி நற்குணம் நிறைந்தவளாக இருந்தால் வளமான வாழ்வு அமையும் மாறுபட்ட குணம் அமைந்தால் வாழ்க்கை பயனற்றதாக மாறிவிடும் என்ற பொருளில் அமைந்தது. உண்மையில் அந்தக்காலம் இந்தக்காலம் என்றில்லாமல் எந்தக் காலத்திலும் திருமணத்தின் பின்னரான பல ஆண்களின் நற்பண்பில்லாத் தன்மையே பல பெண் களின் வாழ்வை பயனற்றதாக மாற்றியுள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

56 வது குறளில் தற் கொண்டான் அதாவது தனைக் கொண்டான் என்ற சொல்லைப் பார்த்தால் பெண் அடிமை யாகப்பட்டமை அப்பட்டமாகத் தொனிக்கும். அதிலும் கணவனையும் அவன் உறவுகளையும் காக்கவும் பேணவும் கூடவே தன்னையும் காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத் தில் பெண் வாழ்ந்திருக்கிறாள் என்பதை இக்குறள் கூறுகிறது.

ஆரியத்திற்கு எதிராக புத்தர் செய்த வேலையைத் தான் திருக்குறளும் செய்திருக்கிறது எனப் பெரியார் குறிப் பிட்டிருந்தார். உண்மைதான் புத்தர் மனைவியை கைவிட்டது போலவே திருக்குறள் பெண்களைக் கைவிட்டி ருக்கிறது. தயவு தாட்சண்யம் பார்க்காமல் அனைவருக்கும் அறிவுரை வழங்க முற்பட்ட வள்ளுவர் ஆண்கள் மனதில் பெண்கள் பற்றிய எந்தவொரு நட்பதிவையும் வழங்க வில்லை என்பதே உண்மை. திருக்குறளுக்கு உரை எழுதியவர் ஆண் என்பதிலும் அவர் மனுதர்மத்தை மதிக்கும் ஆண் என்பது முக்கியமாக பதிவு பண்ணப்பட வேண்டியது. இப்போது குறளில் பிழையா? உரையில் பிழையா ? என மயக்கம் ஏற்படுவது இயல்பு. எது எப்படியாயினும் திருக் குறள் தமிழில் இருப்பது சிறப்பு. எவரும் அதன் பொருள் உணர ஏதுவாகவே உள்ளது. ஆனாலும் முதல் விளக்கவு ரையை மனதில் பதித்துக் கொண்டவர்கள் அதற்கு வேறு பொருள் எடுத்துக் கொள்ளவோ அதனை மாற்றியமைக்கவோ விரும்பவில்லை. குறள் மட்டுமே வள்ளுவருடையது உரை அவரது அல்லவெனிலும் இதுவரை காலமும் பெரியாரைத் தவிர யாரும் அதனை எதிர்க்கவில்லை என்பதால்வள்ளுவரும் அதே எண்ணப்பாட்டில் தான்திருக்குறளை எழுதியிருப்பார் என்ற முடிவுக்கு நாம் வருகிறோம்.

திருக்குறள் குறித்து பரிமேலழகரின் பார்வையும் பெரியாரின் பார்வையும் வேறுபாடுடையது. ஒருவேளை பெரியார் விளக்கவுரை எழுதியிருந்தால் சற்றுத் தெளிவாக பெண்களை மனதில் வைத்து அவர்களின் உரிமைக்காகவும் எழுதியிருப்பாரோ என்னவோ. அவ்வாறு நடந்திருப்பின் அவரும் ஐம்பது வருடங்களாக பெண் விடுதலைக்காக பாடுபட்டிருக்கத் தேவையில்லை, போராட்டங்கள் இல்லா மலே பெண்கள் தமது உரிமைகளை பெற முடிந்திருக்கும்,

இன்று நாம் திருக்குறளை பெண்ணை இழிவு படுத்தவும், பெண்ணை அடிமைப்படுத்தவும், பெண் உரிமை களை தடை செய்யவும் என திருக்குறளை ஒரு ஆயுதமாகத் தூக்கிப் பிடிக்கிறது ஆணாதிக்க சமூகம்.

ஒருவேளை திருக்குறளை எழுதியவர் ஒரு பெண் ணாக இருந்திருந்தால் பெண் ஆண் என்றும், இல்லாள் இல்லான் என்றும் இணைந்தே இருந்திருக்கும்.

திருக்குறளில் பொதுவாகவே பல நீதிகள் சொல்லப் பட்டுள்ளன. அவையாவன, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை, கொல்லாமை, குற்றம் கடிதல், பெரியாரை துணைக் கோடல், செங்கோன்மை, கொடுங் கோன்மை, அமைச்சு, மன்னரைச் சேர்ந்தொழுகல், உட்பகை, சூது, பெரியாரைப் பிழையாமை, கயமை, எனப் போய்க் கொண்டே இருக்கிறது நீதிகள்.

இவற்றையெல்லாம் பின்பற்றி நடந்தால் நாடும் நாட்டு மக்களும் சுபீட்சமாகவே இருப்பர் என்ற போதும் அதைக் கடைப்பிடிக்க இங்கு யாரும் தயார் இல்லை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெண்கள் தமது தேவைகளைக் கூறவும், தமக்கெதிரான அடக்குமுறையை எதிர்த்து குரல் கொடுக்கவும் எக்காலத்திலும் தயாராகவே இருந்துள்ளனர். அன்று அடங்கியிருந்தவர்கள் இன்று அடங்க மறுக்கிறார்கள் என்பதெல்லாம் இவர்களின் எண்ணப்பாடே தவிர பெண்களின் விருப்பம் கிடையாது.

பெண் வழிச் சேறல் என்ற அதிகாரத்தில் மனைவியை மாத்திரம் குறிக்கும் வகையில் தான் இல்லாள் என்றும் பெண் என்றும் குறிப்பிட்டு அவர்கள் பேச்சைக் கேட்பதே முட்டாள் தனம் என்பதாக பதிவு செய்து விட்டார். இதனாலேயே காலம் காலமாக மூளையில் பதிவாகிய மனைவி பேச்சைக் கேட்டு நடப்பவன் எல்லாம் முட்டாள் எனும் எண்ணப்பாடு அனைத்து ஆண்களிடமும் வேர் ஊன்றிக் காணப்படுகிறது. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் அனுசரித்து ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து மனைவியின் தேவைகளையும் கேட்டறிந்து அவளையும் மதித்து தனக்கு நிகராக நிற்க வைக்கும் இன்றைய பல தம்பதிகளின் வாழ்க்கை தான் இனிய இல்லறம்.

திருக்குறள் மாநாட்டை முதலில் ஆரம்பித்து வைத்த பெரியார் வள்ளுவரின் நீதிகளைப் புகழ்ந்தாலும் வள்ளுவரின் பெண்கள் பற்றிய கருத்துக்களுக்கு எதிர்ப்புக் குரலையே எழுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐம்பது ஆண்டுகளாய் பெண் விடுதலைக்காய் குரல் கொடுத்த பெரியாருக்கும் தவறாகத்தானே பட்டுள்ளது. கேட்டால் பெண்ணியவாதிகள் மட்டுமே பெண்ணிய நோக்கில் திருக்குறளை பார்ப்பதாக குற்றச்சாட்டு வேறு. பெரியாரின் சிலையை உடைத்தார்கள் அவரின் படத்தை எரித்தார்கள், பெண்ணுரிமை பற்றிப் பேசியவரும் ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தவருமான Dr. அம்பேத்கரின் சிலையை உடைத்துள்ளனர். ஆனால் திருவள்ளுவருக்கு சிலை எடுத்தல், திருக்குறள் மாநாட்டினை நடத்துதல் என்பன நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

இறுதியாக, பெண்கள் தொடர்பான பார்வையில் சில திருக்குறள்கள்

**அதிகாரம் -6 (வாழ்க்கைத் துணை நலம்)**

» ஆண்கள் எப்படியும் இருப்பர் ஆனால் பெண்கள் நற்பண்புடையவராக இருக்க வேண்டும்.
» தெய்வத்தை விட்டு கணவனைத் தொழும் பெண்கள் பெய் எனச் சொன்னால் மழை பெய்யும்.
» கற்பு நெறியில் நிற்க வேண்டும் அதே வேளை கணவனையும் அவனது உறவுகளையும் காக்க வேண்டும்.
» கணவனைப் போற்றினால் மேலுலக வாழ்வைப் பெறலாம்.
» மனைவியின் நற்பண்கள் மட்டுமே வாழ்வுக்கு மங்களம் என்றும் நல் மக்களைப் பெறல் அவளது கடமை என்றும் கூறப்பட்டுள்ளது.

**அதிகாரம் -91( பெண் வழிச் சேறல்)**

இவ்வதிகாரமே பெண்ணை அடிமையாக வீட்டில் அடைக்க பெரிதும் உதவி செய்தது என்றால் மிகையாகாது. இதில்,



» மனைவி பேச்சைக் கேட்டால் சிறக்க முடியாது.
» மனைவியின் பெண்மையை விரும்புபவனின் செயல் நாணத்தக்கது.
» மனைவியிடம் தாழ்மையாக நடத்தல் இழிசெயல் அவ்விதம் நடப்பவனால் நற்செயல்கள் செய்யவே முடியாது.
» மனைவி விரும்பியபடி நடப்பவன் அறம் செய்ய மாட்டான்.
» மனைவியின் ஏவலுக்கு இணங்குவது அறியாமை.

**அதிகாரம் - 92(வரைவில் மகளிர்)**

பொது மகளிர் என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார். அவ்வாறான பெயரால் குறிப்பிடத்தக்க விதத்தில் பெண்களை உருவாக்கியது யார்? தாம் பொது மகளிர் என அவர்களே கூறிக்கொண்டார்களா? அத்தோடு தன் மனைவியை காதலியை விட்டு அப்பெண்களிடம் செல்லும் ஆண்களை என்னவென்பது?

அப்பெண்களை நாடிச் செல்லாதீர்கள் அவர்களைத் தழுவுதல் பிணத்தை தழுவுதலுக்கு ஒப்பானது என்றும் அவர்களின் பேச்சைக் கேட்பதும் நாடுவதும் நரகம் என்றும் கூறுகிறார்.

**தேவதாசிகளை உருவாக்கியது யார்?**

தங்கள் தேவைக்காக பெண்களை பாலியல் அடிமையாக்கி வைத்தவர்கள் யார்?

**அதிகாரம் -109(தகையணங்குறுத்தல்)**

இவ்வதிகாரத்தில் பெண்ணை ஒரு போதைப் பொருளாகவே வள்ளுவர் சித்தரித்திருப்பார். அங்கம் அங்கமாக வர்ணித்து அவளது கண்களை எமனுக்கு ஒப்பிட்டு அவளது பார்வை கள்ளை விடவும் போதை தருவதாகவும் மயக்கத்தை ஏற்படுத்தி காமத்தைத் தூண்டக்கூடியதும் என்கிறார்.

**அதிகாரம் - 110(குறிப்பறிதல்)**

பெண்கள் ஆண்களை கள்ளத்தனமாக ரசிக்கிறார்கள் என்பதாக எழுதப்பட்டது. அதாவது பெண்களின் சிந்தனைகள் முழுவதும் ஆண்களையே சுற்றுவதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிகாரம் - 111(புணர்ச்சி மகிழ்தல்)**

பெண்ணின் அங்கம் முழுவதும் இன்பம் தருவதாகவும் அவள் ஆண்களின் சந்தோசத்திற்காக மட்டுமே படைக்கப்பட்டவள் என்பதாகவும் இவ்வதிகாரக் குறள்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

பெண்களைப் பற்றிய எண்ணவோட்டம் அவர் மனதில் இவ்விதமாக உள்ளது..?

**அதிகாரம் - 112 (நலம் புனைந்து உரைத்தல்)**

இவ்வதிகாரம் பெண்களுக்கு அவர்களின் பலத்தினை தெரிந்து கொள்ளாமல் கண்ணைக் கட்டி விட்டது என்று சொன்னால் மிகையாகாது.

அதாவது பெண்கள் மென்மையானவர்கள், மெல்லியர், தளிர் போன்றவர்கள், மோர்ந்தால் வாடும் அனிச்சமலர் போன்றவர்கள் என்றெல்லாம் கூறி பெண்களால் அதிர்ந்து பேசவோ, நடக்கவோ, வன்மையாக நடந்து கொள்ளவோ முடியாது என்பதாகப் பதிவு செய்து விட்டார்.

**அதிகாரம் - 113( காதற் சிறப்புரைத்தல்)**

இவ்வதிகாரம் பெண்ணை முட்டாளாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதாவது காதலன் கண்ணிலே இருப்பதால் கண்ணுக்கு மை தீட்டி அவனை துன்புறுத்தக் கூடாது என்றும் மைதீட்டினால் அவர் மறைந்து விடுவார் என்றும் பெண்கள் பயந்தார்களாம். அதுமட்டுமின்றி காதலரைப் பிரிந்தால் ஊர் சனம் சிரிக்கும் என்பதான பயத்தினையும் ஏற்படுத்தி வைத்திருந்தது இவ்வதிகாரம்.

**அதிகாரம் - 114 (நாணுத்துறவு உரைத்தல்)**

இது பெண்ணை அவமதிக்கும் ஒரு செயற்பாடான மடலூர்தலைக் குறிப்பிடுகிறது. தனக்கு மட்டும் பிடித்திருந்தால் போதும் அதில் பெண்ணின் விருப்பத்தைப் பற்றிய அக்கறையின்மை மற்றும் அவளிடம் அனுமதி பெற வேண்டிய அவசியமின்மையை அன்றே ஆரம்பித்து வைத்து விட்டார் வள்ளுவர்.

**அதிகாரம் - 116 (பிரிவு ஆற்றாமை )**

கணவரை/ காதலரை பிரிந்தால் பெண்கள் உடல் மனம் சோர்ந்து எந்த வேலையும் செய்ய முடியாது காம நோய் தலைக்கேறி உடல் மெலிவர் எனக் குறிப்பிடுகிறார்.

**- நிலாந்தி சசிகுமார்**

அவள் போராடுகிறாள்....
தினம் தினம் தீனி போட்டு
வரும் கனவுகளுக்காக
போராடுகிறாள்....

வயது வளர வளர சேர்ந்தே
வளரும் அவளின்
பொறுப்புகளுக்காக அவள்
போராடுகிறாள்....

தனது வாழ்க்கையின்
வரம்புகளை உடைத்தெறிய போராடுகிறாள்....

வட்டம் போட்டு வாழ சொன்னவர்களின் மத்தியில்
முடிவிலியைத் தேடி
அவள் போராடுகிறாள்....

வயதின் முதிர்ச்சி
இலக்கை தகர்குமோ
என்னும் பயத்துடன் தினம்
போராடுகிறாள்....


உள்ளிருக்கும் நடுக்கத்தை
முகத்திலிருந்து மறைக்க
அவள் போராடுகிறாள்....

பிரிய நினைக்கும்
மனிதர்களை மறக்கவும்
கூட நிற்கும்
உறவுகளை
தக்க வைத்துக் கொள்ளவும்
போராடுகிறாள்....

பிரிவின் வலியை
கடந்து போக மனதில்
கணத்தை சுமந்த படி
அவள் போராடுகிறாள்....

வாழ்வின் அடுத்த
படிநிலையின் சுவாரஸ்யங்களை
எதிர் கொள்ள போராடுகிறாள்....

மனம் சொன்ன பாதையில்
சென்று வெற்றி என்னும்
பட்டத்தை அவளின்
பரந்த வானில் பறக்க விடும் வரை
அவள் இடைவிடாது
போராடிக்கொண்டே இருப்பாள்.



**- சௌமி**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் இன்றைய நிலையும் கடந்தகால சவால்களும்.



**"இருபத்தியோராம் நூற்றாண்டின் நவீன அடிமை கள் எனும் அடையாளப்படுத்தலை ஏற்க மறுக்கும் சமூகமாக மலையகம் இன்று தன்னை உருவாக்கிக் கொண்டிருக்கிறது."**

இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் பத்தொன்பதாம் நூற்றாண்டில் (1844) இலங்கையின் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது மத்திய மலை நாட்டில் தேயிலை மற்றும் கோப்பி போன்ற பணப்பயிர்களை உற்பத்தி செய்வதற்கான எத்தனிப்பில் தென்னிந்தியாவில் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் கூலித்தொழிலாளர்களாக இலங்கைக்கு கொணரப்பட்டனர். இவர்கள் ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகளாலும், ஒடுக்குமுறைகளாலும் கொத்தடிமைகளாக நடாத்தப்பட்ட கூட்டமாயினர். காடுகள் களைந்து பெருந்தோட்டங்கள் செய்தமையை உலகறியும் ஆனால் இவர்கள் ரயில் பாதைகள் உருவாக்க சுரங்கப் பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர் என்பது குறிப்பிட வேண்டியது. அங்கு அடிப்படை வசதிகள் இல்லாத "லயன்" குடியிருப்புகளை அமைத்துக் கொடுத்தனர். இருண்ட புதர்களுக்குள் மருண்ட மான்களாய் சுருண்டு வாழும் வாழ்க்கை தான் இவர்களுக்கு ஆங்கிலேயன் விதித்தது.

அரசியல் ரீதியான பல போராட்டங்களுக்கு பின்னரே இவர்களுக்கான அடிப்படை வாக்குரிமையும் வழங்கப்பட்டது. இலங்கை நாட்டின் வரலாற்றை உற்றாராய்ந்தால் தழும்பிய உற்பத்திப்பண்டங்களை ஏற்றுமதி செய்த தானியக் களஞ்சியமாக பொருளாதார ரீதியில் தன்னி றைவான நாடாய் தன்னை அடையாளப் படுத்திக் கொண்ட வரலாற்றை அறியலாம். பொருளாதார வலுவிற்கு அச்சாணி யாகவிருக்கும் இம்மக்களை இலங்கை அரசாங்கம் அன்று முதல் இன்று வரை ஒதுக்கப்பட்ட சமூகத்தினரை போன்றே புறக்கணித்து வருகிறது.

நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு அளப்பரிய பங்காற்றும் பெருந்தோட்டத்துறை ஆண்டிற்கு 2.5 மில்லியன் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கித் தருகிறது. இவ்வாறு பொருளாதாரத்தில் பெருமளவிலான பங்களிப்பை வகிக்கும் பெருந்தோட்ட மக்களது சமூக மற்றும் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான முன்னெடுப்புக்கள் ஒப்பீட்டு ரீதியில் மறையான வளர்ச்சியினைக் கொண்டிருப்பதோடு அரசியல் ரீதியில் சமூகமயமாகாமலும் சமூக விழிப்புணர்வற்றிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வளர்ச்சியோடு போட்டி போட்டுக் கொண்டு முன்னோக்கி நகரும் நாடுகள், சமூகங்களோடு ஒப்பிட்டு நோக்குகையில் மலையக மக்கள் எதிர்நோக்க கூடிய தடைகளும் சவால்களும் இவர்களது வரலாற்றோடு தொடர்புடையது.

அதிலும் குறிப்பாக மலையக சமூகத்தின் வளர்ச்சியில் பெரிதும் முக்கியத்துவமிக்கவர்களாக உள்ள மலையக இளைஞர், யுவதிகளின் வளர்ச்சியானது மலையக சமூகத்தின் தேசிய ரீதியிலான இருப்புக்கும் அங்கிகாரத்திற்கும் அளப்பரிய பங்காற்றி வருகிறது. பெருந்தோட்ட இளைஞர்களின் கல்வி, சமூக,பொருளாதார மற்றும் அரசியல் முன்னெடுப்புக்கள் மலையக சமூகத்தின் அடிப்படையான தேவையாக இருக்கின்ற நிலையில் அந்த முன்னெடுப்புகளின் போது ஏனைய சமூகங்களை விடவும் பெருந்தோட்ட இளைஞர்கள் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக மலையக இளைஞர்களின் மேற்குறித்தான முன்னெடுப்புக்கள் மலையக சமூகத்தின் மாற்றத்திற்கும் நிலைபேறான அபிவிருத்தியினது அடுத்த தலைமுறைக்கான அடித்தளத்திற்கும் அவசியமாகின்றது.

தேசிய, சர்வதேச மட்டத்தில் பெண்களது வாழ்க்கைத்தரம் நேர்மறையான வளர்ச்சி கண்டு வருகின்ற போதிலும் மலையகத்தை பொறுத்தவரை அது மந்தகதியிலேயே சென்று கொண்டிருக்கிறது. அவர்களது பொருளாதார வலுவாண்மையை நிலையேற்ற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஒரு பக்கம் மலையகம் சார் கல்வி, கலை, விளையாட்டு, தொழில் ரீதியான முன்னேற்றங்களை பாராட்டப்பட வேண்டிய கடப்பாடு எமக்கிருப்பதோடு மறுபக்கம் எட்டப்படாத தீர்வுகள், தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்து ஆராய வேண்டும். இதுவே எமது காலத்தின் கட்டாயமாகிறது. குறிப்பாக மலையக இளைஞர்களது அரசியல் முன்னெடுப்புகள் மந்தகதியில் செல்வதற்கு பல கணிக்கமுடியாத காரணங்கள் உள்ளன. மலையகம் எனும் போது ஆங்காங்கே பெரும்பாண்மை இனத்தவரும் செறிந்தே வாழ்கின்றனர். இங்கு வாய்ப்புகள் என்பது இன,மொழி ரீதியாக மட்டுப் படுத்தப் பட்டதாகவே காணப்படுகின்றது. அது அரசியலில் மாத்திரமல்ல அரசாங்கத்திலுமுண்டு. அதேபோல் பெருந்தோட்ட பெண்களுடைய அரசியல் சார் சவால்கள் ஏனைய சமூகங்களின் பெண்களுடைய சவால்களை விடவும் மாறுபட்டதாகும். குறிப்பாக இங்குள்ள இளம்பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு இந்த சூழல் கட்டமைப்பு சாதகமாக அமைவதில்லை. குடும்பம் மற்றும் சமூக கட்டுப்பாடுகளை தாண்டி தம்முள்ளே அரசியல் முன்னெடுப்புக்கள் குறித்த ஆர்வம் இருந்தாலும் அதனை வெளிக்காட்ட முடியாத சூழல் நிலவுகிறது. அரசியல் அறிவு என்பது இங்குள்ள இளம் பெண்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் காணப்படுவதுடன் அவ்வாறு இளம் பெண்கள் ஆர்வத்துடன் அரசியல் ரீதியில் பங்கெடுக்கும் போது அதனை அங்கிகரிக்க சமூகம் தயாரில்லை என்பது தான் கண்கூடு. இச்சவால்கள் பெண்களுக்கு மட்டுமல்ல ஏலவே ஆண்களுக்கும் பொருந்தக்கூடியது.

உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரம் ஆகிய அடிப்படை பிரச்சனைகளும் முழுமையாக தீர்க்கப்படும் பட்சத்திலேயே மலையக மாணவர்களது கல்வித் தரம் பற்றி முழுதாய் கவனம் செலுத்த முடியும் எனும் சிலரது காலாகால கூப்பாடுகளையும் கடந்து மலையகத்திலிருந்து கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான துறைகளில் பல பட்டதாரிகள் உருவாகி வருகின்றனர். இருபத்தியோராம் நூற்றாண்டின் நவீன அடிமைகள் எனும் அடையாளப் படுத்தலை ஏற்க மறுக்கும் சமூகமாக மலையகம் இன்று தன்னை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. ஏனைய சமூகங்களின் இளைஞர்களை விட மாறுபட்ட அதேவேளை மிகவும் கடுமையான சவால்களை எதிர்கொள்வதை காணலாம். பெருந்தோட்ட பகுதியில் கல்வி ரீதியாக முன்னேற்றம் கண்டிருக்கக்கூடியவர்கள் பின்னணியை உற்றாராய்ந்தால் வறுமையும், ஏழ்மையும் இருமைசித்திரங்களாயிருக்கும். பெருந்தோட்ட நகர்ப்புற மாணவர்கள் இதற்கு சற்று விதிவிலக்காயிருப்பர். இன்றைக்கும் அடிப்படை வசதிகளும் இல்லாத குடியிருப்பு, பாரபட்சமான பாதுகாப்பு, சலுகைகள் குன்றிய சுகாதாரம், இப்போதும் அப்படியே இருக்கும் போக்குவரத்து என எண்ணிலடங்கா சவால்களை கடந்து கொண்டுதான் இருக்கின்றனர் இச்சமூகத்தினர்.

சுமார் இரண்டு நூற்றாண்டுகளைக் கடந்தும் நிறைவேற்றப்படாத அடிப்படை தேவைகளையும், பாரபட்சமான சலுகைகளையும் கொண்ட சமூகமாக இருந்து வருகின்ற மலையகம் 200 ஆண்டுகளை கடக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் மலையக மக்களது வாழ்வியலை தேசியம் கடந்து சர்வதேசம் பேசுகிறது இம்மக்களது அடிப்படை உரிமைகளை பற்றி ஆராய்கிறது, அரசாங்கமும் இப்போது மலையக மக்கள் கடந்து வந்த பாதையை செப்பனிட பயணப்படுவதாய் காண்பிக்கின்றனர். இவ்வாறு தென்னிந்தியாவிலிருந்து வந்த ஒரு சமூகத்தின் ஏகப்பிரதிநிதிகளது வரலாறும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் குறித்த ஆய்வுகள் சமகாலத்தில் வலுப்பெற்றுள்ள நிலையில், இங்கு நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் அனைத்தும் வெறும் இலக்குகளாக மட்டுமே இருந்து வருகிறமையை சுட்டிக் காட்ட வேண்டும். ஆய்வுகள் அனைத்தும் அறிக்கையிடல்களாய் மட்டும் அமைந்திடாது அவை அபிவிருத்திக்கான வழிசமைக்க வேண்டும். அத்துடன் அடுத்த சந்ததியின் நிலைபேரான அபிவிருத்திக்கு இன்றே அடித்தளம் இட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இரட்டை நூற்றாண்டுகளாக கடந்து வந்த சவால்கள் மூன்றாம் நூற்றாண்டை அடையும் போதெனிலும் முழுமையாய் தீரிக்கப் பட வேண்டும்.

**- நந்தினி சங்கர்தாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ப்பனைக் கொன்ற ஆடுகளின் பெயராலேயே...

M.T.F. ருக்சானா

கடந்த ஒக்டோபர் மாதம் 7ம் திகதி அன்று ஆரம்பித்த பலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகளுக்கும், இஸ்ரேலுக்கு மான போரானது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இரண்டு தரப்பிலும் பல ஆயிரம் மக்கள் மரணித்திருக்கிறார்கள். எப்போதும் போல பலஸ்தீனத்தின் தரப்பிலேயே இறப்புகளும், அழிவுகளும் அதிகமாக உள்ளன. இதுவரை ஐந்தாயிரத்துக்கு மேற்பட்ட பலஸ்தீன குழந்தைகள் மரணித்திருக்கிறார்கள். பள்ளிவாயல்கள், வீடுகள், கட்டடங்கள் என்பதோடு மட்டுமல்லாமல் பாடசாலைகள் இன்னும் சொல்லப் போனால் மிகக் கடுமையான மனித உரிமை மீறலாக எல்லோராலும் பேசப்படுகின்ற வைத்திய சாலைகள், அகதிமுகாம்கள் மீதான தாக்குதல்களும் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜபலிய்யா அகதிமுகாமில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 90 பேர் மரணமடைந்துள்ளனர் என பலஸ்தீனத்தின் வபா செய்தித்தளம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனத்தின் ஊடகவியலாளர் ஹனீன் அலி இஸ்ரேல் நுஸைரத்தில் மேற்கொண்ட தாக்குதலில் மரணமடைந்ததுடன் ஒக்டோபர் 7ம் திகதியிலிருந்து இதுவரை இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்ட 95வது ஊடகவியலாளராக காணப்படுகிறார்.

காசா பகுதியில் உள்ள பலஸ்தீன மக்களை இரு மாதம் கடந்த நிலையில் இஸ்ரேலிய இராணுவம் தொடர்ந்து தாக்கி வருகிறது.

இஸ்ரேலிய இராணுவ செய்தித் தொடர்பாளர் பலஸ்தீன மக்களை காசாவின் தெற்கே உள்ள பகுதிக்கு செல்லுமாறு கூறியிருந்தும் காசாவின் தெற்கு எல்லை நகரமான ரஃபாவில் கூட இஸ்ரேல் தொடர்ந்து குண்டுகளை வீசி வருகிறது.



காசாவின் தெற்கு பகுதிக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, தண்ணீர், மருந்து என எவ்வித அடிப்படை வசதியும் வழங்கப்படவில்லை. எந்நேரம் வேண்டுமானாலும் தாக்குதல் இடம் பெறும் என்ற அச்சத்திலேயே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு பலஸ்தீன மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

கிட்டத்தட்ட பல லட்சம் பலஸ்தீன மக்களை உள்ளடக்கிய காசா பகுதியில் கிட்டத்தட்ட 50,000 கர்ப்பிணிப்பெண்கள் உள்ளனர். நாளொன்றுக்கு 150 பிரசவங்கள் அங்கு நடைபெறுகின்றன.

இஸ்ரேல் மின்சாரம் வழங்குவதை நிறுத்தி விட்டதால் கைத்தொலைபேசியின் ஒளியைப் பயன்படுத்தி பிரசவம் பார்க்க வேண்டிய நிலைக்கு காசாவில் உள்ள மருத்துவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். தொடர்ச்சியாக வைத்தியசாலைகளும் தாக்கப்பட்டு வருவதனால் மரணித்த மனிதர்களின் நடுவே இருந்து வைத்தியர்கள் நடத்திய மாநாடு பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரமில்லாத போது கைத்தொலைபேசியின் ஒளியிலேயே அறுவைசிகிச்சைகள் இடம்பெறுகின்றன. மின்சாரம் மட்டுமல்ல, தண்ணீர், மருந்துகள், எரிபொருள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்களையும் வழங்குவதை இஸ்ரேல் நிறுத்திவிட்டது.

காசாவுக்குத் தேவையான நீரில் கால் பங்கிற்கும் அதிகமான வீதம் இஸ்ரேல் வழங்கியதுடன், மீதமுள்ள நீர்த் தேவையானது கடல் நீர் சுத்திகரிப்பு மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. இப்போது மின்சார வசதிகள் நிறுத்தப்பட்ட நிலையில் இந்த சுத்திகரிப்பு செயல் முறையானது இடை நிறுத்தப்பட்டுள்ளது.

தண்ணீரை மறுத்து நீர் என்பதை ஒரு பேரழிவு ஆயுதமாக இஸ்ரேல் கையில் எடுத்துள்ளது. தொடர்ந்து மேற்கொண்டு வரும் தாக்குதல்களால் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் சேதம் அடைந்துள்ளன. இதனால் அங்குள்ள பல லட்சம் மக்கள் உப்பு நீரையே அருந்தி வருவதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. சுத்தமற்ற நீரை அருந்துவதால் வாந்தி பேதி, காய்ச்சல் மற்றும் பல்வேறு நோய்களுக்கு பலஸ்தீனர்கள் குறிப்பாக அங்குள்ள சிறுவர்கள் ஆளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

தண்ணீரை பேரழிவு ஆயுதமாக இஸ்ரேல் பயன் படுத்துவது பற்றி வோட்டர் ஜஸ்டிஸ் (Water Justice) என்ற அமைப்பு தொடர்ந்து ஆவணப்படுத்தியுள்ளது.

தண்ணீரைக் கொண்டு செய்யப்படும் அரசியலானது நாசிக்களின் அரசியலை ஒத்ததாகவே காணப்படுகின்றது. அவர்கள் போலந்து நாட்டை ஆக்கிரமித்த போது வர்சா எனும் பகுதிக்கு தண்ணீர், மின்சாரம் என்பவற்றை கிடைக் காமல் செய்தார்கள். அதை இப்போது மீண்டும் இஸ்ரேல் பலஸ்தீன மக்களுக்கு செய்து வருகின்றது.

தன்னை உலகிலேயே அதிக அடக்குமுறைக்குட் பட்டதாக கூறுகின்ற இஸ்ரேலிய தேசிய அரசானது, அதே நாசிக்களின் பாசிசத்தை ஒத்ததாகவே காணப்படுகின்றது. நாசிக்கள் எவ்வாறு யூதர்களை தம் இருத்தலின் அபாயமாக கருதினார்களோ, யூதர்களை மனிதர்கள் என்ற தரத்தில் இருந்து கேள்விப் படுத்தினார்களோ அவ்வாறே இன்று பலஸ்தீனர்களை இஸ்ரேலிய தரப்பு கையாண்டு வருகின்றது.

நாளுக்கு நாள் தீவிரமடையும் இஸ்ரேலிய தாக்கு தலால் மருத்துவமனைகள், அவசர சிகிச்சை வாகனங்கள் என்பன தொடர்ந்து சேதமடைந்து வருகின்றதுடன் மருத்து வர்கள் பெரும் நெருக்கடியைச் சந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காசாவில் உள்ள மருத்துவமனைகள் மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், மருத்துவ மனைகள் மீதான தங்களது 'போர்க் குற்றங்கள்' அனைத்தை யும் இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்று காசா மருத்துவர் ஒருவர் வலியுறுத்தியுள்ளார்

மருத்துவமனைகளை தாக்குவதானது சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறுகின்ற ஒரு செயலாக இருந்தும் இதனை இஸ்ரேலை பாதுகாக்கின்ற அமெரிக்கா அமைதியாக பார்த்துக் கொண்டே இருக்கிறது.

15 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையானது, ஐக்கிய நாடுகள் சபையின் மிகவும் பலம் வாய்ந்த ஒரு அமைப்பாக கருதப்பட்டபோதும் இன்று அது காசாவில் நடக்கும் அநீதிகளை பார்த்து எந்த இயங்குதலும், எந்த மறுப்பும் தெரிவிக்காமல் இருக்கிறது. வீட்டோஅதிகாரங்களைக் கொண்ட நிரந்தர உறுப்பு நாடு களுக்கு இடையில் நடக்கும் பனிப்போர் இதற்கு காரணமாக இருக்கிறது.

நான்கு முறைகள் முயன்றும் தோற்றுப் போன இந்த அமைப்பு கடந்த நவம்பர் 15 ஆம் திகதி காசாவில் உள்ள சிறுவர்களுக்கு பாதுகாப்பு மறுசீர்திருத்த மசோதாவை கொண்டு வந்தாலும், போர் நிறுத்தத்தினை மேற்கொள் வதற்கு அதனால் முடியாமல் போனது.

அமெரிக்க ஒக்ஸ்போம் தலைவரான அப்பே மேக்ஸ்மேன், சர்வதேச பாதுகாப்பு அமைப்பில் இருக்கும் நபர்களால் இன்னுமே போர் நிறுத்தத்திற்காக வாக்களிக்க முடியவில்லை என்பது மிகவும் வருத்தத்தை அளிப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுவாக இதனை எல்லோரும் பாலஸ்தீனத்தில் போராளிகள் தரப்பு தான் ஆரம்பித்தது என்று கூறுகிறார்கள். ஆனால் இந்த போரானது இன்று ஆரம்பித்த ஒன்றல்ல. 1947 ஆம் ஆண்டு இஸ்ரேல் என்கின்ற நாட்டை உருவாக் கும் எண்ணத்தோடும், 1948 ஆம் ஆண்டு அங்கீகாரத் தோடும் இஸ்ரேல் என்ற நாடு பலஸ்தீனத்திற்குள் உள் நுழைந்தோடு விதையிடப்பட்டு ஆரம்பித்தது.

இஸ்ரேல் என்கின்ற நாடு எவ்வாறு உருவாகின்றது? பலஸ்தீனத்தில் அவர்கள் ஏன் குடியேறினார்கள்? அவர் களை அங்கு குடியேற்ற வேண்டும் என்ற மனோநிலை எங்கிருந்து ஆரம்பித்தது? அவர்களை யார் குடியேற்றி னார்கள் என்பதை நாம் முதலில் ஆராய்வதன் மூலமாகவே இந்த பலஸ்தீன நில விடுதலைப் புரட்சியைப் புரிந்து கொள்ள முடியும். ஆரம்ப காலத்தில் ஐரோப்பாவில் யூதர்களுக்கு எதிரான மனோநிலையே காணப்படுகின்றது. இதனை அன்றைய காலத்தில் எழுதப்பட்ட இலக்கியங்களிலும் கூட காணலாம். யூத மக்களை கெட்டவர்களாக அல்லது பிழை செய்கின்ற மனிதர்களாக சித்தரிக்கும் போக்கு அன்றைய வெள்ளை இனவாதிகளிடம் காணப்பட்டது.


அப்போதைய காலப்பகுதியில் ஐரோப்பாவில் யூதர்கள் இருப்பது மிகப் பிரச்சினையை என்கின்ற வெள்ளைக் கிறிஸ்தவ ஆதிக்க மற்றும் அதிகார மனோநிலை காணப்படுகின்றது.

முதல் உலகப் போர் நடந்து கொண்டிருந்தபோதே, பாலஸ்தீனத்து மண்ணில் இஸ்ரேல் என்கிற யூத தேசம் உருவாவதற்கு பிரிட்டன் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருந்தது. 1917-ம் ஆண்டு பிரிட்டன் பல்போர் அறிக்கையில் இது திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது

உலகம் முழுவதையும் ஆக்கிரமிப்பு செய்து வந்த ஐரோப்பிய நாடுகளுக்கு ஐரோப்பாவில் இருந்த மிகப்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பெரிய பிரச்சனை அங்கு இருக்கும் சிறுபான்மை சமூகங்களை எப்படி கையாள்வது என்பதுதான். ஐரோப்பாவில் தேசிய அரசுகள் உருவாகும் போது சிறுபான்மை பிரச்சனைக்கு தீர்வாக இனசுத்திகரிப்பையே வைத்திருந்தார்கள். இதற்கு உதாரணமாக ஐரோப்பாவில் உருவாக்கிய முதலாவது தேசிய அரசான ஸ்பெயின் அங்கு இருக்கும் முஸ்லிம்களையும் யூதர்களையும் 1492ல் இனச்சுத்திகரிப்பு செய்து ஸ்பானிய தேசிய அரசை உருவாக்கிக் கொண்டது.

மேலும் ஐரோப்பாவின் நவகாலனிய ஆதிக்கத்துக்கு இஸ்ரேலிய குடியேற்ற காலனியம் பெரிய அளவுக்கு உதவி யாக இருக்கும் என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டார் கள். இதன் காரணத்தால்தான் இஸ்ரேலிய குடியேற்ற காலனித்துவத்தை உருவாக்க நாசிக்களின் இனப்படு கொலைக்கான இழப்பீடு என்ற பெயரில் மிகப் பெரிய ஒரு இழப்பீட்டு தொகையை வழங்கியது.

இதனை அன்டி செமட்டிசம் இனை சியோனிச கொள்கையால் சமப்படுத்துவது என்றார் தியோடர் ஹேர்ஷல்.

அன்டி செமட்டிஸம் உருவாகிய போது ஐரோப்பாவில் ஆதரவற்று இருந்த யூதர்களினை குடியேற்றுவதற்கு ஒரு இடம் தேவைப்பட்டது. காலனித்துவ நாடுகளினைக் கைப்பற்றிய பிரித்தானியா முக்கியமாக இரண்டு விடயங் களைச் செய்தது.ஒன்று அந்த நாடுகளை கைப்பற்றி அங்கிருந்த வளங்களைச் சுரண்டிக் கொள்வது மற்றது அங்குள்ள சுதேச மக்களை அழித்துவிட்டு அதற்கு பதிலாக தமது குடியேற்றங்களை மேற்கொள்வதாகும். அமெரிக்காவில் செவ்விந்தியர்களுக்கும் இதையே தான் செய்தார்கள். அதேபோல பலஸ்தீன மண்ணிலும் இது தொடர்ந்தது. இதன்படி யூதர்களை குடியேற்றம் செய்து அங்கிருந்த சுதேச அரேபிய இனத்தவர்களான பலஸ்தீனர்களை வெளியேற்றுவதற்கு தீர்மானித்தார்கள். குறிப்பாக சொல்லப்போனால் 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் யூதர்கள் இருப்பது பிரச்சினை என்கின்ற வெள்ளை ஆதிக்க மனோநிலையின் ஒரு அரசியல் செயற்திட்டமாகவே இதனை அவர்கள் செய்தார்கள்.

இதை எப்படி அணுக வேண்டும் என்றால் அப்போதைய தென்னாப்பிரிக்காவில் கறுப்பின மக்களும், ஆஸ்திரேலியாவில் பழங்குடியினர்களும், அமெரிக்காவில் பெரிய நாகரீகங்களை உடைய செவ்வந்தியர்களும் எதிர் நோக்கியதை ஒப்பிடுவதன் மூலமாக தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

அங்கு வாழ்ந்த மக்களை வெளியேற்றுவது நிலத்தை கைப்பற்றி கொள்வதற்கான ஒரே வழி எனவும், அதற்கு இடையூறாக இருக்கும் மக்களை இனச் சுத்திகரிப்பு செய்ய வேண்டும் எனவும் அவர்கள் நினைத்தார்கள்.

இன்னொரு கருத்தாடல் திணிப்பாக ஒரு நாட்டிற்கு உழைப்பினையும், தன்னை மேம்படுத்திக் கொள்வதற்காக செல்கின்ற மக்களையும், குடியேற்ற வாதத்தை நிறுவுவதையும் ஒரே வகையாகவே அணுக முற்படுகின்றனர்.இது அவர்கள் செய்கின்ற அராஜகத்தை நியாயப்படுத்துவதாக அமைகின்றது.

பலஸ்தீன நாடு என்று பெயரளவில் உள்ள காசா மற்றும் மேற்கு கரை ஆகிய பகுதிகளில் மட்டுமே பெரும் பாலும் பலஸ்தீனியர்கள் வாழ்கிறார்கள். 'மேற்கு கரை' என்பது இஸ்ரேலுக்கும் ஜோர்டான் நாட்டுக்கும் இடைப்பட்ட பகுதியாகும். மத்திய தரைக் கடலின் கடலோரம் உள்ள காசா பகுதி என்பது வெறும் 40 கிலோ மீட்டர் நீளமும் 10 கிலோமீட்டர் அகலமும் கொண்ட இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடைப்பட்ட ஒரு மிகச் சிறிய பகுதியாகும். காசா பகுதி தற்போது 'ஹாமாஸ்' என்ற போராளிகள் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மேற்கு கரை Palestinian Authority (PA) என்ற அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது.

1917 வரையிலும் இஸ்ரேலின் மொத்த நிலப் பரப்பிலும் பெரிய அளவில் அரேபியர்களும், சிறிய அளவில் யூதர்களும் வாழ்ந்து வந்தார்கள். 1948 வரையிலும் அந்தப் பகுதி ஆங்கிலேயர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டில் இருந்தது. இரண்டாம் உலகப் போருக்கு பிறகு, ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுதலை கொடுக்கும் முன்பே பல நாடுகளும் பல்வேறு விதத்தில் துண்டாடப்பட்டன. மத ரீதியாக இந்தியா-பாகிஸ்தான் என்ற பிரிவினை உருவாக்கப்பட்டதை போல இஸ்ரேல் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி அரேபியர்களுக்காக 'பலஸ்தீனம்' என்றும் மற்றொரு பகுதி யூதர்களுக்காக 'இஸ்ரேல்' என்றும் பிரிக்கப்பட்டது. அந்த பிரிவினையை ஏற்றுக் கொள்ளாத அண்டை நாடுகளான எகிப்து, சிரியா, ஜோர்டான், லெபனான் உள்ளிட்ட நாடுகள் அப்பொழுதே போர் தொடுத்தன. அமெரிக்காவின் ராணுவ பலத்தோடு இஸ்ரேல் போரை வெற்றி கண்டது.

தாங்கள் வாழ்ந்த பூமியில் இரண்டாம் தரக் குடிமக்கள் ஆக்கப்பட்டதைச் சகித்துக் கொள்ள முடியாத பலஸ்தீனியர்கள் ஜனநாயக ரீதியாகவும் மற்றும் போராட்டக் குழுக்களாகவும் பிரிந்து போராடத் துவங்கினார்கள். ஒரு கட்டத்தில் இஸ்ரேலியர்கள் முழு பலஸ்தீனத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

'பலஸ்தீனம்' என்ற ஒரு நாடு ஐ.நாவில் பெயரளவில் இருந்தாலும் அதற்குண்டான எல்லைகள் வகுத்துக் கொடுக்கப்படவில்லை. முதல் மற்றும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலகில் எத்தனையோ தேசங்களின் எல்லைகள் மறைந்து புதிய எல்லைகள் உருவாகிவிட்டன. ஆனால், பலஸ்தீன பிரச்சனைக்கு மட்டும் தீர்வு வரவே இல்லை.

இஸ்ரேல் போன்ற தேசிய அரசுகளின் பதட்டம் எப்போதும் அவர்களை அதிர்ச்சிக்குள்ளாகவே வைத்திருக்கிறது. அவர்கள் எப்போதுமே பலஸ்தீனத்தையும் அங்கிருக்கும், மக்களையும் தங்கள் எதிரிகளாகவே கருதுகின்றனர். இது தேசிய அரசின் ஒரு நிலைமையை ஆகும். அவர்கள் கூறும்போது பலஸ்தீனத்தில் 19ம் நூற்றாண்டு காலப்பகுதியில் பெரிய அளவிலான நாகரீகமடைந்த மக்கள் காணப்படவில்லை. அங்கு நிலமிருந்தது. ஆகவே நாங்கள் நிலம் இல்லாத மக்கள். அங்கு சென்று குடியிருக்கின்றோம் என்ற ஒரு விடயத்தையும் முன் வைத்தார்கள். ஆனால் உண்மையில் பலஸ்தீனத்தை பொறுத்தவரை அங்கே நாகரீகம் அடைந்த, விவசாயத்தை உச்சமாக மேற்கொண் டதுமான சுதேச மக்கள் காணப்பட்டிருக்கிறார்கள். இந்த யூத தேசிய அரசின் முக்கிய கொள்கையாக நாங்கள் யூத இனம். நாங்கள் காலம் முழுவதுமாக நசுக்கப்பட்டு, ஒடுக் கப்பட்ட இனக்குழுவாகவே காணப்படுகின்றோம். எனவே எங்களுக்கு தனி நாடு தேவை என்கின்ற கருத்து முன்னிறுத் தப்பட்டிருந்தது.

இஸ்ரேலும் அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்களும் தங்களின் நலன்களுக்காக எத்தனை பலஸ்தீன மக்களை வேண்டுமானாலும் படுகொலை செய்யும் என்பதே நிதர்சனமான உண்மை.

முன்னதாக, ஒக்டோபர் 21 அன்று இஸ்ரேல், காசாவின் வடக்குப் பகுதியில் வசித்து வந்த மக்களை 24 மணி நேரத்திற்குள் வெளியேறுமாறு உத்தரவிட்டிருந்தது. துண்டுப் பிரசுரங்களை வீசியது. வெளியேற மறுப்பவர்கள் பயங்கரவாதிகளாக கருதப்படுவர் என்றும் அச்சுறுத்தியிருந்தது. அவ்வாறு தொடர்ந்திருக்கும் மக்களைக் கொல்வதானது மனிதக் கேடயமாக போராளிகள் வைத்திருப் போரையே கொல்வதாக பிரகடனம் செய்கிறது.

காசாவின் வடக்குப் பகுதியில் இஸ்ரேலியப் படைகள் தரைவழித் தாக்குதலைத் தொடர்வதாலும், இஸ்ரேலின் குண்டுவீச்சு மற்றும் முற்றுகையாலும், உணவு, தண்ணீர், எரிபொருள், மின்சாரம் வழங்கப்படுவது கடுமையாகக் கட்டுப்படுத்துவதாலும், அடர்த்தியான தெற்கு காசாவில் ஒரு மனிதாபிமான பேரழிவு (humanitarian catastrophe) ஏற்படவுள்ளது என்று காசாவில் பணிபுரியும் உதவி அமைப்புகள் எச்சரித்துள்ளன. இப்போது உணவுப் பொருட்களைச் சுமந்து செல்லும் வண்டிகளை மக்கள் மறிக்கும் காட்சியை ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

அங்குள்ள மக்கள் தங்களது அடுத்து வேளை உணவுக்காக வெகு நேரம் ஏன் வெகு நாட்கள் கூட காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல், இந்த இனப்படுகொலையை அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி ஏகாதிபத்தியங்களின் துணையோடுதான் நடத்திவருகிறது. ஜோ பைடன் அரசாங்கம் இஸ்ரேலின் இந்த இனப்படுகொலையை ஆரம்பம் முதலே முற்றும் முழுதாக ஆதரித்து வருகிறது.

யூத மதவெறி இஸ்ரேலும் அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்களும் தங்களின் நலன்களுக்காக எத்தனை பாலஸ்தீன மக்களை வேண்டுமானாலும் படுகொலை செய்யும் என்பதே நிதர்சனமான உண்மை.

இறுதியாக இந்த நெடும் போரிற்கு முன்வைக்கும் two states solution பெயரளவிலேயே காணப்படுகின்றது. இது அங்கு வாழ்கின்ற சுதேச மக்களை தீண்டத் தகாதவர்களாக, ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பிற்குள் அடைத்து அவர்களுக்கு எவ்வித உரிமையும் கிடைக்காமல் செய்வதற்கான வழிமுறையாகும். இதனை காலனித்துவ நாடுகள் அமெரிக்காவின் செவ்விந்தியர்களுக்கு செய்தது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு அரசியல் நவீனத்துவம் முன்வைக்கின்ற தீர்வாக சியோனிச கட்டமைப்பிலான நாடொன்றினை அமைப்பதை விட பாரம்பரிய, வரலாற்றுப் பண்பாடுகள், மத நம்பிக்கைகள் அவை தொடர்பான பின்புலம் என்பவற்றை உறுதிப்படுத்தி உண்மையான ஜனநாயக முறையில் இயங்குகின்ற இருதரப்பு நாடுகளை உருவாக்குவது ஒரு சிறந்த தீர்வாக அமையும். இதற்கு உதாரணமாக தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களும், கருப்பினத்தவர் இணைந்து உருவாக்கிய தேசத்தினை நாம் குறிப்பிடலாம்.

பலஸ்தீனமானது அங்கு வாழ்ந்து வந்த சுதேச மக்களுக்கு சொந்தமானது. அது அங்கிருந்த சுதேச அரபிகளுக்கு, சுதேச யூதர்களுக்கு, சுதேச கிறிஸ்தவர்களுக்கும் சொந்தமானது. வெறுமனே இதனை மதப்போராக சித்தரிக்கும் காலனித்துவ மேற்கத்திய சக்திகளை தோற்கடிப்பதன் மூலம் மற்றும் தம் நிலத்தை மீட்கும் மக்களின் போராக அடையாளப்படுத்துவதன் மூலமாகவே பிரச்சினைக்குரிய தீர்வினை எட்ட முடியும் என்பதும் நிதர்சனமான உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகுழியினை நோக்கி...

## 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் பற்றிய அறிக்கை




**2024** ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமானது, விக்கிரமசிங்க - ராஜபக்- அரசாங்கத்தினால் நவம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மக்களின் வாழ்வினையும் எதிர்காலத்தினையும் இடருக்குள் தள்ளியிருக்கும் உத்தேச வரவு செலவுத்திட்டமானது, தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்களின் எச்சரிக்கைகளைப் புறக்கணித்து நாட்டின் பெண்களதும், உழைக்கும் வர்க்கத் தினரதும் அவலங்களின் சுமையினை அதிகரித்துள்ளது.

எவ்விதமான முறைசார் அங்கீகாரமுமற்ற, மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசாங்கத்தினால் வருகின்ற வருடத்தில் 60 புதிய சட்டங்களும், திருத்தங்களும் இயற்றப்படும் என வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப் பட்டிருப்பது எம்மை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. வரவிருக் கும் தேர்தல்களுக்கு முன்னர் நாட்டை விற்பதற்கான ஒரு சட்ட பொறிமுறையினை தயாரிப்பதற்கும் ஜனநாயகத்தினை மௌனிக்கச் செய்வதற்கும் அரசாங்கம் திட்டம் தீட்டி வருகின்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தங் களுக்கு அமைவாக வழங்கப்பட்ட கட்டமைப்பு ரீதியான மறுசீராக்கல்களுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவு, சமூக பாதுகாப்புக்கான செலவினங்களின் சுருக்கம், ஆட்சியாளர்களின் மோசமான பொருளாதாரக் கொள்கை மற்றும் ஆளுகையினால் ஏற்பட்ட வெளிநாட்டுக் கடன்களை அடைப்பதற்காக மிகவும் பாதிப்படைந்து வரும்மக்களிடம் இருந்து பணத்தை சுரண்டுதல் போன்ற நடவடிக்கைகள் நாட்டைப் படுகுழிக்குள் தள்ளும் என்பதில் ஐயமில்லை. அரசாங்கம் மறைமுக வரிகள் மூலம் வருமானத்தினை அதிகரிப்பதால் வறியோர் மீது சுமை களைச் சுமத்துகிறது என்ற நிபுணர்களின் ஆலோசனை களையும் வரி அமுலாக்கங்களில் அதீத நம்பிக்கை கொண்டு அரசாங்கம் செயல்படுகிறது என்றே தெரிகிறது.. இந்த வரவு செலவுத்திட்டமானது பெறுமதிசேர்க்கப்பட்ட வரி மூலமாகப் பெறப்படும் (VAT) வருமானத்தில் 107 சதவிகித அதிகரிப்பினைப் பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நாட்டின் ஒவ்வொரு நுகர்வோர் மீதும் பாதிப்பினை ஏற்படுத்த கூடியதாகும். ஆனால், மூலதன இலாபங்கள் மீதான வரி போன்ற சகல முற்போக்கான வரிகள் மீதான 25 சதவிகித அதிகரிப்பானது இவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதல்ல.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்து காணப்படுகிறது. அத்துடன் பயன்பாட்டுக் கட்டணங்கள் அளவுக்கு மீறி அதிகரிக்கப் படுவனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் எரிபொருள் மின்சாரம் மற்றும் நீருக்குமான அணுகல் இல்லாதிருக்கும் சூழலில் இவ்வாறான மறைமுகமான வரி இலக்குகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, அரசாங்கம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்னும் செல்வ வரியினை அறிவிக்காதிருப்பது செல்வந்தர்கள் தொடர்ந்தும் செல்வத்தினைத் திரட்டுவதற்கும், பாதுகாப்பதற்கும், பகட்டாய்க் காட்சிப்படுத்துவதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

செலவினப் பக்கத்தினை நோக்குகையில், மீண்டெழும் செலவினத்தின் அரைவாசியாக இருக்கும் வரவு செலவுத்திட்டத்தின் கணிசமான பகுதி (மொத்தத் தேசிய உற்பத்தியின் 8.4) அரசாங்கக் கடன்கள் மீதான வட்டியினைச் செலுத்துவதற்கே செல்லுகின்றது. எமது சமூகத்தின் நலனோம்புகைக்கு இன்றியமையாததான கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளை கொண்டு நடாத்துவதற்கு மிகவும் குறைந்த அயவிலான தொகைகளே ஒதுக்கப்பட்டுள்ளன. கொவிட் 19 பெருந்தொற்றின் காரணமாகவும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் தவறான முகாமைத்துவத்தின் காரணமாக் சுகாதாரத் துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. திறன்மிக்க தொழில நிபுணர்கள் தொடர்பில் சுகாதாரத் துறையில் நிலவும் நெருக்கடியினை வரவு செலவுத்திட்டமானது தீர்க்கவில்லை. அத்துடன் ஏற்கனவே உள்ள நிபுணர்களும்உள்நாட்டின் சுகாதாரதுறையினுள் தொடர்ந்தும் இருக்கின்றனர் எவ்விதமான நடவடிக்கைகளும்இல்லாதிருக்கின்றன.

இந்த வருடம், 274 விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளடங்கலாக மருத்துவ நிபுணர்கள் பெருவாரியாக நாட்டை விட்டு வெளியேறியிருப்பதை எம்மால் காண முடிகின்றது. நாட்டிலுள்ள 40 அரசாங்க வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் மேலும் 100 வைத்தியசாலைகள் மருத்துவப் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மூடப்படும் நிலையில் உள்ளதாகவும் சுகாதார அமைச்சர் இந்த வாரம் கூறியுள்ளார்.

மனித விருத்தியில் இலங்கையின் அடைவுமட்டத்திற்கு அத்திவாரமாக அமைந்ததும் நாட்டில் பெண்களினதும் சிறுமிகளினதும் முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகித்தது மான நாட்டின் இலவச சுகாதார சேவையினையும், இலவசக் கல்வியினையும் அழிப்பதற்கு அரசாங்கம் பொருளாதார நெருக்கடியினை ஒரு காரணமாகப் பயன்படுத்தி வருகின்றது. இத் துறைகளை வர்த்தகமயமாமக்குவதற்கு இட்டுச் செல்லும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை அரசாங்கம் முன்வைத்துள்ளது. அரச பல்கலைக்கழக முறைமை வீழ்ச்சியடையும் கட்டத்தில் இருக்கும் அதேவேளை, பல புதிய பல்கலைக்கழகங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் தனியார் பல்கலைக்கழகங்களை அங்கீகரிக்கப் போவதாகவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஏற்கனவே தெற்காசியாவில் கல்விக்காக மிக குறைந்தளவில் அரச நிதியினைச் செலவிடும் நாடாக இலங்கை இருந்து வருகின்றது. கல்வி மற்றும் சுகாதாரத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் கடந்த ஐந்து வருடங்களாகத் தேக்க நிலையிலேயே இருந்து வருகின்றன. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக மதிப்பிடப்பட்ட செலவினங்கள் 2022 ஆம் ஆண்டுக்கான செலவினத்தில் இருந்து விலகல் அடையவில்லை (மொத்தத் தேசிய உற்பத்தியின் 2% விடக் குறைவாக). இந்தச் சூழமைவில், தன்னிறைவடைந்த நிலைக்கு மாற்றமடையுமாறு அரச பல்கலைக் கழகங்களுக்கு அழுத்தம் வழங்குவதுடன் அவற்றின் மாணவர் அனுமதியின் எண்ணிக்கையினை அதிகரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பது நாட்டின் இலவச உயர் கல்வியை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும். மேலும், மாணவர்களுக்குக் கடன் திட்டத்தினை வழங்குவதற்கான அரசாங்கத்தின் முன்மொழிவானது கல்வி கற்ற புதிய தலைமுறையினர் கடன்காரர்களாவதற்கே வழியமைப்பதுடன் குடும்பங்களின் கடன் சுமையினையும் அதிகரிக்கும். ஒட்டுமொத்த இளம் தலைமுறையினரும் கொவிட் -19 பெருந்தொற்றின் தாக்கங்களுக்கும் தற்போதைய பொருளதார நெருக்கடிக்கும் முகங்கொடுத்தவர்களாகவும் இருக்கும் நிலையில் அரச கல்வி முறைமையில் வளங்கள் இல்லாத நிலையினை 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தீவிரப்படுத்தியுள்ளதால் தங்களின் வாழ்க்கைக்கான வாய்ப்புக்களையும்

இத்தலைமுறையினர் மேலும் இழக்கும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

அரசாங்கம் தற்போது தெரிவு செய்யப்பட்ட சில ஆரம்பப் பாடசாலைகளில் மாத்திரமே பகலுணவினை வழங்கி வருகின்றது. மிகவும் தொலைவான மற்றும் வறிய பிரதேசங்களைச் சேர்ந்த இடங்களில் உள்ள ஆரம்பப் பாடசாலைகள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலான ஆரம்பப் பாடசாலைகள் பகல் உணவு வழங்கும் திட்டத்திற்கு எவ்விதமான அரச உதவியும் வழங்கப்படாத நிலையில் கைவிடப்பட்டுள்ளன. உணவொன்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை நாளாந்த அடிப்படையில் போஷாக்கான உணவினை வழங்குவதற்குப் போதாததாக உள்ளது. மேலும், இரண்டாம் நிலைக் கல்வி வழங்கும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கான திட்டம் இல்லாதிருப்பதானது மாணவர்கள் அவர்களின் சாதாரண தரங்களை அடைவதற்கு முன்னரே பாடசாலையினை விட்டு இடைவிலகுவதற்கான வாய்ப்பினை அதிகரிக்கின்றது. மாறாக, சுகாதாரத்திற்கு இலவச அணுகலைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் பிரச்சினைமிக்கதும் தேவையற்றதுமான சுரக்ஷா சுகாதாரக் கொள்கைக்கு அரசாங்கம் 2000 மில்லியன் ரூபாவினை முன்மொழிந்துள்ளது. சகல பாடசாலைகளுக்குமான பகலுணவுத் திட்டத்தினை அமுல்படுத்தப்படுவதற்கான அவசரத் தேவையுள்ளது என்பதையும் கிடைக்கக் கூடியதாக உள்ள நிதி இதனை முன்னுரிமையானதாகக்கொண்டு ஒதுக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம். இலங்கையின் எழுத்தறிவு வீதமும் கல்வி அடைவுகளும் பின்னடைவாகு வதற்கான ஆபத்துக் காணப்படுகின்றது. இது வரவிருக்கின்ற பல தலைமுறைகளையும் ஒட்டுமொத்தச் சமூகத்தினையும் பாதிக்கும்.

பெரும்பான்மையான இலங்கையர்கள் அவர்களின் வாழ்வாதாரத்திற்காகத் தங்கியிருக்கும் விவசாயம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்றொழில் துறைகளை அரசாங்கம் தொடர்ந்தும் புறக்கணித்து வருகின்றது. மக்களின் வாழ்வாதாரங்களில் தன்னிலையான முதலீடுகளை மேற்கொள்ளாமல் அவர்கள் மீது சுமைகளைச் சுமத்துவது, காணிகளைப் பாராதீனப் படுத்துவது அதனால் விவசாயத் துறை பெரும் கூட்டுத்தாப னங்கள் வசமாகும் பாரதூரமான அபாயத்தினையும் எதிர்நோக்கும் நிலைக்கு ஆளாக்கும். விவசாயக் காணி மறுசீராக்கலுக்கான அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் அவ்வாறான விளைவுகளை உருவாக்கு வதற்காக வேண்டுமென்றே முன்வைக்கப்பட்டவை போன்றே தென்படுகின்றன. விற்பனை செய்யத்தக்க காணிகள் 20 லட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'உருமய' நிகழ்ச்சித்திட்டம் முன்மொழிகின்றது. ஏற்கனவே கடன் சுமைக்கு ஆளாகியுள்ள விவசாயிகளின் காணிகளையும் அவர்களிடம் இருந்து பறிப்பதே இதன் உள்ளார்ந்த உபாயமார்க்கம் என காணி உரிமைகள் செயற்பாட்டாளர்களும் விவசாயி களின் உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களும் எச்சரித் துள்ளனர். விவசாயத்திற்கு நிலைபேறான உதவிகள் பெரிதும் தேவைப்படுபவர்களாகச் சிறு விவசாயிகள் உள்ளனர். இறுதியில், கடனினால் உருவாக்கப்பட்ட காணி உடைமை யிழப்பானது உணவுப் பற்றாக்குறையினைத் தீவிரப்படுத்தி அதனால் சமூகத்திலும் நாட்டிலும் சகல துறைகளிலும் மீள முடியாத நீண்ட காலத் தாக்கங்களை ஏற்படுத்தும். இன்று, பல குடும்பங்கள் நாளொன்றுக்கு ஒரு வேளை உணவினை மாத்திரமே உட்கொண்டு வாழ்நாளைக் கழிக்கின்றன. ஆனால் வரவு செலவுத்திட்டமோ இந்தச் சூழ்நிலையின் பாரதூரம் பற்றிய விழிப்புணர்வினைப் பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை. சிறார்களின் மத்தியில் அதிகரித்து வரும் போஷாக்கின்மை அல்லது தொடர்ந்து நிலவி வரும் உணவுப் பற்றாக்குறை போன்ற சவால்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எவ்விதமான காத்திரமான கொள்கை இடையீடுகளையும் மேற்கொள்ளவில்லை அல்லது வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை மேற்கோள்ளவுமில்லை. 2022 ஆம் ஆண்டில், ஐந்து வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறார்களில் 42.9% குறைவான போஷாக்குடையவர்களாகக் காணப்பட்டனர். 2023 மார்ச் மாதமளவில் ஆறு மாதங்களுக் கும் 59 மாதங்களுக்கும் இடைப்பட்ட சிறார்களில் 19.8% போஷாக்கின்மையின் மிகத் தீவிர வடிவமான எடை குறைவடைதலினால் பாதிப்படைந்தவர்களாகக் காணப் பட்டனர். 2023 நவம்பர் மாதமளவில் 12 மற்றும் 13 வயதுக் குழுவைச் சேர்ந்த சிறார்கள் பாடசாலையினை விட்டு இடைவிலகுவதில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது எனக் குடும்ப சுகாதாரப் பணியகம் எச்சரிக்கை வெளியிட்டிருந்தது.

குறுகிய அடிப்படையில் இலக்கு வைக்கப்பட்ட அசுவெசும சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் இருந்து நாட்டின் வறிய மற்றும் முறைசாராத் தொழிலாளர்கள் பலர் விலக்கிவைக்கப்படுகின்றனர் என எமது குழுமம் முன்பு எச்சரித்திருந்தது. உதவியினைப் பெறுவதற்கான தகைமை தொடர்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட மற்றும் முன்பு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த தனிநபர்களைக் கட்டம் கட்டமாகத் திட்டத்தில் இருந்து அகற்றுவதை நாம் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றோம். திட்டத்தில் உள்ளடக்கப்படாதவர்களுக்கான மேன்முறையீட்டுச் செயன்முறை போலியானதாகவும் நிர்வாகத் தாமதங்கள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் மிகவும் வலிமிக்கதான நிகழ்ச்சிநிரலால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர் களுக்குப் பாதுகாப்பினை வழங்குவது என்பது அன்னியப் பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. இருப்பினும், சர்வதேச நாணய நிதியத்தினால் ஆணை வழங்கப்பட்ட சமூகப் பாதுகாப்புத் தளத்திற்கு இந்த வரவு செலவுத்திட்டம் தொடர்ந்து இயைபுறுகின்ற அதேவேளை, காசு பரிமாற்றத் தின் அடிப்படையிலான இலக்குவைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பிற்காக மொத்தத் தேசிய உற்பத்தியின் வெறும் 0.6 சதவிகிதமே ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து மக்களுக் கும் கிடைக்குகூடிய சமூகப் பாதுகாப்புக்கான நிபுணர்களின் அபிப்பிராயத்தினையும் மக்களின் கோரிக்கையினையும் அரசாங்கம் தொடர்ந்தும் புறக்கணித்து வருகின்றது.

கொவிட் -19 பெருந்தொற்றின் போது அதிகரித்து தற்போது இந்தப் பொருளாதார நெருக்கடியின் போது தொடர்ந்தும் அதிகரித்து வரும் வீட்டு வன்முறைப் பிரச்சி னையினைத் தீர்த்து வைப்பதற்கு வரவு செலவுத்திட்டம் தவறிவிட்டது. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச் சுக்கான அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது. பொருளதார நெருக்கடி யினால் உழைக்கும் பெண்களும் சிறார்களுமே மிக மோச மாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு வரவு செலவுத்திட்டத்தில் எவ்விதமான நிவாரணமும் வழங்கப் படவில்லை. இந்தச் சூழமைவில், பால்நிலைச் சமத்துவத்திற் காகச் சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் அரைமனதுடன் காட்டியிருக்கும் சமிக்ஞைகளால் நாம் கவரப்படவில்லை என்பதுடன் அரசாங்கமானது பெண்க ளுக்கு வெளிப்படையாகவே எதிரானதாக இருக்கும் மற்றும் உழைக்கும் மக்களுக்கு எதிரானதாக இருக்கும் பொருளதாரக் கொள்கைகளுடனான வரவு செலவுத்திட்டத் தினையே சமர்ப்பித்துள்ளது.

பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமம் என்பது பெண்ணிலைவாத பொருளியலாளர்கள், அறிஞர்கள், செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என நாடு முழுவதுமிருந்து இலங்கையின் தற்போதைய பொருளதார நெருக்கடியுடன் அவர்கள் பணியாற்றும் சமுதாயங்களின் வாழ்க்கை யதார்த்தங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைப் பரிந்துரைகளைப் புரிந்துகொள்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் அவற்றுக்குக் குரல் கொடுப்பதற்கும் 2022 ஏப்ரலில் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டாகும்.

**-பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிலைவாதக் கோட்பாடு (Feminist Theory)




பெண்ணிலைவாதம் என்பது பெண்களின் பிரச்சனைகள் பற்றிய விவாதத்தின் ஆரம்பக் கருத்துகளின் வரிசையில் நிறுவப்பட்ட ஒரு கருத்தியல் ஆகும்.

**லிபரல் பெண்ணிலைவாதம்**

நவீன தேசிய அரசின் எழுச்சி மற்றும் வளர்ச்சியுடன், மேற்கத்திய சமூகங்களில் உள்ள கடுமையான ஆணாதிக்க கருத்துக்கள் பெண்களின் நிலையை பாதித்தன. நவீன தேசிய அரசின் சித்தாந்தம், தாராளமயம் மற்றும் தனித்துவத்தை இது வலியுறுத்துகிறது. ஆனால் இந்த தாராளவாதம் அடிப்படையில் ஆண் மற்றும் பெண்களை வேறுபடுத்துகிறது. பாலினம், அரசியல் துறையில் கொள்கை உருவாக்கம் போன்றவற்றைச் செய்யும் திறன் பெண்களுக்கு இல்லை என்று ரூசோ நம்பினார். தாராளவாத பெண்ணிலைவாதத்தின் வரலாறு மற்ற ஆணாதிக்கக் கோட்பாடுகளை விட நீண்டது. தாராளவாத பெண்ணிலைவாதம் ஆண்கள் மற்றும் பெண்கள் சமத்துவம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தாராளவாத பெண்ணிலைவாவாதிகள் மனித கண்ணியம் மற்றும் சமத்துவம் பற்றிய தாராளவாத கருத்துக்களுக்கும், பெண்களின் வாழ்க்கையின் உண்மையான யதார்த்தத்திற்கும் இடையிலான முரண்பாடுகளை கடுமையாக எடுத்துக்காட்டினர். பாலின அடிப்படையிலான பாகுபாடு, குடும்பம், சமூகத்தில் பெண்களின் இரண்டாம் நிலையைப் பகுத்தறிவுபடுத்தும் பொதுவான நம்பிக்கைகளைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தனர். தாராளவாத பெண்ணிலைவாதம் தாராளவாதத்தின் தத்துவ மரபுகளைப் பின்பற்றுகிறது. 17 ஆம் நூற்றாண்டின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிற்பகுதியிலிருந்து 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை மேற்கத்திய உலகில் நிகழ்ந்த சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களின் விளைவாகும். அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் விதிகளின் முன்னேற்றம் காரணமாக, பாரம்பரியத்தை விட தர்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்த மாற்றத்தின் காலம் ஞானத்தின் வயது அல்லது அறிவொளியின் வயது என்று அழைக்கப் படுகிறது. இந்த காலகட்டத்தில், சமூக-பொருளாதார மாற்றங்கள் சமூக இடப்பெயர்வுக்கு வழிவகுத்தன. இது சர்ச், பிரபுத்துவம், செல்வந்தர்களின் பாரம்பரிய அதிகாரத்தை சவால் செய்யும் கோட்பாடுகளில் விளைந்தது. முழு குடியுரிமை மறுக்கப்பட்ட அனைத்து குழுக்கள் மற்றும் வகுப்புகளில், மிகவும் வெளிப்படையான வழக்கு பெண்கள், அவர்களின் விலக்கு வாக்குரிமை மற்றும் சட்ட சமத்துவம் ஆகியவற்றிலிருந்து விலக்கப்பட்ட தத்துவ வாதங்களை அடிப்படையாகக் கொண்டது.

## முக்கிய ஆதரவாளர்கள் மற்றும் அவர்களின் பெண்ணிலைவாதம் பற்றிய கருத்துக்கள்-

தாராளவாத பெண்ணிலைவாதிகளில் ஆண்களும், பெண்களும் உள்ளனர். பதினைந்தாம் நூற்றாண்டில், இத்தாலியின் கிறிஸ்டினா டி பிசான், பாலினங்களுக்கு இடையிலான பரஸ்பர உறவுகளைப் பற்றி முதன்முதலில் எழுதினார். ஜெர்மி பென்தம், 1781 இல் தனது புத்தகத்தில் (ஒழுக்கங்கள் மற்றும் சட்டங்களின் அறிமுகம்) பெண்களின் பலவீனமான புத்திசாலித்தனத்தை சாக்குப்போக்கு செய்தார். பல நாடுகளின் உரிமைகளை பறிக்க பெண்களின் வாக்களிக்கும் உரிமை மற்றும் அரசாங்கத்தில் பங்கேற்பதை அவர் வாதிட்டார். இந்த ஸ்ட்ரீமில் மேரி வோல்ஸ் டோன்கிராஃப்ட், ஹாரியட் டெய்லர், ஜான் ஸ்டுவர்ட் மில், பெட்டி ஃப்ரீடன், குளோரியா ஸ்டெய்னெம் மற்றும் ரெபேக்கா வாக்கர் ஆகியோர் அடங்குவர்.

மேரி வோல்ஸ்டோன்கிராஃப்ட் பெண்களின் ஆளுமையின் வளர்ச்சியை வலியுறுத்துகிறார். இதற்காக அவர் சமமான கல்வியை வலியுறுத்துகிறார். ஆண்களையும் பெண்களைப் போல் மூடிய சூழலில் வைத்திருந்தால் அவர்களும் பெண்களைப் போலவே நடந்து கொள்வார்கள் என்று நம்பினார். 1792 இல் லண்டனில் முதன்முதலில் வெளியிடப்பட்ட "பெண்களின் உரிமைக்கான நியாயம்" என்ற கட்டுரையில் அவர் பெண்களின் உரிமைகளை வலுவாக வாதிட்டார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் சிறந்த கல்வி குறித்த ரக்ஷயர்களின் கருத்துக்களை அவர் எதிர்த்தார்.

பெண்களின் வாக்குரிமையை ஆதரிப்பதன் பின்னணியில் உள்ள மில்லின் நம்பிக்கை என்னவென்றால், பெண்களின் வாக்குரிமையால் சமூகம் பெரிதும் பயனடையும், வாக்களிக்கும் உரிமையைப் பெறுவதன் மூலம் ஒரு பெண்ணின் மனதில் பொறுப்பு உணர்வு உருவாகும். மேலும் குடும்பத்தில் உள்ள சட்ட ஏற்றத்தாழ்வு முடிவுக்கு




வருவதால், குடும்பம் ஒரு குடும்பமாக மாறும். ஆனால் பெண்களின் சமத்துவமின்மையின் ஆழத்தைப் பற்றிய ஹாரியட் டெய்லரின் புரிதல் மில்லின் கருத்தை விட ஆழமானது என்றும் அவரது கருத்துக்கள் மில்லின் கருத்தை விட பெண்ணிலைவாதம் சார்ந்தவை என்றும் சூசன் மல்லர்ஓகின் கூறுகிறார். தி சப்ஜெக்ஷன் ஆஃப் வுமன் இல், திருமணமான பெண்கள் வேலைக்குச் செல்வது வீட்டைக் கெடுக்கும் மற்றும் குழந்தைகளின் வளர்ப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் மில் நிராகரிக்கிறார். அதேபோல், சூசன் மவுலர், ஹாரியட் டெய்லர் கருத்துப்படி, திருமணம் மற்றும் விவாகரத்து செய்யப்பட்ட சூழ்நிலைகள், பெண்களின் பொருளாதார தன்னம்பிக்கைக்கு ஆதரவாக இருந்தது.

இந்த ஆரம்பகால தாராளவாத பெண்ணிலைவாத கருத்துக்கள் அவை தோன்றிய சகாப்தத்திற்கு மிகவும் தீவிரமானவை. இந்த யோசனைகள் பெண்கள் வாக்குரிமை அமைப்புகளை நிறுவுதல், சிறப்புப் பள்ளிகளை நிறுவுதல், கல்வி மற்றும் ஊதிய வேலை நிலைமைகளில் பெண்களின் பங்கேற்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் பிற அமைப்புகளில் உச்சத்தை அடைந்தன.

## சோசலிஸ்ட், மார்க்சிஸ்ட் பெண்ணிலைவாதம்:

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், முதலாளித்துவ அமைப்பு மற்றும் தொழில்களின் வளர்ச்சியுடன், வீட்டிற்கு வெளியே பெண்களின் பங்களிப்பும் அதிகரிக்கத் தொடங்கியது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, சம்பளம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தது. சோவியத் யூனியனின் சர்வாதிகாரத்திற்கு எதிராக 1956 ஆம் ஆண்டு ஹங்கேரியில் நடந்த எழுச்சிக்குப் பிறகு, பெண்கள் இடதுசாரி இயக்கங்களில் தீவிரமாக இருந்தனர். ஆனால் இந்த இடதுசாரி அமைப்புகளின் தன்மையும் ஆணாதிக்கமாக இருந்தது. 1960களில் புதிய இடதுசாரி இயக்கத்தில் செயல்பட்ட பெண்கள் சமத்துவத்தைக் கோரியபோது தலைமை அவர்களைச் சிறுபிள்ளைத்தனமாகக் கருதி ஓரங்கட்டியது. மேலும் இங்கிருந்து மேற்குலகில் உருவான பெண்ணிலைவாதத்தின் இரண்டாம் கட்டம் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சமர்த் மற்றும் அவரது எண்ணங்கள்**

பார்பரா எஹ்ரான்ரிச் தனது கட்டுரையில் சோசலிசம் என்றால் என்ன? சமூகத்தில் மார்க்சியத்திற்கும் பெண்ணிலைவாதத்திற்கும் இடையிலான சுரண்டலைப் பற்றி விவாதித்து, சில ஒப்பீட்டு முடிவுகளை முன்வைத் துள்ளார். மார்க்சியம் ஜனநாயகம் மற்றும் பன்மைத்துவத்தின் உண்மையான தன்மையை அம்பலப்படுத்துவதைப் போலவே, பெண்ணிலைவாதம் ஈரமான போர்வைக்குள் மறைந்திருக்கும் ஆண் ஒடுக்குமுறையின் உண்மையான தன்மையை வெளிப்படுத்துகிறது. பெண்ணிலைவாதிகள், இந்த எங்கும் நிறைந்த பாலின அடிப்படையிலான சமத்துவ மின்மைக்கான காரணத்தைக் கண்டறிய முயன்றபோது, இருவரின் உடல் அமைப்பு முதலில் அதன் அடிப்படையாகக் குறிப்பிடப்பட்டது. பெண்களை அடக்க மனிதன் தன் உடல் வலிமையை தவறாக பயன்படுத்துகிறான். பார்பரா மேலும் கூறுகையில், மார்க்சியத்தையும் பெண்ணிலை வாதத்தையும் இணைத்து சோசலிச பெண்ணிலைவாதத்தின் கருத்தியல் உருவாகியுள்ளது. முதலாளித்துவத்தின் பொருளாதார அடிப்படையை மார்க்சியம் சுட்டிக்காட்டுவது போலவே, சோசலிச பெண்ணிலைவாதம் பரவலான பாலின அடிப்படையிலான சமத்துவமின்மையை முதலாளித்துவ சமூகத்தின் பண்பாகக் கருதுகிறது. இந்த ஏற்றத்தாழ்வு காரணமாக, பெண்கள் வீட்டிலும் வெளியிலும் சுரண்டலுக்கு ஆளாக நேரிடுகிறது. வேலை பாலின அடிப்படையில் பிரிக்கப்படுகிறது மற்றும் அவர்கள் செய்யும் வேலை தாழ்ந்ததாக கருதப்படுகிறது.

சமூகத்தைப் பற்றிய சோசலிச பெண்ணிலை வாதிகளின் சிந்தனை பொருளாதாரம் மட்டும் அல்ல. உற்பத்தி செயல்பாட்டில் இனப்பெருக்க வேலை வருகிறது என்று அவர்கள் நம்புகிறார்கள் (இது வீட்டில் உள்ள பெண்களால் செய்யப்படுகிறது). பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட உழைப்பு, ஒரு வகையில் பெண்கள் மீது திணிக்கப்படுகிறது. அதுபோலவே ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்களின் பாலுறவு நடவடிக்கைகளும் ஆண்களின் விருப்பத்திற்கேற்ப நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இலவச இனப்பெருக்கம் மற்றும் பாலியல் செயல்பாடுகளுக்கு, சுரண்டலை முடிவுக்குக் கொண்டுவருவது அவசியம் என்று நம்புகிறார்கள், இது முதலாளித்துவ அமைப்பு மற்றும் ஆணாதிக்கம் முடிவுக்கு வரும்போது மட்டுமே நடக்கும். எனவே, பொது மற்றும் தனியார் துறைகளில் முறையே ஆண் மற்றும் பெண்களின் மேலாதிக்கத்தின் தாராளவாத விளக்கத்தை சோசலிச பெண்ணிலைவாதம் ஏற்கவில்லை.


31 October 2015

Manoj gupta pathik

ஹிந்தி - தமிழ் மொழி பெயர்ப்பு:

**M.Z.F. இல்மா.**

(கிழக்குப்பல்கலைக் கழகம்)




**தன் இளமையில்**
**ஓடாய்த் தேய்ந்து**
**அயராது கண் விழித்து**
**தன் சொந்தங்களை**
**முத்துக்களும்**
**மாணிக்கங்களுமாய்ப் பெருக்கி**
**கடமை முடிந்ததும்**
**ஓய்வு காலத்தை**
**நாலு கால் கட்டிலுக்குள்**
**முடக்கிக் கொண்டாள்**

2022ம் ஆண்டு பெண் சஞ்சிகையில் வெளிவந்த இந்தக் கவிதையின் இவ் வரிகள் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. அவள் ஒரு பெண்ணாக இருந்தாலும் கனிதரும் நாவல் மரம்போல் தனது கடைசி வாழ்விலும் தனது அயராத உழைப்பை தம் சந்ததிகளுக்காக விட்டுச் செல்லும் உண்மையான (பாட்டி) பெண் இவள் மிகவும் பெருமையாக உள்ளது.


**ஜே. சந்திரா -** பால்சேனை, வாகரை

("பெண்" 2022 சஞ்சிகையில் வெளிவந்த சௌமியின் கவிதை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச(சியல்)யந்திரம்



ஆடு மேய்ப்பததாயினும்
அரசுக்கு மேய்க்கணும் அறுதி வரை
வாழ்ந்து முடிக்க அடைபடாத ஓய்வூதியம்

டொப்பான மாப்பிள்ளையென்றா
டவுசர் போட்ட ஒருவர் வேணும்
அப்பாக்களின் கௌரவத்திற்கு
சோக்கான ஜோடி தெரிவு

ஃபுல் ஸ்லீவும் டையுடனும்
மூடிய அறையில் அமர்ந்திருந்தா
செருப்பையும் கழட்டி விட்டு
கைகூப்பி ஐயா எங்கனம்

தூசு துடைக்கவும்
குனிந்து கூட்டிப் பெருக்கோமாய்
அலுவலக பணியாளர்கள் அன்று
அது மட்டுமா அன்பின் அடையாளங்கள்

ஆடை பாதி ஆள் பாதி
ஆளுமையின் புருஷ லட்சணங்கள் ஆளாரு?
அலுவலர் யார்? என்று அறிய முடியாது அவலம்

ஆம் கட் சட்டையும் பிட்ஜீன்சும்
அயன் இல்லா உடைகளாமே
மின்கட்டண அதிகரிப்பின் அறுவடைகள் இவைகள்
அரச தொழில் வருமானம் ஆறு நாளுக்கும் போதாது
அடுத்த தொழிலொன்று தேடி அலைவதும் அலுவலர் நிலைமை

நேர்காலம் பாக்கொண்ணா இருந்து பணி செய்யொண்ணா
அவிழ்த்து விட்ட மாடு போல கட்டுப்படுத்த யாரும் வாணா

நேர்மையும் திறமையும்
நேராக குப்பைத் தொட்டியில் எறியும் காலம் இதுதானோ...
இல்லையெனில் எழுதுவேன் அவதூறு

தலைமை அதிகாரி
எல்லோருக்கும் தலையாட்டும் ஒரு பொம்மையாக
தனக்கொரு கதிரையும் பதவியும் தக்க வைக்க வேறு வழி இல்லை

அரசியலின் ஆதிக்கம் இன்று
அடிமட்ட பதவி நியமனத்தில்
இனி இருந்து தான் பார்க்கணும்
என்னென்ன சீரழிவோ.....

**- ஜாஹிதா ஜலால்தீன்**

# கரையைத் தேடி நடந்திடுவோம்



**எதை வழங்கப்போகிறோம்**
**எதிர்காலத்திற்கு ?**
**நொண்டிச் சாட்டுக்களையா?**

மருத்துவப் பிரிவில் நல்ல நடைமுறை வேண்டும்
மருத்துவப் பிரிவில் நல்ல வைத்தியர் வேண்டும்
எங்களுக்கான தனித்துவம் வேண்டும்
எங்கள் உரிமையைப் பெற நல்ல அனுகுதல் வேண்டும்

வாழ்க்கையில் நல்ல வசந்தங்கள் வேண்டும்
பயணம் செய்யவே நல்ல வசதிகள் வேண்டும்
எங்களுக்கான தனி ஆசனம் வேண்டும்
பாதுகாப்பான பயணங்கள் வேண்டும்
புறக்களிக்காத உறவுகள் வேண்டும்
நல்ல உறவுகள் வேண்டும்

நாட்டில் நல்ல அரசாங்கம் வேண்டும்
மாற்றுத்திறனாளிகளை அறிந்திட வேண்டும்
எங்களுக்கான அடையாள அட்டை வேண்டும்
வாழ்க்கையில் நல்ல வசந்தங்கள் வேண்டும்

**-பிரேமா**

மாற்றம் பல செய்திடுவோம்
மாறுபடும் உலகினிலே
மாற்றுத் திறனாளி நாங்கள்
மாறுதலை தான் படைப்போம்

அச்சம் கொள்ளத் தேவையில்லை
அறிவு செய்து தான் நடப்போம்
கரைந்து செல்லும் காலமுண்டு
கரையா மனங் கொண்டிடுவோம்

சிந்தனைக்குள் சக்தியுண்டு
சிறகு தட்டி எழுப்பிடுவோம்
சிறக்கும் நமக்குள் நம்பிக்கை
சிறந்து விட வழி சமைப்போம்

தனிமையில்லை நமக்குள் இனி
தற்துணிவை வளர்த்திடுவோம்
கூவும் சேவல் விடியலுக்கு
கூச்சம் இங்கே இல்லை என்போம்


வழி சமைக்கும் காலமுண்டு
வந்து சேர்வோம் நாங்களெல்லாம்
வந்த குறை ஏதுமில்லை
வருவதற்கு விடியலுண்டு

கடலுக்கோர் பாலஞ்செய்து
கடந்து செல்ல மனது கொள்வோம்
கங்கை நதி வேகம் போல்

**- லலிதா**

# நெய்யும் புழு

பட்டுக்களைத் தருகிறேன்
பலவந்தமாய்ப் பறிக்காதே
என்னை உருக்கத் தயார்
செய்கிறேன்
உன் கோவம் கொண்டு
காய்க்காதே
எரி மலையில் வாசம்
செய்பவள்
உனக்கான தென்றலையும்
எனக்கான புயலையும்
எனக்குள் கலந்தே
வைத்திருக்கிறேன்
சிறிய கதிரால்
இருளை மோத அழைக்கிறேன்
ஆள்காட்டிப் பறவையிடம்
என் இடத்தை பத்திரப்படுத்தச்
சொல்லி விட்டேன்
உனக்கான பட்டை
நெய்த படியே காலம் ஓடுகிறது.



**- நிலாந்தி சசிகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த காலங்கள்
## இனி வரப்போவதில்லை

இன்றைக்கு 11 வருடங்களுக்கு முன்பு (2009 இல் இன்று சரியாக 14 வருடங்கள் ஆகிறது) நானும் எனது 16 வயதில் பல்வேறு ஆசைகள், கற்பனைகள், ஆனந்தங் களோடு எனது பெண்மையை பகிரங்கமாக வீட்டில் வெளிப்படுத்தியிருந்தேன்.

எல்லா திருநர் குழந்தைகளின் பெற்றோர்கள் போலவும் எனது பெற்றோரும் கவலை மற்றும் ஒரு வித குழப்பகர மனநிலையால் என்னை ஆதரிக்கவில்லை.

"என்னை ஏற்றுக்கொள்ளுங்க, இன்றிலிருந்து என்னை பொம்பள பிள்ளையா மாற்றி நடத்துங்க..." என்று சின்ன மனதில் கட்டியெழுப்பிய பல்வேறு கனவுக ளோடும், ஆசைகளோடும் வீட்டில் மன்றாடிக் கதறினேன் அன்று. யாருமே என்னை ஏற்கவில்லை

அப்போது என்னையும் இவ்வாறு மனநல வைத்தியரிடமே அழைத்துச் சென்றனர்!

அங்கு கடமையாற்றிய பெண் உளநல வைத்தியரி டம் மனம் விட்டு பேசினேன். அவரும் என்னை ஏற்க வில்லை! "இவ்வாறான உணர்வியல் மாற்றுக் கதைகளை இந்த சிறிய வயதில் பேசுவதற்கு தகுதியில்லை..." என்று கூறி அவரும் என்னை வீட்டார் மத்தியில் வைத்து நிராகரித்து விட்டார். மாற்றமாக எனது வீட்டாருக்கு என்னை மாற்றக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகளே அவரால் கொடுக்கப்பட்டது. அது என் வாழ்க்கையையே திருப்பிப் போட்டது! அதன் பின் நான் பட்ட துயரங்களை வடிக்க வார்தைகள் போதாது.

நான் ஒரு இஸ்லாமியர் என்றபடியால் என்னைச் சூழ்ந்த சமூகக் கட்டமைப்பு மார்க்க விழுமியங்களால் மிகவும் கட்டுப்பாடுகளோடு பேணப்பட்டது.

என் பெண் தன்மைக்கு என் குடும்பம் உளநல வைத்தியருக்கு அடுத்த பரிகாரமாக, சரியான கருத்தியல் விளக்கத் தீர்வு எடுக்க மார்க்க அறிவுரைகளை வானொலி வாயிலாக கேட்கத் துவங்கினர். அப்போது இஸ்லாத்துக்குள் ஆயிரம் கலப்பும் பிரிப்பும் போட்டுக் கொண்டு சில கூட்டங்கள் இஸ்லாம் மார்க்க அறிவுரைகளை வானொலி FM களில் பரப்புரை செய்து கொண்டிருந்த காலம் அதில் சில இந்தியன் FM வேற! அவற்றுக்குள்ளும் ஒன்றுக்கொன்று போட்டி! அவை வானொலி வழி ஊடுருவி செவிகளில் வந்து ஊசலாடின!

ஓர்நாள் அந்த வெளிநாட்டு மார்க்க FM ஒன்றில் "திருநங்கைகளின் நிலை இஸ்லாத்தில் என்ன?" என்ற கேள்வி ஒருவரால் கேட்கப்பட்டது. அதற்கு பிற்போக்குச் சிந்தனைப் பரப்புரைகளை மார்க்கம் என்ற தொனியில் போதிக்கக்கூடிய இந்திய மார்க்க போதகர் ஒருவர் திருநர் பற்றிய அறிவு துளியுமற்ற நிலையில் திருநங்கையாக மாறுவதோ "ஹராம்" என்ற ஒரே வார்த்தைக்குள் கூறி விளக்கினார். அவர் கூறிய அந்த விளக்கக் கருத்து அன்று முதல் என்னுடைய குடும்பத்தாரது உளவியலில் துளைபோட்டுப் புகுந்து தூக்கிப்பிடிக்கப்பட்டது! (மார்க்க அறிஞர்களின் 'தெளிவுரைக் கருத்துக்கள்' என்பவை இஸ்லாமியர்களால் பெரிதும் வேண்டப்படுவனவாகும். அந்தக் கருத்துக்களுக்கு தனியனால் மாற்றுக் கருத்திட முடியாது. இந்த கருத்துக்களை மார்க்க அறிஞரும் கூட நுணுக்கமான ஆய்வுடனேயே வழங்க முடியும்...)

"திருநங்கை பெண்மை ஹராம்" என்ற அவரது பிற்போக்கு கருத்தியல் விளக்கம் இறை நம்பிக்கை கொண்ட இளகிய என் மனதை கவலையாக்கி கிழித்து சுயத்தில் என்னை முன்னோக்கிச் செல்ல விடாது தடுப்பிட்டுக்கொண்டது மாத்திரமன்றி, வீட்டுச் சூழலில் முழுவதும் என் பெண்மையை வெறுக்கச் செய்து இரட்டிப்பு எதிர்ப்பலைகளையும் உண்டாக்கியது.

இறை திருப்தி, பெற்றோரின் ஆசி, சர்ச்சைகளற்ற சுமூகமான சமூக வாழ்க்கை வேண்டுமென்ற என் 'மனப்பாங்கு' அன்றிலிருந்து இன்று வரை "இது ஒரு சொற் பமான உலக வாழ்க்கைதானே பரவாயில்லை, பொறுமைக்கு இறைவனிடம் சுவர்க்கத்தில் பலன் உண்டு....." என்ற மனநிலைக்குள் தள்ளப்பட்டவாறே பெண்மையையே அடக்கித் தியாகம் செய்து கொண்ட நீண்ட பொறுமையொன் றின் கீழ் ஆண் அடையாளம் காட்டக்கூடிய பெண்ணாகவே போலி வாழ்க்கை வாழ்கிறது...

நான் இங்கு ஒன்றை தயவாய் வேண்டுகிறேன் எம் போன்ற சில திருநர்களின் பெற்றோர் தன் பிள்ளை இப்படியுள்ளதே என்ற குழப்பகர மனநிலையோடு கல்வி மான்களிடம், அறிஞர்களிடமே அறிவுரை பெறலாமென்று உதவியை நாடிப் புறப்படுவர் அப்போது கல்விமான் களினதும், அறிஞர்களினதும் தார்மீக பொறுப்புணர் வுடனான சரியான பதிலுரைப்புகள் மிக மிக அவசியமான தாகும். அது அந்த திருநர் குழந்தைக்கும், பெற்றோருக்கும் மிகவும் காத்திரமானதாக அமையக்கூடிய சக்தியாகும். மாறாக உங்களுக்கு ஒரு விடயத்தில் புலமை குறைவெனில் அது தொடர்பாக விரிவாக கற்றறியுங்கள் அல்லது அதை கையிலும் கூட எடுக்காதீர்கள்!

அன்றைய வேகத்தோடும் இள ரத்த துடிப்போடும் இருந்த போதே இவ்வாறு எனது விருப்பம் போல முழுச் சுதந்திரமுள்ள பெண்ணாகியிருந்திருக்கலாமே... என்று இந்த பெண்ணை பார்க்கும் போது பாவப்பட்ட எனதுள்ளம் ஏங்கி பெருமூச்சிடுகிறது...

இழந்த காலங்கள் இனி வரப்போவதில்லை.

**- ரோஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்தா

"**ஹே** முக்தா உன்னோட ஃபோட்டோ அனுப்புடி பார்க்கிறதுக்கு"

"அழகே பொறாமைகொள்ளும் பேரழகு செம அழகிடி நீ"

"இன்னைக்கு நைட் பீஜ்ல சந்திக்கலாம் வாரீயா ப்லீஸ்? ரொம்ப நாளா நாம ஃபோன்லயே பேசிக்கிட்டு இருக்கிறோம். இன்னைக்கு சந்திக்கலாம் பீஜ்கு வாடி செல்வோம்"

"ஓகேடா வரன். ஷாப்பாஹ் 9 மணிக்கு வந்திடு. உனக்காக காத்திருப்பேன்"

தன் தோழனுக்கு வாட்ஸப்பில் தான் அனுப்பிக்கொள்ளும் புகைப்படங்களில் அழகாய் காட்சிப்பது போல தன்னை அலங்கரிக்க, சவுரி முடியால் மெருகூட்டி, துப்பட்டா அணிந்து உதட்டுச் சாயம், கண் மை, ஒப்பனை என முழு பெண்ணுருவாக அலங்கரித்துக்கொண்டு அன்றிரவு கடற்கரையில் ஒரு தேவதையென கடலிசையை ரசித்த வண்ணம் முக்தா கரீமின் வருகைக்காக இருளின் நடுவே காத்திருக்கிறாள்.



"அடே யாரது...!"

என ஒரு கும்பல் வருகிறது.

திடுக்கிட்டவள் அவர்களை பதற்றத்துடன் எழுந்து நின்று பார்க்கிறாள்.

"யாரம்மா நீ? இந்த நேரம் இங்க என்ன பன்னுறாய்??"

"ஏம்மா நீ எந்த ஊர்? இதுக்கு முதல் உன்னை பார்த்ததும் இல்லையே???"

"டேய் மச்சான் இந்த ஐட்டம் லுக்க பாருடா ஒரு மார்க்கமா இருக்கு?"

"ஆமாடா"

"உன் பேரென்னமா? நீ எந்த ஊர்???

"நான் பக்கத்து ஊர் பேரு முக்தா..."

என அவள் பதற்றக்குரலில் பேசுகிறாள்

"முக்தாவா?? யார்ர மகள் நீ???"

"நான் யார்ர மகள் என்கிறது உங்களுக்கு தேவலல்லாத விசயம். நீங்க வழி மறிக்காம போங்க!"

"என்னது போறயா? நீ இங்க என்னத்துக்காக வந்திருக்காய் என்கிற விசலம் எங்களுக்கு வேணும். இல்லன்னா பொலிஸ்ல உன்னை ஹேண்டௌட் பன்னுவோம். நாங்க இந்த ஊர் காவலர்கள்"

"அண்ணா நான் என்னோட பாய் ஃப்ரெண்ட் கரீமுக்காக வெய்ட் பன்னிட்டு இருக்கிறன். அவனும் நானும் ஆறு மாசமா காதலிக்கிறோம்..."

"கரீமா?? அதோ அங்க இருக்காரு. டேய் மச்சான் உன்னோட முக்தா வந்திருக்கா ஓடி வாடோ..."

என அந்த கும்பலில் ஒருவன் ஒரு குரல் எழுப்ப மறைந்திருந்த கட்டிடத்தின் பின்னால் இருந்து அவன் வெளிப்படவே....

"கரீம் இவங்கெல்லாம் யாரு? இவங்கள உனக்கு தெரியுமா???"

"இவங்களையும் எனக்கு தெரியும், உன்னையும் எனக்கு தெரியும்..."

"நீ உன்னோட உண்மையான குரல்ல பேசு!!! நீ ஒரு ஆம்பள! உன்னோட நிஜமான பெயர் முக்தாஸ்!!!! பொம்பள போல நடிக்கிற பொன்ஸ் நீ!! நாங்க உன்னை விட்டு பிடிக்கிறதுக்காகத்தான் இந்த நாடகமே செட் பன்னோம். இன்றைக்கு நீயா வந்து மாட்டிக்கிட்டய்!!!"

"டேய் நீங்கெல்லாம் எங்க இருந்துடா வாரீங்க?"

"அதென்னடா டீசேர்ட்குள்ள ரெண்டு பக்கமும் இருக்கிற?? உடுப்பை கழட்டுடா பார்க்க? எல்லாரும் ஆம்பளதான் இங்க இருக்கோம் கழட்டுடா மரியாதையா!!!"

பயமும் பதட்டமும் சூழ்ந்த அந்த இடத்தில் அத்தனை ஆண்கள் மத்தியிலும் அவள் ஆடையை கழட்டுகிறாள்! அப்போது அவள் உள்ளம் படும்பாடை இறைவனும் அவள் போன்ற பெண்மையை உணரு வோருமே புரிந்துணர்வர்!!!!

ஆடையை அகற்றுகிறாள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஷா எங்கடா இருந்து இந்த பொம்பளைங்க யூஸ் பன்ற உள்ளாடை ஐட்டம்ஸ் எல்லாம் வாங்கினய் நீ?? எப்படி இருக்கு பார்த்தியா மச்சான்!"

"அவரு வாட்ஸப்ல அனுப்பின ஃபோட்டோ பார்த்தியன்னா நீயே மயங்கிடுவடா மச்சான் இத பாருடாவ்"

"வாவ் செமயா இருக்கேடா நீ இந்த ஃபோட்டோல! இது நீயாடா? உனக்கு இதெல்லாம் தேவையாடா ச்சேக்!"

"மச்சான் இதையெல்லாம் லைவ் வீடியோவாக ஃபேஸ்புக்ல பதிவு செய்யடா...

"பெண்வேடம் அணிந்த ஆண் ஒருவர் சிக்கினார்னு" கேப்ஷன் எழுதி போடுடா மச்சான். இதுட லச்சனத்த எல்லாரும் பார்த்து சிரிக்கட்டும்!!"

"உன்னோட வீட்டாக்களோட ஃபோன் நம்பர் சொல்லு அவங்கள கூப்பிட்டு உன்னை ஒப்படைக்கிறம்!"

ஏமாற்றம், மனவேதனை, கவலை, பயம், பதற்றம் தோய்ந்த அவள் உறவுக்காரர்கள் வந்த பின்னர் வீடு சென்றுவிடுகிறாள்.

வீட்டில் அவளுக்கெதிரான வன்முறைகள் நடக்கின்றன...

மூன்று நாட்கள் ஓர் அறைக்குள் அடைத்து வைத்து உயிர் போகாத குறையாக சித்திரவதைகள்!!!

பொறுக்க முடியாத அவள் ஜன்னலை உடைத்துக் கொண்டு தப்பியோடுகிறாள்.

அவளை ஆதரிக்க அவளுடைய நண்பிகள் காத்திருந்தனர்.

முக்தா வசித்த ஊரில் அவள் பெண்மைக்கு ஏற்பட்ட அவமானம் அவளை பெரிதும் காயப்படுத்தியது. 'பெண்' என்றால் சமூகம் இட்ட கட்டமைப்புக்குள் அதன் விதிகளை எந்த நோக்குதலிலும் பூரணப்படுத்தி இருந்தால் மாத்திரமே சமூகக் காவலர்கள் முதற்கொண்டு அனைவ ராலும் 'பெண்' மற்றும் 'பெண்மை' ஆகியவற்றுக்கான அடையாளமானது அங்கீகரிக்கப்படும் என்பதனை கவலையும் கோபமுமாய் உணர்கிறாள் முக்தா!!!

மனவெழுச்சிகளால் வைராக்கியம் கொண்ட அவள் முறையாக ஹோர்மோன் சிகிச்சை, ஆவண மாற்றம் மற்றும் அறுவை சிகிச்சை என கடந்து தனது பிறப்பின் பாலினத்தை மாற்றி உருவை முழுமையான பெண்ணாக செதுக்கிவிடுகிறாள்.

மீண்டும் அவள் பிறந்த அதே ஊருக்கும், அவமான பட்ட அதே கடற்கரையோரத்துக்கும், ஓர் இரவில் சென்றமர்கிறாள்...!!!

கடலிசையை ரசித்த வண்ணம் தான் இவ்விடத்தில் அன்று அடைந்த அவமானத்தை எண்ணி கண்ணீர் விடும் போது,

அதே கும்பல் மீண்டும் வருகிறது....!

கரீம் முக்தாவை மீண்டும் காண்கிறான்!

"ஹேய் அவன்தானே நீ?"

"ஆமா உன்னை காணோம்னு, எல்லாரும் தேடினாங்களே? நீ அப்ப சாகல்லையா???"

"நீசாகாட்டியும், உன்னோட கொழுப்பு அடங்கல்லடா பொன்ஸ்! திரும்பவும் பொட்ட வேசம் போட்டு பீஜ்ல எவனுக்காக காத்துக்கு கிடக்கய்??? பிஸ்னஸ் போகு தில்லையோ? ஆமா இன்னைக்கும் உடுப்புக்குள்ள பொம்பளைங்க உள்ளாடைய போட்டு இருக்கியா? சந்தேகமாவே இருக்கு! டேய் மச்சான் புடிங்கடா கழட்டி பார்த்திடுவோம்!"

"ஹேல்ப் ஹேல்ப்...."என்று முக்தா கத்துகிறாள்...

"என்னது ஹேல்ப்பா?? இங்க உன்னைப் போல பொட்டைக்கு உதவ எவனும் வரமாட்டான்! அப்படியே வந்தாலும் என்ன நடக்கும்னு உனக்கே தெரியும். அப்புறோம் என்ன ஹேல்ப்புடா???"

முக்தாவின் சத்தம் உயர்ந்து காற்றில் கலக்க, அவளுடன் பயணம் வந்திருந்த தோழியர் கடைகளில் பொருட்கள் வாங்குவதை நிறுத்திவிட்டு ஓடோடி வந்து இவர்களை உதைக்கத் துவங்கலானர்கள்.

திருநங்கை தோழியர் இந்த பாதகர்களை காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்று ஒப்படைத்துவிடுகிறார்கள்.

பாலியல் துன்புறுத்தல் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறை குற்றத்தின் கீழ் முக்தா அவர்களுக்கெதிராக வழக்கு தொடுத்துவிடுகிறாள்.

**- ரோஸ்**

ஆசிரியை,
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,

அம்மணி, தங்களது அமைப்பால் வெளியிடப்பட்ட பிரசுரம் கிடைக்கப்பெற்றது.

மிக்க நன்றியும் மகிழ்ச்சியும். பெண் சஞ்சிகையின் ஆக்க பூர்வமான கருத்துக்களும் அளப்பெரிய சேவைகளும் தொடர்வதற்கு மேலும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். பெண், சமூக மாற்றத்திற்காக உழைக்கும் பெண்களின் பலம் "பெண் சஞ்சிகை". மேலும் ஆக்க பூர்வமான ஆக்கங்களால் பலம் பெறட்டும்.


"பெண் அவள் மண்ணுக்கு கோலம் இடுவாள்
விண்ணுக்கு பாலமும் இடுவாள்.
உணவு சமைக்க தெரிந்திடுவாள்
உழவு தொழிலும் செய்திடுவாள்"

அன்புடன்
சிவபாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் பலஸ்தீன்



மேன்மைமிகு
மேன்மைமிகு தேசமே
இருள் மிகுந்த பெருந்துயர் இரவில்
திரிகைக்கல் சுழலலாம்
மேலும் சுழலலாம்
ஆயின்
உன் ஒளியை அழித்தொழிப்பதற்கு
அவற்றால் இயலா
அவை மிகச் சிறியன.

ஓ பெரிய தேசமே
ஓ ஆழமான காயமே
தனிப்பெரும் காதலே
நசுக்கப்பட்ட உன் நம்பிக்கைகளில் இருந்து
ஒடுக்கப்பட்ட உன் வளர்ச்சியில் இருந்து
திருடப்பட்ட உன் முறுவலில் இருந்து
திருடப்பட்ட
உன் குழந்தைகளின் சிரிப்பில் இருந்து
சிதைவுகளில் இருந்து
சித்திரவதையில் இருந்து
இரத்தம் உறைந்த சுவர்களில் இருந்து
வாழ்வினதும் மரணத்தினதும்
நடுக்கங்களில் இருந்து
புதிய வாழ்வொன்று கிளர்தெழும்

அது எழவே செய்யும்.

**- ஃபத்வாதுக்கான்**
**Fadwa Tuqan**

# எதிர்த்து நில்


அவர்கள்
ஒரு பேப்பரையும் பேனையையும்
என் மூக்கெதிரே விசுக்கி எறிந்தனர்
என் வீட்டின் திறப்பை
என் கையில் திணித்தனர்

என்னைக் கொண்டு
பேப்பரை மாசுபடுத்த அவர்கள் விரும்பினர்
பேப்பர் சொன்னது : எதிர்த்து நில்
என்னைக் கொண்டு
பேனையை அவமானப்படுத்த
அவர்கள் விரும்பினர்
பேனை சொன்னது : எதிர்த்து நில்

சுவரில் ஒரு தட்டு
தறிக்கப்பட்ட ஒரு கையில் இருந்து
சுவரின் குறுக்காக வந்த ஒரு செய்தி
குறிப்பால் உணர்த்தியது : எதிர்த்து நில்

சித்திரவதை அறையின் கூரைமீது
சொட்டு சொட்டாய் விழும்
ஒவ்வொரு மழைத்துளியும் அலறியது :
எதிர்த்து நில்.

**- மூயின் பசைசோ**
**Mueen Bseiso**



நன்றி : **"பலஸ்தீனக் கவிதைகள்"** - 30 கவிஞர்களின் 109 கவிதைகள்
**தேர்வும் தமிழாக்கமும் : எம். ஏ. நுஃமான்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

இல. 4/1, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
No. 4/1, Thomas Lane,
Batticaloa,
Sri Lanka.

## வருடாந்த சந்தா - பெண்

**ஐரோப்பா, வட அமெரிக்கா,**
**அவுஸ்திரேலியா**
**US$ - 8**
**இந்தியா**
**ரூபா 500.00**
**இலங்கை**
**ரூபா 200.00**

**சந்தா விண்ணப்பம் 20**..............
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்**

பெயர் : ..........................................................................................................

விலாசம் : ..........................................................................................................


திகதி : ..........................................................................................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தி பேரில் அனுப்பி வைக்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Wanasinghe Printers, Batticaloa. 065-2227170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org